# இலக்கிய வளர்ச்சி

புலவர். கா. கோவிந்தன்.

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இலக்கிய வளர்ச்சி

புலவர்

**கா. கோவிந்தன்,** எம். ஏ.,

*திருவத்திபுரம்.*

**மலர் நிலையம்**

*133. பிராட்வே... சென்னை-1*

முதற் பதிப்பு : டிசம்பர் '55
இரண்டாம் பதிப்பு : ஜூன் '58
மூன்றும் பதிப்பு : ஜுலை '59

[ COPYRIGHTS RESERVED ]

Published by
MALAR NILAYAM
133, Broadway,
MADRAS-1.

ரமணி பிரிண்டர்ஸ், சென்னை—1.

# மு ன் னு ரை

இலக்கியம், மக்கள் எண்ணத்திற்கு உருவளிப்பது; ஆகவே, ஒரு நாட்டு இலக்கியம், அந்நாட்டு மக்களின் மனநிலைக்கேற்பவே அமையும்: ஒரு நாட்டின் மக்கள், எப்போதும் ஒரு நிலையினராதல் இல்லை; ஒரு காலத்தில் உயர்நிலை பெற்று வாழ்ந்தவர், ஒரு காலத்தில் தாழ்நிலை உற்று வாழ் விழப்பர்; ஒரு காலத்தில் தாழ்ந்திருந்தவர், ஒரு காலத்தே உயர்நிலை பெறுதலும் உண்டு. மக்களின் இவ்வுயர்வு தாழ்வுகளுக்கேற்பவே, அவர் இலக்கியமும் உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படுமாதலின் உயர்ந்த இலக்கியம் தோன்றிய நாட்டில், ஒரு காலத்தில் இழிந்த இலக்கியங்கள் தோன்றுதலும், தாழ்ந்த இலக்கியங்களையே கண்ட ஒரு நாட்டில் உயர்ந்த இலக்கியங்கள் தோன்றி விடுதலும் உண்டு.

ஒரு நாட்டின் மக்கள் வாழ்க்கை, அந்நாட்டு அரசியலோடு தொடர்புடைத்து; நாட்டில் நல்லரசு நிலவின், நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ்வர்; அவ்வரசு, நெறி பிறழின், மக்களும் அல்லற்பட்டு அழுவர். ஆகவே, இலக்கியம், அரசியலோடும் தொடர்புடைத்தாம். அரசியல் வாழ்வு, மக்கள் மனவளத்திற்குக் காரணமாம்; மக்கள் மனவளம், இலக்கியத் தோற்றத்திற்கு காரணமாம்.

தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்களின் பரப்பும் பான்மையும் பலப்பலவாம். ஒரு மொழியில் தோன்றிய

இலக்கியங்கள் இவ்வாறு வேறுபடுதற்காம் காரணத்தை, அவ்விலக்கியங்கள் தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்கட் பண்பாட்டினை ஒட்டியே அறிதல் இயலும். அம்முறையில் தமிழ் நாட்டில் நடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக உண்டான அரசியல் மாறுபாடுகளையும், அவ்வரசியல் மாறுபாட்டிற்கேற்ப, மக்கள் மனநிலையில் உண்டான மாறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றிய இலக்கிய வகைகளை வரிசையாக வகுத்துரைப்பது இந்நூல்.

தமிழிலக்கியம் ஒவ்வொன்றைப்பற்றியும், அவ்விலக்கியத்தை ஆக்கித் தந்த ஆசிரியர் ஒவ்வொருவரைப்பற்றியும் அவர் தகுதி, தகுதியின்மைகளை ஆராய்ந்து கூறும் நூல்கள், தமிழில் பல உள. இவ்வாறு மக்கள் இயல்பிற்கேற்ப, இலக்கியம் வளரும் வகையினை வகுத்துரைக்கும் இம்முறை, ஒரு புது முயற்சி. இம்முறையில் ஒரு நூல் வெளியாதல் வேண்டும் என விரும்பி, அதை ஆக்கித் தரும் பணியினை என்பால் ஒப்படைத்த மலர் நிலையத்தார்க்கு என் நன்றி.

**கா. கோவிந்தன்.**

# — உள்ளுறை —


| | | | |
|---|---|---|---|
| 1. | தோற்றுவாய் | .... | 1 |
| 2. | தோற்றமும் தொன்மையும் | .... | 11 |
| 3. | சங்க இலக்கியம் | .... | 35 |
| 4. | சமய இலக்கியங்கள் | .... | 68 |
| 5. | புராண இலக்கியங்கள் | .... | 91 |
| 6. | புதிய இலக்கியங்கள் | .... | 96 |
| 7. | நாடக இலக்கியங்கள் | .... | 107 |
| 8. | உரைநடை இலக்கியங்கள் | .... | 112 |

# இலக்கிய வளர்ச்சி

## 1. தோற்றுவாய்

ஒரு மொழியில் எத்தனையோ நூல்கள் எழுதப் பெறுகின்றன. அவ்வாறு எழுதப் பெறும் நூல்கள் எல்லாம் இலக்கியங்கள் எனப் படா. நூல்கள், உடல் நூல், உயிர் நூல், உள நூல், நில நூல், வான நூல், மர நூல், விலங்கு நூல், பறவை நூல், சமூக நூல், சமய நூல், பொருள் நூல் என எண்ணற்ற வகைப் படும். கூறிய தலைப்புக்கள் ஒவ்வொன்றின் கீழும் எத்தனையோ நூல்கள் எழுதப்பெற்றுள்ளன. அந் நூல்களின் பரப்பும் பான்மையும், அவை அப்பொருள்களை ஆராய்ந்துணர்த்தும் வகையும் வனப்பும், அந்நூல்கள்

எம்மொழியில் எழுதப் பெற்றுளவோ, அம்மொழி வழங்கும் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கும். அப் பொருள் பற்றிய ஆராய்ச்சிக்கண், அம்மக்கள் பெற் றிருக்கும் அறிவுத் திட்பத்திற்கும் ஏற்ப அமையும். அந் நூல்கள் எல்லாம், தாம் கூறப் புகுந்த பொருள் பற்றிக் கூறிச் செல்வனவே அல்லால், இலக்கியச் சிறப் புடையன ஆகா.

இலக்கியம், மக்களின் பண்பாட்டினை உணர்த்த எழுவது. நாகரிகம் வேறு; பண்பாடு வேறு. புற வாழ்க்கையின் வனப்பினை வகுத்துணர்த்துவது நாகரிகம்; அகவாழ்க்கையின் வனப்பினை வகுத்துணர்த்துவது பண் பாடு. எழு நிலை மாட வாழ்வு; எண்ணிய இடங் கட்கு எண்ணியபோதே விரைந்து செல்லவல்ல வகை வகையான ஊர்திகள்; நல்ல ஆடை அணி; அறுசுவை உணவு ஆக இவை நாகரிகத்தின் நல்ல அறிகுறிகள். இவற்றைக் குறைவறப் பெற்றுள்ளமையினாலேயே ஒருவர் பண்பாடறிந்த பெரியார் எனப் போற்றப் படார். நாட்டு மக்களின் நலிவு கண்டு, கண்ணீர் விட்டுக் கலங்கி, அவர் துயர் துடைக்கத் துடிக்கும் தூய உள்ளம் உடையாரே பண்பாடறிந்த பெரியாராவர். பழி வாங்க எண்ணுப் பண்புடையார் பண்பாடறிந்தவ ராவர்; இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்புடையார் பண்பாடறிந்தவராவர்; அன்பும், அருளும், அறம்அறி உள்ளமும் உடையார் பண்பாடறிந்தவ ராவர். பழியஞ்சும் பக்குவம் உடையார் பண்பாட றிந்தவராவர். இத்தகு பெருவாழ்விற்குச் செல்வ வாழ்வு வேண்டுவதில்லை. செல்வம் பெருதாரும் சீரிய

பண்பாடு உடையராதல் கூடும், உண்மையைக் கூற வேண்டுமாயின், செல்வம் உற்றாரினும், அஃது அற்றாரிடத்திலேயே பண்பாடு பொருந்தியிருக்கும். வள்ளுவரும் பிறரும், பண்பாடே, நாகரிகம் என்ற சொல்லால், குறிப்பிடப்படுதல் வேண்டும்; நாகரிகம் என்ற அச் சொல் செல்வ வாழ்வைக் குறித்தல் கூடாது என்று கூறி நாகரிகம் என்ற சொல்லிற்குப் புதுப் பொருள் காண்டல் பின் வரும் அவர் உரைகளான் உணர்த்தப்பெறும்.

"பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்."

—குறள்-580.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்."

—நற்றிணை-355.

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வமன்று தன்செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வமென்பதுவே."

—நற்றிணை-210.

ஒரு மொழி வழங்கும் மக்களின் பண்பாட்டினை, அம்மொழியில் உள்ள இலக்கியங்களின் எண்ணிக்கையினைக் கொண்டு மதிப்பிடல் கூடாது. அவ்விலக்கியங்களின் இயல்பை உணர்ந்தே மதிப்பிடல் வேண்டும். இலக்கியச் செல்வம் எண்ணால் பெரிதாதல், ஒரு மொழியாளர்க்குப் பெருமை ஆகாது. அஃது இயல்பால் பெரிதாதலே, அவர்க்குப் பெருமையாம். இலக்கிய நூல்கள் இழிந்த பண்பாட்டினவாயின், அவை எண்ணற்றுக் கிடைப்ப

தால், அவ்விலக்கியம் உடையார்க்குப் புகழ் உண்டாகாது ; மாருகப் பழியே உண்டாம். அத்தகைய இலக்கிய நூல்களைப் பெற்றதால், பெற்ற பழியினும், பெருமையால் பெறும் புகழே பெரிதாம். ஆகவே, இலக்கிய இயல் புணர்ந்தார், இலக்கிய நூல்கள் எண்ணற்றனவாதல் வேண்டும் என எண்ணுர் ; அவை, இயல்பால் சிறந்தன வாதல் வேண்டும் என்றே எண்ணுவர். இயல்பால் சிறந்தனவாதலோடு எண்ணுலும் சிறந்ததாயின் நனிமிக நன்று ; பொன்மலர் நாற்றம் உடைத்து எனப் போற்றிப் புகழப் பெறும்.

புல்லிதழ் பூவிற்கும் உண்டு என்ப. முழுதும் குற்றமே நிறைந்தவரோ, முழுதும் குணமே நிறைந்தவரோ உலகில் ஒருவரும் இலர். குற்றமும் குணமும் ஒருங்கே உடையவர் மக்கள். தனி மனிதன் இயல்பே இதுவாயின், பல்வேறு மனப் பண்பு கொண்ட மக்கள் பலர் கூடி வாழும் மக்கட் சமுதாயத்தில், முழுதும் குற்றத்தையோ, முழுதும் குணத்தையோ எதிர்பார்த்தல் இயலாது. குற்றத்தை அடுத்துக் குணமும், குணத்தை அடுத்துக் குற்றமும் கலந்தே காணப்படும், ஆதலினன்ரே, " குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் " என்ருர், வள்ளுவனர். உலகின் இயல்பு இது.

இத்தகைய உலகியலே அடிப்படையாகக்கொண்டு இலக்கியம் ஆக்குவார், உயர்ந்த பண்பாடுடையவராவர். உயர்ந்த பண்பாடுடையவர், உலகில் யாண்டும் குணத்தையே காண்பர் ; எவ்வுயிரிடத்தும் குணத்தையே காண்பர். குற்றம் அவர் கண்களுக்குப் புலனுகா ; அத்தகையார்,

ஆங்காங்கே காணும் உயர்ந்த பண்பாடுகளையெல்லாம் ஓரிடத்தே கொணர்ந்து காட்டுவர். அவர் ஆசையெல்லாம், எல்லோரும் இன்புற்றிருத்தல் வேண்டும்; அதற்கு வழி எல்லோரும் நல்லோராதல் வேண்டும் என்பதே. அதனால், அவர்கள் நல்லனவும் தீயனவும் கலந்து காணும் உலக நிலையை உள்ளவாறே எடுத்துக் கூறுது, அவற்றுள் நல்லன வற்றை மட்டும் தொகுத்து, உலக நிலை இவ்வாறு இருத்தல் வேண்டும் எனக் காட்டியுள்ளனர்.

எவ்வழி நோக்கினும் நல்லோராய் வாழ்தல் உலகில் இயலாது. இயலாது ஆயினும், அவ்வாறு இயலுவதே நன்று. ஆதலின், எல்லா வகையாலும் நல்லோராய் வாழ்ந்தார் இலராகவும், அவ்வாறு வாழ்ந்தார் ஒருவர் உளராகக் கொண்டு, புலவர்கள் பாடியுள்ளனர். தமிழில், அகத்திணை இலக்கியங்கட்குரிய தலைவரைத் தேர்ந்தெடுத்த ஆசிரியர்கள், ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒருவனையும், ஒருத்தியையுமே கொண்டுள்ளனர். அகத்திணை இலக்கியத்தின் இயல்பு கூறவந்த உரை யாசிரியர், "சுவைபட வருவனவெல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல், அஃதாவது, செல்வத் தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினுனும் ஒத்தார் இருவராய்த் தமரின் நீங்கித் தனியிடத்து எதிர்ப் பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போருமின்றி அடுப் போருமின்றி வேட்கை மிகுதியாற் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி, இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும், பிறவும் இந்நிகரன வாகிச் சுவைபட வருவனவெல்லாம் ஒருங்கு வந்தனவாகக்

கூறுதல் " என்றும், நச்சினார்க்கினியர், " எவ்விடத்தும், எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்த்தல் முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல யாதானும் ஒரோவழி ஒரு சாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்தல் " என்றும் கூறுவது அறிக.

சங்க காலத்தும், அதற்கு முற்பட்ட காலத்தும், பல்லாற்றானும் சிறந்தாராய் வாழ்ந்தார் பலரிருப்பவும், அவர் வரலாற்றினைப் பெயர் கூறிப் பாடாமைக்குக் காரணம், " அரிய கற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால், இன்மை அரிதே வெளிறு." என்ற நியதிப்படி, அவர் மாட்டும் சில குறைபாடுகள் உளவாம். குறைபாடு உடையான் ஒருவனைத் தலைவனாக்கி இலக்கியம் இயற்றின், அவ்விலக்கியத்தைக் கற்பாருள் சிலர், அவன் மாட்டுக் காணலாம் தவறு கண்டு அவ்விலக்கியத்தையே பழிப்பர்; வேறு சிலர் புலவரால் பாராட்டப்பெறும் அத்தலைவன்பால் காணலாம் அத்தவறு தவறன்று: அது தவறாயின், அவனைப் புலவர் பாராட்டியிரார்; புலவர் பாராட்டியுள்ளனர்; ஆகவே அது தவறன்று. ஆதலின், அதனை யாம் மேற்கொள்வதிலும் தவறில்லை எனக் கொண்டு தவறு புரிதலும் செய்வர் என்ற இவ்விரு பேரச்சம் காரணமாகவே பழந்தமிழ் இலக்கியங்கள் பெயர் கூறிப் பாராட்டவில்லை. பாராட்டவில்லை என்பது மட்டுமன்று; மக்கள் ஒழுகலாற்றிற்கு உயர்ந்த வழிகாட்டியாக வரும் அகத்துறைப் பாடல்களில், ஒருவர்க்குரிய வரலாற்றினை விதந்து கூறுவது

கூடாது என இலக்கணமும் அமைத்துக் காத்தனர். " மக்கள் நுதலிய அகனைந்திணையும், சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறுஅர் " என்பது தொல்காப்பியர் கூறும் விதி. இவ்வாறு புலவன் ஒருவன், உலகில் நல்லன என்று கண்ட ஒழுகலாறுகள் அனைத்தையும் ஒருங்கே கொணர்ந்து உயிரேற்றிக் கூறுவதே உண்மை இலக்கியமாம்.

மக்கள், கற்கால மக்கள், வரலாற்றுக் காலத்திற்கு அப்பாற்பட்ட மக்கள், வரலாற்றுக் கால மக்கள், விஞ் ஞானக் கால மக்கள், அணுவாற்றல் கால மக்கள் என வாழ்ந்த காலத்தாலும், காட்டு மக்கள், நாட்டு மக்கள், பனி நாட்டு மக்கள், மலை நாட்டு மக்கள், பாலைவன மக்கள், சிற்றூர் மக்கள், பேரூர் மக்கள் என வாழும் இடத்தாலும், முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை, அரசன், அவன் குடி, செல்வன், வறியன், உயர் குடிப் பிறப்பாளன், தாழ்குடிப் பிறப்பாளன், வெள்ளையன், கறுப்பன், ஆண், பெண் எனச் செல்வம், பிறப்பு, நிறம் முதலியவற்றாலும் பலதிறப்படுவர். இவ்வாறு பல்லாற்றானும் வேறுபட்டு விளங்கும் மக்களிடையேயும், ஒருமைப்பாடு மிக்க அடிப் படைப் பண்பாடுகள் சில உள. ஆணும் பெண்ணும் கலந்து வாழ்தல், அன்பும், அருளும் அறமும் உடைமை, பொன், பொருள், புகழ்மீது ஆசை என்பன போலும் ஒரு சில பண்பாடுகளில் அவரிடையே ஒற்றுமை நிலவக் காணலாம்.

மக்கள் இனம் அனைத்திற்கும் ஒத்த அப்பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுவனவே உண்மை இலக் கியங்கள் எனப் போற்றப்படும். அத்தகைய இலக்கியங்

கள். எல்லா மக்களுக்கும், எந்நாட்டு மக்களுக்கும், எந்நிலை மக்களுக்கும் ஏற்புடைத்தாகும். அவ்வாறு, அப்பொதுப் பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியங்களே என்றும், எங்கும் இறவாது நிலைத்து வாழும். அவ்வாறின்றி, அவ்வக்கால மக்களின், அந்த அந்த நாட்டு மக்களின், ஆசாபாசங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த நூல்கள் இலக்கியங்களாகா ; அவை தோன்றிய அந்தக் காலத்தில் அந்த நாட்டில், அவை தோன்றுவதற்குக் காரணமாகிய சூழ்நிலை மாறியவுடனே அவை அழிந்துபோம். தமிழில், இலக்கியங்கள் என்று இன்றும் போற்றப்படும் சங்க நூல்கள், அவ்வாறு எழுந்தன ஆகா. மக்களின் பொதுப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன ஆதலின், அவை இக்காலத்தவராலும், எந்நாட்டு மக்களாலும் போற்றப்படுகின்றன.

“ ஆரணம்காண் என்பர் அந்தணர் ; யோகியர் ஆகமத்தின்
காரணம்காண் என்பர் ; காமுகர் காமநன்னூலது என்பர்;
ஏரணம்காண் என்பர்எண்ணர் ; எழுத்து என்பர் இன்புல [வோர்;
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே ”

எனப் பாராட்டுமாறு, பல்சுவை உடையார்க்கும் விருந்தளிக்கும் பண்புடைய திருக்கோவையார் போல், எக்கால மக்கட்கும், எந்நாட்டு மக்கட்கும், எந்நிலை மக்கட்கும் இன்பம் ஊட்டும் உயர்ந்த பண்பாடுகொண்டு தோன்றுவதே உண்மை இலக்கியமாம்.

மக்கள் தங்கள் ஆசாபாசங்களுக்கு ஆக்கம் தரும் பொருள்களிடத்து மட்டுமே ஆர்வம் காட்டுவர். தங்கள்

ஆசாபாசங்களுக்கு ஆக்கம் தருவனபால் பேரன்பு காட்டும் அவர்கள், அவற்றிற்கு ஆக்கம் தாராதனபால் வெறுப்பே கொள்வர். அதனுல், முன்னவற்றைப் போற்றுவதும், பின்னவற்றைப் புறக்கணிப்பதும் செய்வர். இந்தப் பண்பு எக்கால மக்களுக்கும் எந்நாட்டு மக்களுக்கும் ஏற்புடைய பண்பாம்.

இவ்வாறு தங்கள் ஆசாபாசங்களுக்கு ஆக்கம் அளிப்பனபால் விருப்பும், அது தாராதனவற்றின்பால் வெறுப்பும் கொள்வது மக்கள் அனைவர்க்கும் ஒத்ததேயாயினும், அவர்களுக்கு ஆசாபாசம் அளிக்கும் அப்பொருள்கள், எக்காலத்தும் ஒத்த இயல்புடையன ஆகா; ஒரு காலத்தே வாழ்ந்த மக்களுக்கு விருப்பம் உடையவாய் விளங்கிய ஒரு பொருள், பிறிதொரு காலத்தே வாழ்ந்த மக்களுக்கு விருப்பம் தருவதில்லை. ஒரு காலத்தே விரும்பி மேற்கொள்ளப்பட்ட ஒன்று, பிறிதொரு காலத்தே வெறுக்கப் பெறும். ஒரு காலத்தே வெறுத்து ஒதுக்கப் பெறும் ஒன்று, பிறிதொரு காலத்தே விரும்பித் தழுவப் பெறும். ஒரு காலத்தில் வாழும் மக்களுள்ளம், ஒரு சிலர்க்கு விருப்பம் தரும் பொருள் ஏனையோர்க்கு விருப்பம் தருவதில்லை. ஒருவர் விரும்புவதை மற்ருெருவர் வெறுப்பர் ஒருவர் வெறுப்பதை மற்ருெருவர் விரும்புவர். மக்களின் இயல்பு இது.

மக்கள் காட்டும் விருப்பு வெறுப்பிற்கேற்பவே, ஒரு பொருள் வாழ்தலும், மறைதலும் நிகழும். இந்த இயல்பு இலக்கியங்களுக்கு மட்டும் விலக்காகாது. ஆனுலும், ஒரு சில இலக்கியங்கள், இத்தகைய உலகைத் தாண்டிப் பல்

லாயிரம் ஆண்டுகள் கழித்தும், பல்வேறு மனப் பண்பு கொண்ட பல கோடி மக்களிடையேயும் வாழ்கின்றன. அதைப் போலவே, பல்வேறு நாடுகளில், பல்வேறு இனத் தாராலும் போற்றப்படும் இலக்கியங்களும் உள. காரணம் பல்வேறு காலங்களில், பல்வேறு நாடுகளில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்களின் பல்வேறு ஆசாபாசங் களையும் நிறைவேற்றித் தரும் அச் சிறப்பியல்பு அவற்றின் பால் இருப்பதேயாகும்.

ஆகவே, பாடிய புலவன் மறையினும், பாடத் துணை புரிந்த புரலவன் மறையினும், தான் மட்டும் மறையாது நின்று மாண்புறும் வண்ணம், என்றும் அழியா, மக்களின் ஆசாபாசங்களை அடிப்படையாகக் கொண்டு எழுவனவே உயர்ந்த உண்மையான இலக்கியமாம் எனக் கொள்க.

# 2. தோற்றமும் தொன்மையும்

உலகில் வாழும் உயிரினங்கள் அனைத்தும் ஒன்று கூடி வாழும் இயல்புடையவே எனினும், ஒன்று கூடி வாழும் அவ்வியல்பு, அவ்வெல்லா உயிரினங்களைக் காட்டிலும், மக்கள் உயிருக்கே மிக மிக இன்றியமையாததாம். மக்களின் தேவை, மற்ற உயிர்களின் தேவையைக் காட்டிலும் மிகுதியாம். இயல்பாகக் கிடைத்த உணவை உண்பது, ஏற்ற இடத்தில் உறங்குவது என்ற அம்மட்டோடு, மக்கள் அல்லாப் பிற உயிர்களின் வாழ்க்கை முடிந்து விடுகிறது. தமக்கு வேண்டும் அவ்வுணவு உறையுள்களையும், அவை முயன்று தேடுவதில்லை. மேலும், ஐம்புல இன்பங்களை ஆரத் துய்க்கும் ஆசையும் அவற்றிற்கு இல்லை. ஆனால், மக்கள் இனத்தின் இயல்பு அவ்வாறு அமையவில்லை. அவர்கள் ஆசைக்கு ஓர் அளவு காணல் ஆகாது. ஐம்புலன்களுள், ஒவ்வொன்றும் எண்ணற்ற ஆசைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்றன. அதனால் மக்களின் தேவை, மற்ற உயிரினங்களின் தேவையைக் காட்டிலும் மிகுதியாக உள்ளன.

தேவை மிக்க மக்களுள், ஒருவர், தமக்குத் தேவைப் படும் எல்லாப் பொருள்களையும் தாமே ஆக்கிக்கொள்ளுதல் இயலாது. தமக்குத் தேவையாகும் பொருள்கள் எல்லாவற்றையும் தாமே ஆக்கிக்கொள்ளுதல் இயலாது. தமக்

குத் தேவையாகும் பொருள்கள் எல்லாவற்றையும் தாமே ஆக்கிக்கொள்ளவல்ல அறிவு ஆற்றல்களைக் குறைவறப் பெற்றவர், உலகத்தில் எவரும் இலர். ஒருவர் தேவையைக் காட்டிலும், அவர் அறிவும் ஆற்றலும் குறைபாடுடையவே. எல்லாம் வல்லராதல் மக்கட்கு இயலாது. ஒருவர் ஒரு துறையில் வல்லராகப் பிறரொருவர் பிறிதொரு துறையில் வல்லராதலே உலகியல். உழவுத் தொழில் வல்லவன், உடைத் தொழிலிலும் ஊரான் தொழிலிலும் வல்லனாகான்; உடைத்தொழில் வல்லவன், உழவு முதலாம் பிற தொழில்களில் வல்லனாகான்; வணிகத் தொழில் வல்லவன் அணி ஆக்க அறியான்; அணி ஆக்க அறிந்தான், வணிகத் தொழிலில் வல்லனாதல் இலன்.

தேவை பெரிதாகவும், அதைத் தேடித் தரும் ஆற்றல் குறைவாகவும் அமையப் பெற்ற மக்கள், தம்மால் ஆக்கிக் கொள்ள இயலாத ஒரு பொருளை, அதை ஆக்கித் தரவல்ல ஆற்றல் உடையார் துணைகொண்டு அடைவதும், தம்மால் ஆக்கித்தர வல்ல ஒரு பொருளை, அதை ஆக்கிப் பெற மாட்டாதார்க்கு அளித்துத் துணை புரிவதும் செய்வர். உழவன், உணவளித்து உடையும் பிறவும் பெறுவன்; உடைத் தொழில் வல்லான், உடை அளித்து, உணவும், உறுபொருளும் பெறுவன். வணிகன், வாணிகத்தால் தம் வளம் வழங்கி, அணியும், ஆடையும் பெறுவன்; அணி ஆக்க அறிந்தான், அணி அளித்து அதற்கு ஈடாகத் தனக்கு வேண்டுவன பெற்று வாழ்வன். இவ்வாறு பிறர் துணையைத் தாம் பெற்றும், பிறர்க்குத் தாம் துணை புரிந்தும் வாழும் மக்கள், ஓரிடத்தே ஒன்று கலந்து வாழக் கடமைப் பட்டவராயினர்.

அவ்வாறு ஒருவரையொருவர் அடுத்து வாழ வேண்டிய நிலையுற்ற மக்களுக்கு, ஒருவர் கருத்தையொருவர் அறிந்து கொள்ள வேண்டியதும் இன்றியமையாததாயிற்று. அவ்வாறே, தம் உள்ளக் கருத்தைப் பிறர்க்கு உரைத்தும், பிறர் உள்ளக் கருத்தைத் தாம் அறிந்தும் வாழத் தொடங்கினர். ஒருவர் கருத்தை ஒருவர் உணரவும், ஒருவர் கருத்தை ஒருவருக்கு உணர்த்தவும் மக்கள் மேற்கொண்ட கருவியே மொழி. மொழி தோன்றிய சூழ்நிலை இதுவே. மொழியின் அடிப்படைத் தத்துவம், அன்றும் இன்றும் என்றும் ஒன்றே. ஆனல், ஒரு மொழி இன்றுள்ள நிலையில், அது தோன்றின காலத்தில் இருந்ததில்லை. இன்று, பல்வகையிலும் வளர்ந்து, பல்லாற்றனும் நிறைவுடையதாய்க் காணும் மொழி, அன்று, அது தோன்றிய காலத்தில், பெரிதும் குறைபாடுடையதாகவே இருந்தது.

உள்ளக் கருத்தினை உணர்த்தவும், உறுதுணை புரிவதே மொழியின் இயல்பாம் எனினும், அவ்வாறு உணர்த்த உறுதுணை புரிவன எல்லாம் மொழிகளாகா. உந்துவண்டி ஒன்று, ஓர் ஊர் நோக்கிச் சென்று கொண்டுளது. வண்டியோட்டி முன்னே உள்ளார். வண்டியை ஓட்டுவிக்கும் ஊர்திக் துணைவர் பின்னே உள்ளார்; ஊர்திக் துணைவர் ஓட்டென ஓட்டி, நிறுத்தென நிறுத்த வேண்டியது வண்டி ஓட்டியின் கடமை. மக்கள் ஏறும் இடங்களிலும், இறங்கும் இடங்களிலும் வண்டியை நிறுத்தப் பண்ணி, மக்களை ஏற்றியும் இறக்கியும் செல்வது ஊர்தித் துணைவர் கடமை. வண்டி ஓடிக் கொண்டே உளது. எதிரே ஊர் ஒன்று வருவதைக்

கண்ட வண்டி ஓட்டி, வண்டியில் வருவாருள் யாரேனும், அங்கு இறங்குகின்றனரா? வண்டியை நிறுத்த வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறார். ஆனால், அவர் அதை வாய்திறந்து கேட்பதில்லை. வண்டியை ஓட்டிக் கொண்டே மின்னூது குழலினின்றும் ஒருமுறை ஒலி எழுப்பிக் காட்டுகிறார்; அது கேட்ட ஊர்தித் துணைவர், அவர் கருத்தறிந்துகொண்டு, ஓட்டியின் அண்மையில் மணியும், தன்பால் விசையும் பொருந்த பொறுத்தப் பெற்றிருக்கும் மின்வழி மணியை, வண்டியை நிறுத்த வேண்டின் சிறிது நாழிகையளவு நீள ஒரு முறையும், நிறுத்தாமை வேண்டின், விட்டு விட்டு விரைந்து இரு முறையும் அழுத்தி ஒலி எழுப்புவர். அது கேட்ட வண்டி ஓட்டியும், அதற்கேற்ப நிறுத்தியும் நிறுத்தாதும் ஓட்டிச் செல்வர். உள்ளக் கருத்தினை உணர்த்துவதும் உணர்வதும் ஈண்டும் நிகழ்ந்தன ஆயினும், உலகோர், இம் முறையினை மொழி என ஏற்றுக் கொள்ளார். இவ்வாறே, உணர்த்தும் வகையும், உணரும் வகையும் பலவாம். அவையெல்லாம் மொழிகளாகா.

உள்ளக் கருத்துக்களை உணர்த்தவும் உணரவும் உடலுறுப்புக்களின் சைகைகளையும், விலங்கும் பறவையும் எழுப்பும் ஒலிகள் போல் ஒலிப்பதையும், வெறுப்பும், வெகுளியும், இன்பமும், துன்பமும் ஆய உணர்ச்சி வயப்பட்ட வழி, இயல்பாக எழும் ஒலிகளையும் உற்ற துணைகளாகக்கொண்ட பண்டைய மக்கள், நாள் ஆக ஆக, அவையெல்லாம் குறைபாடுடையவாகக் கண்டு, தம் வாயினின்றும் எழுந்து, குழந்தைகள் மழலைபோல், பண்டு பொருள் குறியாது ஒலித்துக்கொண்டிருந்த ஒலிகளுக்குச்

சிறிது சிறிதாகப் பொருளேற்றி மேற்கொண்டனர். அதனல் கருத்தை உணரவும், உணர்த்தவும், பல்வேறு ஒலிகளான் ஆய சொற்களை ஆள்வதே மொழியாம் என்ற முடிந்த நிலை பிறந்தது.

ஒருவர் உள்ளத்தில் உள்ளதனை ஒருவர்க்கு உணர்த்தவும், ஒருவர் உள்ளத்தில் உள்ளதனை ஒருவர் உணரவும் உறுதுணைபுரிந்த சொற்களின் கோவையே மொழியாம் எனினும், அம்மொழி இன்று காணப்படுவதேபோல், அது தோன்றிய அந்தக் காலத்தில் காணப்படவில்லை. அடிப்படைத் தத்துவம் என்றும் ஒன்றேயாம்; ஆனல், அதன் அமைப்பும் முறையும் என்றும் ஒரு தன்மையவாகா.

உடற் பசியைப் போக்க உதவுவது உணவு; உணவின் அடிப்படைத் தத்துவம் இதுவே; ஆனல், காட்டு வாழ்வினராய பண்டைய மக்கள், அக்காட்டிற் கிடைத்த காயையும், கனியையும், கிழங்கையும், கீரையையும், காட்டு உயிர்களின் ஊனையும் உண்டு பசியொழிந்து வாழ்ந்தனர். வயிற்றுப் பசியைப் போக்க உதவுவதே உணவு. ஆகவே, அதைப் போக்க உதவும் எதையும் உண்ணலாம் என்று எண்ணி, இன்றைய நாகரிக மக்கள், காட்டு மக்கள் உண்ட அக் காய், கனி, கிழங்கு, கீரைகளையும், காட்டு உயிர்களின் ஊனையும் அவ்வாறே உண்ண விரும்புவதிலர். மாருக, அம்மக்கள், இன்று உணவாக விரும்புவது, அறுசுவை கூடிய உணவினை உண்பன, அக் காய் கனி முதலாயினவேயாயினும், அவற்றிற்கு, ஆறுசுவைகளையும் ஊட்டி, உண்பதையே விரும்புகின்றனர்; ஒரு சுவை குறையினும் உண்ண மறுக்கின்றனர். "இதன் விளைவால் பண்டு

பச்சைக் காயாய், பழுக்காத பழமாய், வேகாத கிழங்காய்· கீரையாய், சுட்ட ஊனாய் இருந்த உணவு, இன்று அறு சுவை கூடிய அழகிய உணவாய் உருமாறிவிட்டது.

உடலை மறைத்துக்கொள்ள உதவுவது ஆடை. ஆடையின் அடிப்படைத் தத்துவம் இதுவே. ஆனால், மக்கள், நாகரிகம் அறியாது, நாடோடிகளாய்க் காட்டில் வாழ்ந்திருந்த காலத்தில், காட்டு மரங்களின் இலைகளையும் பட்டைகளையும், காட்டு விலங்குகளின் தோல்களையும் தம் உடலை மறைக்க மேற்கொண்டனர். உடலை மறைக்க உதவுவதே ஆடை; ஆகவே, அதைச் செய்யவல்ல எதையும் ஆடையாகக்கொள்ளலாம் என்று எண்ணி, இன்றைய மக்களும், அவ்விலைகளையும், மரவுரிகளையும், மான் முதலியவற்றின் தோல்களையும் ஆடையாக மேற்கொள்வதில்லை. மாறாகப் பன்னிறம் ஊட்டப்பெற்றுப் பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும் மெல்லிய ஆடைகளையே அணிந்து கொள்கின்றனர். உடலை மறைக்க உதவுவது ஆடை. அடிப்படைக்கொள்கை, இவ்விரிடத்தும் ஒன்றே; ஆயினும், அவ்வாடைகள் அழகுடையவாயும் இருத்தல் வேண்டும் என இன்று எண்ணுகின்றனர். அதன் விளைவால், பண்டு, இலையாகவும், பட்டையாகவும், தோலாகவும் இருந்த ஆடை, இன்று, பன்னிறம் ஊட்டப்பெற்றுப் பார்க்கப் பேரழகு தரும் பட்டாகவும், பருத்தி நூலாகவும் மாறிவிட்டது. பண்டைய ஆடை வகைகள் நாகரிகமற்ற நாடோடிகளின் ஆடைகள், இன்றைய ஆடைகள், நாகரிகம் மிக்க நாட்டாரின் நல்லாடைகளாம்.

தாம் செல்லக் கருதிய இடங்களுக்கு, இடை வழியில் உள்ள காடு, மலை, வனம், வனாந்தரங்களைக் காலால் நடந்தும், ஆற்றையும், கடலையும் நீந்தியும் கடந்து சென்ற மக்கள், கட்டை வண்டிகளையும், கட்டு மரங்களையும், மாடும், குதிரையும் பூண்ட வண்டிகளையும், பாய் விரித்த மரக் கப்பல்களையும், நீராவி துணை செய்ய, நில எல்லைகளை நினைத்த அளவில் கடக்கும் நீண்ட வண்டித் தொடர்களையும், நீரைப் பிளந்து செல்லும், நாவாய்களையும் மேற்கொள்ள நாணி, நிலத்தையும். நீரையும் ஒருங்கே கடக்கவல்ல வான ஊர்திகளை வழித்துணையாகக்கொண்டு வாழத் தொடங்கியுள்ளனர்.

நாகரிகம் வளர வளர, நாட்டு மக்கள் அறிவு பெருகப் பெருக, அவர்கள் உண்ட உணவு, அணிந்த ஆடை, குடித்த நீர், இருந்த உறையுள், ஊர் செல்ல உதவிய ஊர்தி முதலாயின எல்லாம் பண்டிருந்த பழி நிலையின் நீங்கிப் பாராட்டத்தக்க புதிய நிலையினைப் பெற்றுவிடும்: பெற்றுவிட்டன.

பண்டு நாகரிகம் அற்றுக் காடுகளிலும், மலைகளிலும் வாழ்ந்த மக்களிடையேயும், ஒருவர் உள்ளத்தை ஒருவர் உணர உறுதுணைபுரியும் மொழி இடம் பெற்றிருந்தது. ஆனால், அம்மொழியை அன்றிருந்தவாறே இன்றும் ஆள, அம் மக்கள் மறுக்கின்றனர். காட்டு மக்கள் வழங்கிய அம் மொழியை, இன்று விரும்புவார் எவரும் இலர். உணவிலும், உடையிலும், உறையுளிலும், ஊர்தியிலும், மக்கள்

எவ்வாறு நாகரிகத்தைக் கண்டார்களோ, அவ்வாறே மொழியிலும் நாகரிகம் வேண்டும் என விரும்பினர்கள்; இன்னும் விரும்புகிறர்கள். அதன் விளைவால், அன்று நாகரிகம் அற்றுக் கேட்பதற்கு இன்னுவாய் ஒலித்த மொழி, இன்று காதுக்கினிய, கவின் மிக்கதாய் மாறிவிட்டது.

இந்த மாறுதல், ஒரே நாளில், ஒரே திங்களில், ஒரே ஆண்டில் உண்டானதன்று; மரங்களின் இலைகளையும், மரப்பட்டைகளையும், மாவினத்தின் தோல்களையும் ஆடையாகக்கொண்ட மக்கள், அவ்வாடைகளை அறவே மறந்து, இன்றுள்ள பளபளக்கும் பன்னிறப் பல்வேறு ஆடைகளை ஒரேநாளில் அறிந்து கொண்டவரல்லர். அன்று தாம் மேற்கொண்ட அவ்வாடை வகைகள் கிடைத்தற்கு அரியவாகிய காலத்தில் அவற்றிற்கு ஈடாக, வேறு பொருள்களைத் தேடத் துணிந்து, பருத்தியையும், பட்டையும், பல்வேறு மயிரையும் கண்டு, ஆடை ஆக்குதற்கு அவை ஆகும் என்பதறிந்து, அவற்றைக் கொண்டு ஆடை நெய்யும் அறிவினைத் தெரிந்து, அதன் பின்னர், ஆக்கிய ஆடைகள், வண்ணமும் வனப்பும் உடையவாமாறு, அவற்றைச் செப்பம் செய்து ஆக்குவது, அம்மம்ம! எவ்வளவு அருமை! ஒவ்வொரு நிலையிலும் நெடிது நாள் நின்று நின்று, படிப்படியாக முன்னேற, எத்தனை ஆண்டுகள் கழிந்திருக்கும்; எவ்வளவு ஊக்கமும், உழைப்பும் வேண்டியிருக்கும்!

பொருளும் செயலும் பண்டு வளர்ந்த வகைகளை, இன்றைய உலகியல் நிலைகொண்டு மதிப்பிடல் கூடாது. கைக்கு எட்டாத ஒரு பொருளைக் கழியொன்றின் துணை

கொண்டு பெறலாம் என்ற அறிவினைப் பெற எத்தனையோ ஆண்டுகள் ஆகியிருக்கும். நெருப்பையும், நெருப்பின் பயனையும் நினைத்தபோதே அறிந்து விடவில்லை; அவ்வறிவு விளங்க ஆயிரமாயிரம் ஆண்டுகள் கழிந்திருக்கும். உப்பைக் கண்டு, அதன் உறுசுவை அறிந்தது, எளிதில் எவ்வித முயற்சியுமில்லாமல் ஆகிவிடவில்லை. மரத்தின் கிளைகளையும் தழைகளையும் கொண்டு, மண் குடிசை அமைக்கும் அறிவினை எளிதில் பெற்றுவிடவில்லை. வண்டியைப் பாரம் அறியாது ஈர்த்துச் செல்லச் சக்கரம் உதவும் என்ற உணர்வினை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழித்து உணர்ந்தனரோ அறியோம். கடலையும் கடல்போலும் பெரு நீர் நிலைகளையும், கட்டைகளின் துணை கொண்டு கடக்கலாம் என்பதைக் கணப் பொழுதில் கண்டுபிடித்து விடவில்லை. சுருங்கச் சொல்லின், இன்று ஒரு திங்களில் காணும் வளர்ச்சி, அன்று ஓராயிரம் ஆண்டு வளர்ச்சிக்கு இணையாம்.

இந்த உண்மையை உள்ளத்தில் வைத்து, மொழி தோன்றிய காலத்தையும், அது வளர்ந்த வகைகளையும் மதிப்பிடல் வேண்டும். பொருளின்றி ஒலித்த ஒலிகளுக்குப் பொருளைக் கற்பித்து ஒலித்த காலம் ஒரு காலம்; அவ்வாறு பொருளோடு ஒலித்த ஒலிகளை, ஒன்றும் பலவுமாய்க் கூட்டிச் சொல்லாக்கிய காலம் ஒரு காலம்; அச்சொற்களை ஒன்றும் பலவுமாய் இணைத்துத் தொடராக்கி வழங்கிய காலம் ஒரு காலம்; ஒலிகளை ஒலிக்குங்கால், இன்ன ஒலி, இன்ன ஒலியை அடுத்து ஒலிப்பது அரிது என அறிந்து அவ்வாறே, அவ்வொலிகளை இணைத்தும், மாற்றியும், இடத்திற்கேற்பத் திருத்தியும் ஒலித்த

காலம் ஒரு காலம். சொற்களை, இவ்வாறு வரிசை செய்து வழங்கல் இனிமையும் எளிமையும் உடைத்து என அறிந்து அதற்கேற்ப மாற்றி அமைத்து வழங்கிய காலம் ஒரு காலம்; இவ்வாறு படிப்படியே செப்பம் பல செய்யப் பெற்று வழங்குவதே இன்றைய மொழி, மொழி, இன்றுள்ள நிலையினைப் பெறுவதற்கு எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து, பலப் பல நிலைகளைத் தாண்டி வந்துள்ளது. மொழிகளின் பொதுப் பண்பு இது. இதை அறிவில் நிறுத்தி, நம் செந்தமிழ் மொழியின் தொன்மையினைக் காணுதல் வேண்டும்.

உலகில் மக்கட் பிறவி முதன் முதலாகத் தோன்றிய காலம், ஐந்நூறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாம் என்றும், மக்கள் அவ்வளவு பழைய காலத்தில் பிறந்தவராயினும், அவர்கள் ஓரளவு நாகரிகம் உடையவராய் வாழத் தொடங்கிய காலம், ஐம்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாம் என்றும், அம்மக்கள், ஒருவர் கருதியதை ஒருவர் உணர, உரைகளை மேற்கொண்ட காலம், ஏறக்குறைய முப்பத்தையாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாம் என்றும், பின்னர்ப் பேச்சொலிகள் மெல்ல மெல்லத் திருந்தியதற்குப் பல நூறு ஆண்டுகள் கழிந்திருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது என எல்லோரும் ஒப்பக் கூறுகின்றனர். அது, **செந்தமிழ், தீந்தமிழ், தமிழ், எனும் இனிய தீஞ்சொல்** என்றெல்லாம் பாராட்டப் பெறுகிறது. தமிழ் எனும் சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாம். "தமிழ் தழீஇய சாயலவர்" என்ற சிந்தாமணிச்

செய்யுட்கள், தமிழ் அப்பொருட்டாதல் அறிக. "தேமதுரத் தமிழ்" என ஒருவர் அதைப் பாராட்டியுள்ளார். தமிழ் மொழி, இவ்வளவு இனிமை வாய்ந்திருப்பதற்குக் காரணம் யாது? அம்மொழி அறிந்த பெரியார்கள், அவ்வப்போது ஒன்று கூடி, மொழியை இனிமை நிறைந்ததாக ஆக்குவது எவ்வாறு என்பதை ஆராய்ந்து ஆராய்ந்து, அதை அவ்வாறு ஆக்கியுள்ளனர். "கூடலின் ஆய்ந்த நண் தீந் தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" என்ற திருக்கோவையார் தொடர், இக்கருத்தையே வலியுறுத்துகிறது. இவ்வாராய்ச்சி, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்துளது. ஆன்றவிந்தடங்கிய அச்சான்றோர்களின் உள்ளங்களில் தோய்ந்து தோய்ந்து, தமிழ் மொழி, இனிமை நிறைந்த மொழியாகிப் பெருமையுற்றுளது.

தமிழ் மொழி, அவ்வாறு பெற்ற அவ்வினிமைப் பண்பை, இன்று பெறவில்லை; சங்க காலத்திற்கும் முற்பட்ட காலத்திலேயே, அது அந்நிலையை அடைந்து விட்டது. கடைச்சங்ககாலமே, இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்ப. அதற்கு முன்னே, ஒவ்வொரு சங்கத்திற்கும் இடையே எத்தனையோ ஆண்டுகள் கழிந்து விட்டன. அவ்வாறு நோக்கியவிடத்துத் தமிழ் மொழி, இன்று பெற்றுள்ளதன் இனிய பண்பை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெற்று விட்டது என்பது உறுதியாம்.

மக்கள், தங்கள் உள்ளத்தே எழுந்த எண்ணங்களைத் தாங்கள் எண்ணியவாறே, ஏனையோரும் உணருமாறு

எடுத்துரைக்க வல்ல சொல் வளமும், கேட்போர் விரும்பிக் கேட்குமாறு அமைந்த சொல்லின்பமும் உடையவாய் அமைந்த ஒரு மொழியில், அழகிய இலக்கியங்கள் பல தோன்றுவதும் இயல்பே. இலக்கியமாவது, உயர்ந்த கருத்துக்களைச் சிறந்த சொற்களால் திறம்பட உரைப்பதாம். இனிய பல சொற்களைக் கொண்ட ஒரு மொழி, நாகரிகமும் நற்பண்பும் இல்லா நாட்டு மக்களிடத்தில் தோன்றி விடுவதில்லை. தக்க இன்ன, தகாதன இன்ன என உணரும் உணர்வு தகுதியுடையவரிடத்து மட்டுமே உண்டாம், தகுதியாவது யாது என்பதை உணராதார், ஒலியிலும் மொழியிலும் தகுதியைக் காண மாட்டுவாரல்லர். சிந்தையும் செயலும் சிறந்தனவாகப் பெற்ற மக்கள், தம்மோடு தொடர்புடைய எவையும் சிறந்தனவாக இருத்தலை விரும்புவர்; தாம் வழங்கும் மொழியும் சிறந்தனவாதல் வேண்டும் என்ற எண்ணம் அவர்பாலே உண்டாம். ஆகவே, ஒரு மொழியும், அம்மொழியில் தோன்றிய இலக்கியமும் சிறந்தனவாயின், அம்மொழி வழங்கும் மக்கள், அதாவது, அவ்விலக்கியத்தால் உணரப்படும் மக்கள், சிறந்த செயலும், சீரிய பண்பும் வாய்ந்தவராவர் என்பது உறுதி.

"உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்" என்றார் பாரதியார். உள்ளம் தூயதாயின், சொல்லும் தூயதாம்; செயலும் தூயதாம். உள்ளம் தூயார், [ தூய்மையின் நீங்கிய சொல் வழங்கலும், தூய்மையின் நீங்கிய செயல் புரிதலும் செய்யார்; தீய சொல்லும், தீய செயலும் உடையாரின் உள்ளம் மட்டும் தூயதாதல் இயல்பன்று; சொல்லும் செயலும் உள்ளத்தை

உணர்த்தும் உயர்ந்த கருவியாம். "நயன் இலன் என்பது சொல்லும் பயனில பாரித்துரைக்கும் உரை", "அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம் சொல்லும் புன்மையால் காணப்படும்" என்ற வள்ளுவர் வாக்குகள் பயனில் சொல் கூறுவான் நெஞ்சம் நயனிலதாகும்; புறங் கூறும் புல்லியோன் உள்ளம், அறன் அறியா மறவுள்ளமாம் என்ற உண்மைகளை உணர்த்திச் சொல்லும் செயலும் நல்லனவாக் கொண்டவர் உள்ளமும் நன்றாம்; ஆகவே, உள்ளமும், உரையும், உற்ற தொழிலும் ஒன்றோடொன்று உறவுடையன; ஒன்று நன்றாயின், ஏனைய இரண்டும் நன்றாம்; ஒன்று தீதாயின், ஏனைய இரண்டும் தீதாம். ஆகவே, உயர்ந்த மொழியும், சிறந்த இலக்கியங்களும், உயர்வும் சிறப்பும் ஒருங்குடையாரிடத்து மட்டுமே உளவாம் என்ற உண்மைகளை உறுதி செய்கின்றனர். கரும்பு தோன்றுவது கழனியில்; களர் நிலத்தில் அன்று!

செந்தமிழ் மொழி சிறந்த இலக்கியங்களையும், அவ்விலக்கியங்களின் பண்பினை இனிதெடுத்துரைக்கும் இலக்கணங்களையும் பெற்றுளது. "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்" என்பது விதி. இலக்கியம் முற்பட்டது; இலக்கணம் பிற்பட்டது. நாய் என்ற பொருளைக் கண்ட ஒருவனே, நாய் என்பது யாது என்பதை அறிந்து கூற முடியும். அதை அறியாத ஒருவன் அப்பொருள் பற்றிக் கூறுதல் பொருந்தாது; பொருந்தாது என்பது மட்டுமன்று; அஃது அவனால் இயலவும் இயலாது. மேலும் நாய் என்ற பொருளே இல்லாதவிடத்து, அப்பொருள் பற்றிப் பேசு

வோரோ, அதற்கு இலக்கணம் கூறுவோரோ இரார். ஆகவே, இலக்கணம் என்பதொன்று உளது என்றவுடனே, அவ்விலக் கணத்தை உடைய ஒரு பொருள், அதாவது அவ் விலக்கணம் தோன்றுவதற்குக் காரணமாய் ஒரு பொருள் உளது என் பது தானே பெறப்படும். தமிழ்மொழி, தலைசிறந்த இலக் கணமாகத் தொல்காப்பியத்தைப் பெற்றுளது. ஆகவே, அப்பேரிலக்கணப் பெரு நூல் தோன்றுவதற்குக் காரண மாய் இலக்கியங்கள் பலவற்றையும், அம்மொழி பண்டே பெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவு.

ஒரு பொருளுக்கு இலக்கணம் கூறுவது, எளிதில், எண்ணியவுடனே இயலுவதன்று. மாடு என்ற பொருளுக்கு இலக்கணம் கூற முன் வந்த ஒருவன், முதலில், நான்கு கால்கள் உடையது மாடு என்றான்; நான்கு கால்கள் குதி ரைக்கும் உளவே என்ற தடை எழுந்தவுடனே, நான்கு கால் களையும் இரண்டு கொம்புகளையும் உடையது மாடு என்றான். அந்நிலையில், அவ்வியல்பு ஆட்டிற்கும் உண்டே என்று ஒருவன் கூற, நான்கு கால்களையும், இரண்டு கொம்புகளை யும், நீண்ட வாலையும் உடையது மாடு என்றான்; அவ் வியல்பு யானைக்கும் பொருந்தும்; ஆகவே கூறிய இலக் கணம் நிரம்பாது என்று ஒருவன் சொல்ல, பிளவுண்ட குளம்புகளைக் கொண்ட நான்கு கால்களையும் இரண்டு கொம்புகளையும், நீண்ட வாலையும் உடையது மாடு என்றான். அதுவும் அமையாது என்று கண்டவிடத்துக் கூறிய இலக் கணங்களோடு, கன்று ஈன்று, அக்கன்று உண்டு எஞ்சிய பாலை, மக்கள் பயன்கொள்ள அளிப்பது மாடு என்றான்.

இவ்வாறு இறுதியில் கூறிய நிரம்பிய இலக்கணத்தைக் கூற, அவனுக்கு எத்தனையோ ஆண்டுகள் ஆகியிருக்கும். மாடு ஒன்றை மட்டும் கண்ட காலத்திலிருந்து, அவன் வாழ்வில், குதிரையும், ஆடும், யானையும் பிறவும் குறுக்கிட்ட பல ஆயிரம் ஆண்டுகளைத் தாண்டி வந்த பின்னரே, அவ்விலக்கணத்தை, அவனால் காண முடிந்தது. இலக்கண நூல்கள் எழுந்த முறை இதுவே.

தமிழ் மொழியின் தலையாய இலக்கணமாய தொல்காப்பியம், தமிழ் மொழியின் எழுத்துக்களுக்கும், சொற்களுக்கும் இலக்கணம் கூறுகிறது ; தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுக்கிறது. பார்ப்பு, பறழ்போலும் சொற்கள், இளமை உணர்த்தும் பெயர்களாம் எனச் சொல்லளவிலேயே இளமைப் பொருள் உணர்த்தும் சொற்கள் இவை என்றும், ஏறு ஏற்றைபோலும், சொற்கள் ஆண்மை உணர்த்தும் பெயர்களாம் எனச் சொல்லளவிலேயே ஆண்மைப் பொருள் உணர்த்தும் சொற்கள் இவை என்றும், பிடி, பெடை, பெட்டை போலும் சொற்கள் பெண்மை உணர்த்தும் பெயர்களாம் எனச் சொல்லளவிலேயே பெண்மைப் பொருள் உணர்த்தும் சொற்கள் இவை என்றும் கூறுவதோடு அமையாது, "பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை" என, இளமை உணர்த்தும் பெயர்களுள், இன்ன பெயர், இன்னின்ன உயிர்களின் இளமைகளை உணர்த்தும் என்றும், "பன்றி புல்வாய், உழையே கவரி என்றிவை நான்கும் ஏறு எனக்குரிய" என ஆண்மை உணர்த்தும் பெயர்களுள், இன்ன பெயர், இன்னின்ன உயிர்களின்

ஆண்மைகளை உணர்த்தும் என்றும், "பிடி என் பெண் பெயர் யானை மேற்று" எனப் பெண்மை உணர்த்தும் பெயர்களுள் இன்ன பெயர், இன்னின்ன உயிர்களின் பெண்மைகளை உணர்த்தும் என்றும், பொருள்களுக்கும், சொற்களுக்கும் உள்ள தொடர்பினை உணர்ந்து வரையறுத்து வழங்கியுளது தொல்காப்பியம்.

அம்மட்டோ! மலை, காடு, வயல், கடல் என நால் வகைப்படும் நிலத்தின் இயல்பையும், ஞாயிற்றின் வெங்கதிர், வானின் தண்பெயல் என்ற இவற்றின் இயல்புகளுக்கு ஏற்ப, கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப் பிரிவுண்டு நிற்கும் காலத்தின் இயல்பையும், அவ்வந் நிலங்களில் அவ்வக் காலங்களில் பூத்துக் காய்த்தும் பயன் தரும் மரம் செடி கொடிகள், நிலத்தில் ஊர்ந்தும் தவழ்ந்தும், ஓடியும், நடந்தும், நீரில் நீந்தியும், வானத்தில் பறந்தும், வாழும் பல்வேறு உயிர் வகைகளையும், அவ்வுயிர்களின் உணவு, உறையுள், ஒழுக்கம் ஆகியவற்றின் இயல்புகளையும், அவ்வுயிர்களுள் ஆறறிவு படைத்த மக்கள், மணந்து மக்களைப் பெற்று மனையறம் காக்கும் மாண்புடையதாய அகவொழுக்கத்தினையும், ஊராரும், உலகோரும் ஒன்றுகூடி, அவ்வக வாழ்வு அமைதி நிறைந்த நல்வாழ்வு ஆதற்கு நற்றுணையாம் பொருளீட்டு முயற்சிகளையும், அம்முயற்சி இனிது நடைபெற நின்று துணைபுரியும் அரசியற் சிறப்புக்களையும், அவ்வரசியலை அறம் பிறழாது காக்கும் அரசர்கள் மேற்கொள்ளும் போர் நிகழ்ச்சிகளையும் உணர்த்தும் புறஒழுக்கத்தினையும் இனிது எடுத்துக் கூறியுள்ளது.

இவ்வாறு தமிழ் மொழிக்கும், அம்மொழி வழங்கும் தமிழ் நாட்டிற்கும், அந்நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கும் இலக்கணம் வகுக்கும் தொல்காப்பியம் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆயினும், அன்று அது கூறிய இலக்கணம், இன்றும் பொருந்துவ தாகவே உளது. அவ்விலக்கணத்தைச் சிறிதேனும் மாற்றி அமைக்க வேண்டும் என்ற நிலை, இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த இன்றும் உண்டாகவில்லை. தான் கூறிய இலக்கணத்தை அது அவ்வளவு தெளிவாகக் குறையேதும் காணு வாறு முற்ற உணர்ந்து கூறியுள்ளது. நேற்றுக் கூறிய இலக்கணம் இன்று இல்லை என்ற நிலையற்ற இவ்வுலகில், இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் மாற்றிக் கூற வேண்டிய நிலை உளது என்ற குறை கூறுவாறு, நிரம்பிய இலக்கணத்தை உணர்த்தியுளது தொல்காப்பியம். இவ்வியல்பு உலக மொழிகள் எதற்கும் இல்லாத தமிழ் மொழி ஒன்றற்கே உள்ள தனிச் சிறப்பாம்.

தொல்காப்பியர், தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் கூறிய இலக்கணத்தைத் தாம் ஒருவரே, தம் வாழ்நாள் காலத்திற்குள்ளாகவே அறிந்து உரைத்தாரல்லர். அவருக்கு முன்னர், எத்தனையோ ஆசிரியர்கள், அவை பற்றி எவ்வளவோ கூறியுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் கூறிய அவ்விலக்கணங்களுள், அக்கால வளர்ச்சியோடு நோக்கப் பொருந்தாதனவற்றை விலக்கி, கூறுதனவற்றைக் கொண்டு கூறியதே தொல்காப்பியம். "என்மனார் புலவர்" "இயல்பென மொழிப" என அவர் ஆளும் தொடர்கள்

இதை உறுதி செய்ய வல்லவாம். " தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோன் " எனத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் கூறுவதும் காண்க.

தமிழ் மொழி தோன்றிய காலத்திற்கும், அதற்கு நிரம்பிய இலக்கணம் உரைக்கும் தொல்காப்பியம் தோன்றிய காலத்திற்கும் இடையே, பல ஆசிரியர்கள் பல்வேறு காலங்களில் தோன்றித் தம் தம் காலத்தே, தமிழ் ஒலிகளிலும், தமிழ்ச் சொற்களிலும், தமிழ் மக்களின் வாழ்க்கையிலும் தாம் கண்ட குறைகளையும் திருத்தங்களையும் நீக்கியும் கொண்டும் இலக்கணமும் கூறிச் சென்றனர். இறுதியாக அவர் கூறிய இலக்கணங்களில் செப்பம் செய்து, சிறந்த தம் நூலை அளித்தார் தொல்காப்பியனுர். காடுகளில் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்த தமிழ் மக்களிடையே தோன்றி, அவர் நாகரிக நெறியில் வளர வளர, அவரோடு தானும் வளம் பல பெற்று வளர்ந்து, இனியும் வளர வேண்டா இனிய நிலைபெற்ற தமிழ் மொழியின் இறவாப் பேரிலக்கியங்களுக்குத் தொல்காப்பியர் கூறும் இலக்கணங்களும் அவ்வாறு வந்தனவே.

இலக்கியம், அவ்விலக்கியத்தைப் பெற்ற மக்கள் வாழ்க்கையோடு இரண்டற இணைந்து நிற்பது. சிறந்தது எனத் தாம் கண்ட நிகழ்ச்சிகளைச் சிறந்த சொற்களால் சிறப்பாக எடுத்துரைப்பதே இலக்கியமாம். நாடு நாரிகத்தின் நடுநாயகமாய் நாட்டு மக்கள் உணவாலும், உடை

யாலும் ஒரு குறையும் உறுது வாழ நல்லாட்சி நிலவும் நாடாய்ப் பகை ஒழித்துப் பண்பு வளர்த்து விளங்க, நாட்டு மக்கள், ஊக்கமும் உரமும் உள்ள உயர்வும் உயர்ந்த ஒழுக்கமும் உடையவராய் நிறை வாழ்வு வாழும் காலத்தில், அந்நாட்டில், அன்னூர் வாழும் காலத்தில் தோன்றிய அறிஞர் கள் நாட்டின் நன்னிலை கண்டு, நாட்டு மக்களின் நற்பண்பு கண்டு, அகம் மிக மகிழ்வதும் அந்நாடே நாடு, அந்நாட்டு மக்களே மக்கள் எனப் பாராட்டுவதும், எந்நாடும் அந்நாடு போலாயின், எந்நாட்டு மக்களும் அந்நாட்டு மக்களேபோல் வராயின், உலகில் அமைதி நிலவும்; உலக மக்கள் உயர்நிலை பெறுவர். ஆகவே, பிற நாடுகளும், பிற நாட்டு மக்களும், இந்நாட்டையும், இந்நாட்டு மக்களையும் அறிந்து அவர் வழி செல்லுமாறு, இங்குள்ள நிலையினை எடுத்துக் காட்டுவதைக் கடமையாகக் கொள்வதும் செய்வர். தம் காலத்தே, தம் நாட்டைச் சூழ உள்ள நாடுகளுக்கும், அந் நாட்டு மக்களுக்கும் காட்டுவதோடு, தமக்குப் பின் வாழும் தம் நாட்டு மக்களுக்கும் காட்டுதல் வேண்டும் எனக் கருதுவர். கருதிய அவ்வான்றோர், தாம் வாழும் தம் நாடு, அந்நாட்டு நல்லாட்சி, அந் நல்லாட்சிக்குரியோனை அரசன், அவன் ஆட்சி மாண்பு, அந்நாட்டு மக்கள், அவர் மனவளம், அவர் தம் வாழ்க்கை வனப்பு ஆகிய அனைத்தையும் பாட்டில் இசைத்துப் பாராட்டிச் செல்வாராயினர். அவ்வாறு அவர் பாடிய அப் பாக்களே இலக்கியங்களாம். ஆதலின், இலக் கியம், அவ்விலக்கியத்தைப் பெற்ற மக்களோடு ஒன்றி நிற்கும் இயல்புடையதாயிற்று.

இலக்கியம் எழுந்த வரலாறு இஃது.—ஆகவே, இலக்கியத்தைக் காணின், அவ்விலக்கியத்தில், அவ் விலக்கியத்திற்குரிய மக்களைக் காணலாம். மக்களைக் காணின், அம்மக்களிடையே அம்மக்களின் இலக்கியங்களைக் காணலாம். அதனால், மக்கள் வளர வளர இலக்கியமும் வளரும்; அவர் வளம் குன்றக் குன்ற அவர் இலக்கியமும் வளங் குன்றித் தோன்றும் என்பது உறுதி. மக்களுக்கும், இலக்கியங்களுக்கும் உள்ள இவ்வுறவினை உட்கொண்டு தமிழ் இலக்கியங்களின் இயல்பினை ஆராய்தல் வேண்டும்.

மக்கள் வாழ்க்கை வனப்புடையதாய், வழுவற்றதாய் வாய்ப்பு பல நிறைந்ததாய் அமைதற்கு ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆகும்; மக்கள் வாழ்க்கையைப் பார்த்துப் பாராட்டி எழுந்தது இலக்கியம்; இலக்கியம் பல கண்டு எழுந்தது இலக்கணம். தமிழ், தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெற்று விட்டது. அத்தொல்காப்பியம், தனக்கு முன் இருந்த பல பல இலக்கண நூல்களைக் கொண்டு எழுதப் பெற்ற வழி நூலாம்; அவ்வாறு எழுந்த அத்தொல்காப்பியம் கூறும் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும், வாழ்க்கை இலக்கணமும், இன்றைய நிலையிலும் குறை காணாவாறு அமைந்துள்ளன. அவ்வாறு அது அமைதற்கேற்ப தமிழ் இலக்கியங்கள், அது தோன்றுவதற்கு முன்னரே, சிறந்த இடத்தைப் பெற்று விட்டன என்பன இதுகாறும் கூறப் பெற்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் தோன்றி யிருக்குமாயின், அது தோன்றுவதற்குக்

காரணமாய் பல இலக்கண நூல்கள், அதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்குமாயின், அவ்விலக்கண நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாய் எண்ணற்ற இலக்கியப் பெரு நூல்கள், அவ்விலக்கண நூல்கள் தோன்றுவதற்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியிருக்குமாயின், அவ்விலக்கியங்கள் தோன்றுவதற்குக் காரணமாய்த் தம் வாழ்வை வளம் நிறைந்ததாக ஆக்கிக் கொண்டிருப்பாராயின், அத் தமிழ் மக்களும், அம் மக்களின் இலக்கியங்களும் எத்துணைப் பழமை உடையராதல் வேண்டும் என்பதை உய்த்துணர்வதல்லது, அந்தக் காலம் இந்தக் காலம் என வரைந்து காட்ட இயலுமோ ? அக் காலத்தின் பழமையினை அறிய மாட்டாமையாலன்றோ, புலவர் ஒருவர், அத் தமிழ்க் குடியின் பழமையினை வரைந்து கூறுதே, " கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடி" எனக் கொன்னே கூறிச் சென்றுள்ளார் ! நிற்க.

ஒரு மொழி தோன்றி வளர்ந்தவுடனே, அம் மொழியில் இலக்கியங்கள் தோன்றிவிடும். இலக்கியம் காலந்தோறும் தோன்றிக் கொண்டேயிருக்கும். இலக்கிய ஆசிரியர்கள் எக்காலத்திலும் தோன்றுவர். இலக்கியம் தோன்றும் காலம் இது ; அது தோன்றாக் காலம் இது என்ற வரையறை வகுப்பது இயலாது.

இலக்கிய ஆசிரியன், தான் இயற்றும் இலக்கியத்திற்குத் தன் காலத்து மக்களின் வாழ்க்கை நிலைகளையே

பின்னணியாகக் கொண்டு இயற்றுவன். இலக்கியம் அது தோன்றும் கால நிலையைத் தன் அடிப்படையாகக் கொண்டெழும் என்பது உண்மை. அதுவே இலக்கியப் பண்பும் ஆம். ஆனால் அவ்வாறு இலக்கிய அடிப்படையாக அமையும் மக்கள் வாழ்க்கை நிலை, என்றும் நடுநிலையில் இருப்பதில்லை. அது காலந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும், நாடுதோறும் மாறிக்கொண்டே இருக்கும், இனந்தோறும் மாறிக் கொண்டே இருக்கும். இன்று தோன்றி விளங்கும் இலக்கியங்கள் அனைத்தையும் நோக்கின், அவை பல்வேறு வாழ்க்கை முறைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பது புலனும்.

நாகரிகம் வளர, வளர நாட்டு மக்களிடையே புதுப் புதுப் பொருள்கள் இடம் பெறுவதும், அப் புதுப் பொருள்களைக் குறிக்க வழங்கும் புதுப் புதுச் சொற்கள், அம் மக்கள் மொழியில் இடம் பெறுவதும் நிகழும். மேலும் காலம் செல்லச் செல்ல, மக்களின் தேவை பழகப் பழகப் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்களும் பல்வேறு மொழி வழங்கும் மக்களும், பல்வேறு சமயங்களைச் சேர்ந்த மக்களும், பல்வேறு பழக்க வழக்கங்களையுடைய மக்களும் ஒன்று கலந்து வாழ்வதும், அம் மக்களின் பழக்க வழக்கங்களும், அம் மக்களின் மொழிகளைச் சேர்ந்த சொற்களும், அம் மக்களின் சமயக் கொள்கைகளும் ஒன்றில் ஒன்று கலந்து போவதும், அவ்வாறு கலந்த அக் கலவைக் காட்சிகள், ஒவ்வொருவர் இலக்கியத்திலும் இடம் பெறுவதும் இயல்பாம்; அதைத் தடை செய்தல் இயலாது. வேண்டுமானால், அப் பொருள்களையும், அப் பொருள்களைக்

குறிக்கும் பிற மொழிச் சொற்களையும், அம் மக்களின் கொள்கைகளையும் தம் மொழிக்கும், தம் பண்பாட்டிற்கும் ஏற்பத் திருத்தி மேற்கொள்வதையே செய்தல் இயலும். அவற்றை அறவே விடுத்து வாழ்தல் இயலாது.

புதிய பொருள்களும், புதிய சொற்களும், புதிய பழக்க வழக்கங்களும் ஒரு பால் இடம்பெற, தேவையற்றுப் போன பொருள்களும், அவற்றைக் குறிக்க வழங்கும் சொற்களும், பழக்க வழக்கங்களும் ஒருபால் வழக்கற்றுப் போதலும் நிகழும். உலகியலுக்கும், உலகில் வழங்கும் இலக்கியங்கட்கும் உள்ள இவ்வுறவு முறையினை உணர்ந்தன்றோ "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றும், "வடசொற் கிளவி வட வெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே" என்றும் விதி வகுப்பாராயினர் இலக்கண ஆசிரியர்கள்.

ஒரு மொழியில், பல்வேறு காலங்களில் தோன்றிய இலக்கியங்களை நோக்கின், பழையன கழிதலும், புதியன புகுதலும் ஆகிய இப்பண்பு இடம் பெற்றிருத்தலை உணரலாம். இவ்வாறு பழையன கழிந்து, புதியன புகுந்து தோன்றுவதையே, ஒரு சாரார் இலக்கிய வளர்ச்சி எனக் கொள்வர். பழையன எல்லாம் பழிக்கத்தக்கன; புதியன எல்லாம் போற்றற்குரியன எனஎவரும் எண்ணுதல் கூடாது. அவ்வாறே, பழையன எல்லாம் பாராட்டற்குரியன; புதியன எல்லாம் பழித்தற்குரியன என்று எண்ணுதல் கூடாது. இரு திறத்தாரும் பிழையுடையாரே யாவர். பாராட்டற்குரியனவும், பழித்தற்குரியனவுமாய பண்புகள், பழையன புதியன ஆய இரண்டிலும் உள. ஆகவே, இலக்கியங்கள் தோன்றிய

காலநிலை கண்டு, அவற்றைப் பாராட்டுவதும் பழிப்பதும் செய்யாது, அவ்விலக்கியங்கள் போற்றும் பொருள் நிலை கண்டு, அப் பொருள்களை அவை உணர்த்தும் நெறிமுறை கண்டே, அவற்றிற்கு உயர்வு தாழ்வு கற்பித்தல் வேண்டும்.

இலக்கியங்கட்கும், அவ்விலக்கியம் தோன்றிய காலங் கட்கும் உள்ள தொடர்பு இஃதாகவே, ஓர் இலக்கியத்தின் உண்மை இயல்பினை, உள்ளவாறு உணர்ந்து மதிப்பிடல், அவ்விலக்கியம் தோன்றிய காலத்தின் சூழ்நிலையினை உணர்ந்தார்க்கல்லது இயலாது. ஆகவே, இமயம் வென்று, இறவாப் புகழ்பெற்று விளங்கிய மூவேந்தர் ஆட்சிக் காலம் முதலாகத் தமிழ் நாட்டில் தோன்றி வழங்கும் இலக்கியங் களின் இயல்புகளை, அவை தோன்றிய காலங்களின் சூழ்நிலை யோடு ஒருங்கு கண்டு ஆராய்ந்து காண்போமாக.

# 3. சங்க இலக்கியம்

தமிழ்மொழி, நிலநூல், வானநூல் போலும் நூல்களைப் பெரு அளவில் பெறவில்லை என்பது உண்மையே. ஆனால், பண்பாடுணர்த்தும் இலக்கிய நூல்களைப் பெறுவதில், அது, எம்மொழிக்கும் பின்தங்கிவிடவில்லை. இலக்கிய நூல்களை எண்ணற்றனவாக்கொண்ட மொழிகள் உலகில் எத்தனையோ உள; அவற்றின் இலக்கிய நூல்களும் சிறந்தனவே எனினும், தமிழ் இலக்கிய நூல்களைப்போல் பெருஞ் சிறப்புடையவாகா. தமிழ் இலக்கிய நூல்கள். உயர்ந்த பண்பாடுணர்த்தும் இயல்புடைமையால் மட்டும் சிறந்தன என்பதில்லை. அது எண்ணிக்கையாலும் சிறந்ததாம்; தமிழ் இலக்கியம், கரைகாணாப் பெருங்கடலுக்கு ஒப்பாம்.

தமிழ் நாட்டு அரசர்களும், அறிஞர்களும், தமிழ் இலக்கியச் செல்வத்தைச் சங்கம் அமைத்து வளர்த்தனர். கடலால் கொள்ளப்பட்ட மதுரையிலும், கபாடபுரத்திலும், மதுரையிலும் முறையே, முதல், இடை, கடைச் சங்கங்களை அமைத்துத் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்து, அழகுடையவாக்கி வளர்த்தார்கள், அகத்தியனார், இறையனார், முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் முதலாம் புலவர் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர் முதற் சங்கத்திலும், அகத்தியனார், தொல்காப்பியனார், இருந்தையூர்க்

கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறு பாண்டரங்கன், திரையன், மாறன், துவரைக்கோமான், கீரந்தை முதலாம் புலவர் ஐம்பத்தொன்மர் இடைச் சங்கத்திலும், சிறு மேதாவியார், சேந்தம் பூதனுர், அறிவுடையனுர், பெருங்குன்றூர்க்கிழார், இளந் திருமாறன், நல்லந்துவனுர், மருதன் இளநாகனுர், நக்கீரனுர் முதலாம் புலவர் நாற்பத்தொன்பதின்மர் கடைச் சங்கத்தலும் இருந்து இலக்கியச் செல்வங்களை ஆக்கியும், ஆராய்ந்தும் வாழ்ந்தனர்.

காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈருகவுள்ள அரசர் எண்பத்தொன்பதிமர் தலைச் சங்கப் புலவர்களையும் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத் திருமாறன் ஈருகவுள்ள அரசர் ஐம்பத்தொன்பதின்மர் இடைச் சங்கப் புலவர்களையும், முடத்திருமாறன் முதலாக, உக்கிரப் பெருவழுதி ஈருக உள்ள அரசர் நாற்பத்தொன்பதின்மர் கடைச் சங்கப் புலவர்களையும், உணவும், உடையும், உறையுளும் அளித்துப் பேணி, அவர்கள் இலக்கியம் வளர்க்க அருந்துணை புரிந்தனர்.

தலைச் சங்கப் புலவர்கள், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை முதலிய நூல்களையும், இடைச் சங்கப் புலவர்கள் கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலையகவல் முதலிய நூல்களையும்; கடைச் சங்கப் புலவர்கள் நெடுந் தொகை, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை முதலிய நூல்களையும் ஆக்கி ஆராய்ந்து, அழகிய தமிழ் வளர அருந்தொண்டு புரிந்தனர்

மனக் கவலையால் உடலும் உள்ளமும் தளர்ந்து வந்தான் ஒருவனைக் கண்டு, மதுரையில் ஆராய்ந்து கண்ட தமிழ் இலக்கியத் துறைகள் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொண்டு, "உடல் தளர்ந்தனையோ, கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ?" என மணிவாசகப் பெருந்தகையார் வினவும் வினவால், மதுரையில் அமைந்த கடைச் சங்கத்தில் இருந்து, புலவர் பெருமக்கள் மேற்கொண்ட தமிழாராய்ச்சியின் அருமை பெருமைகள் நன்கு புலனுதல் அறிக.

தமிழிலக்கியச் செல்வங்களை ஆக்கியும், ஆராய்ந்தும் வளர்த்தற் பொருட்டுத் தோன்றிய சங்கங்கள் இருந்த தென் மதுரையும், கபாடபுரமும் கடல் கோள்களால் அழிவுற்றன. இக் கடல் கோள் நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரம் பாடிய சேரகுல இளங்கோ, "பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள" எனக் குறிப்பாகவும், அச்சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார், "பஃறுளி என்னும் ஆற்றிற்கும், குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே, எழுநூற்றுக் காவதயாறும், இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ்முன் பாலை நாடும், ஏழ் பின் பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண காரை நாடும், ஏழ்குறும் பனை நாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும்; குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும், நதியும், பதியும், தட நீர்க்குமரி வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண்டொழிதலால்", என விரிவாகவும் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழ் வளர்த்த சங்கங்களின் நிலைக்களமாய நகரங்கள் இரண்டும் கடல் கோளால் அழிவுறவே, அந் நகரங்களில் இருந்த தமிழிலக்கியச் சுவடிகள் பலவும் அக்கடல் வாய்ப் பட்டு அழிந்தன. அதனால், அம்முதல் இடைச் சங்கங்களில் ஆக்கப்பெற்ற அந்நூல்களைக் காணும் ஆகூழ், இக்கால மக்களுக்கு இல்லாமற் போயிற்று. அவ்வாறு அழிந்தன போக, இன்று எஞ்சி நிற்பன பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் ஆய பதினெட்டு இலக்கியங்களும், தொல் காப்பிய மாய இலக்கணமுமேயாம். திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும் பாணாற்றுப் படை, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்ற பத்து இலக்கியங்களும் பத்துப் பாட்டு எனப் பெயர் பெறும். நற்றிணை, குறுந்தொகை ஐங்குறுநூறு புறநானூறு பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அக நானூறு என்ற இவ்வெட்டு இலக்கியப் பெரு நூல்களும் எட்டுத் தொகை எனப் பெயர் பெறும். எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என்ற இவ்வரிசைக்கண் வந்த நூல்கள் மட்டும் நானூற்று அறுபத் தெண்மர்க்கும் மேற்பட்ட புலவர் பெரு மக்கள் பாடிய இரண்டாயிரத்து நானூற்றுப் பத்துப் பாக் களைக் கொண்டுள்ளன.

மக்கள் பால் கிடந்து மாண்பு தரும் பண்பாடுகளைப் பார்த்துப் பாராட்டி, அப்பண்பாடுகளைப் பிறநாட்டாரும், பிற்காலத்தில் வாழ்வாரும் அறிந்து மேற்கொள்ளுதல்

வேண்டும் என்ற வேட்கையின் விளைவால், பாட்டிடை அமைத்து இசைப்பனவே இலக்கியங்களாம். ஆதலின், சங்க கால இலக்கிய வளர்ச்சியின் இயல்புகளை ஆராய்ந்து காண்பதன் முன்னர், அவ்விலக்கியம் தோன்றற்காம் வாழ்க்கையினை மேற்கொண்டு வாழ்ந்த பழந்தமிழ் மக்களின் பண்பாட்டியல்பினை ஆராய்ந்து காண்பதே அமைவுடைத்து. ஆகவே, இலக்கிய வளர்ச்சியின் இயல்புகளை, அவ்விலக்கியச் செல்வங்கள் எழுவதற்குக் காரணமாய மக்களின் மாண்புகளோடு ஒருங்கு வைத்து ஆராய்தலை மேற்கொள்ளுவோமாக.

சங்க காலம், தமிழக வாழ்வில் தலை சிறந்த காலம். தமிழ் நாட்டு வாணிகம், தமிழகத்தோடு நில்லாது, கடல் கடந்த நாடுகளிலும் சென்று பரவித், தமிழகத்து வளத்தை, வாழ்வை வனப்புடைய தாக்கிய காலம். சோழநாட்டுப் புகாரிலும், பாண்டி நாட்டுக் கொற்கையிலும், சேர நாட்டு முசிறியிலும் வாணிகம் கருதி வந்த யவனர் முதலாம் பிற நாட்டு மக்கள் பெருந்திரளாக வந்து வாழ்ந்த காலம். தமிழ் நாட்டு அரசர்கள், தமிழகத்தின் பெருமையினைப் பிற நாட்டாரும் உணருமாறு வெற்றி கண்டு வாழ்ந்த காலம். சேரருள் சிறந்த செங்குட்டுவனும், சோழருள் சிறந்த கரிகாற் பெருவளத்தானும், பாண்டியருள் சிறந்த நெடுஞ்செழியனும் ஆட்சி புரிந்த காலம் அது. தமிழ் வேந்தர் கொண்டாடிய விழாவிற்கு, இலங்கை வாழ் அரசன் கயவாகுவும், வடநாடு வாழ் நூற்றுவர் கன்னரும் வந்துச் சிறப்பித்த வளமார் காலம். காவிரியில் கரிகாலன் கட்டிய கரையாலும், கல்லணையாலும், "சோழ வளநாடு சோறுடைத்து" என்றசொல் பிறக்க வளம் பெருகிய

காலம் ஆட்சி நலமும், அரும் பொருள் வளமும், வேலி ஆயிர மாக விளைந்த விளைவுச் சிறப்பும் பெற்றமையால், மக்கள் பசியும், அது காரணமாய்ப் பிணியும், அது காரணமாய்ப் பகையும் அற்று வாழ்ந்த காலம். அன்பும், ஆண்மையும். அரு ளும், ஆற்றலும் காதலும் கடமையும், உரனும், உயர்பேரொ ழுக்கமும் உடையராய் வாழ்ந்த வனப்பு மிக்க காலம். ஆன்ற விந்தடங்கிய சான்றோர் பலர், அரசனும், அவன் கீழ் வாழ் மக்களும் அற வழி கடவாது, மறவழி செல்லாது வாழ் வதற்காம் அறிவுரை பல வழங்கி, வழிகாட்டிகளாய் வாழ்ந்த காலம். அரசர் அந்தணர் குடிகளிலும், வணிகர் வேளா ளர் வழியிலும், குயவர் கொல்லர் குலத்திலும், மருத்துவ மும், நெசவும் அறிந்தார் மனைகளிலும், மறவர் எயினர் மரபிலும் பிறந்த ஆடவர் பெண்டிர் ஆய இரு பாலாரிலு மாகப் புலவர் பலர் தோன்றிப் புகழ் வளர வாழ்ந்த காலம்.

கண்ணாரக் கண்ட காட்சிகளும், காதாரக் கேட்ட நிகழ்ச்சிகளும், அவற்றைக் கண்டதாலும், கேட்டதாலும் எழுந்த உணர்ச்சிகளுமே, கருத்து நிறைந்த கவிகளாக வெளிப்படும் ஆதலின், அன்று பாடிய புலவர்கள் எல்லோ ரும், தம் பாடற் பொருளாகத் தமிழகக் காட்சிகளையும், நிகழ்ச்சிகளையுமே மேற்கொண்டனர். அதனால், அன்று தோன்றிய தமிழ்ப் பாக்கள், தாயன்பு, தந்தை கடன், கன்னியர் கற்பு. காளையர் கடமை, அரசர் செங்கோல், அமைச்சர் நல்லுரை, ஆன்றோர் அறம், வீரர் வெற்றி என

இவை பொருளாகவே தோன்றியுள்ளன. அவற்றுள் ஒரு சில:

ஓர் ஆண் மகன், ஒரு பெண்ணின் பால் காதல் கொண்டான்; அவளும் அவன்பால் அன்பு செலுத்தினுள். இருவரிடையே தோன்றிய அவ்வன்பு, நாள்தோறும் வளர்ந்தது. ஒருவர் இல்லாமல் ஒருவர் வாழ முடியாது என்று எண்ணுமளவு அது வளர்ந்துவிட்டது. ஆனல், அவர்கள், தங்கள் காதலுறவினைத் தம் பெற்ருேர் அறியாவாறே வளர்த்து வந்தனர். அதனுல், இடையருது கலந்து மகிழ்தல் அவர்க்கு இயலாது போயிற்று. மேலும் அவர்கள் அன்பு வாழ்க்கைக்கு எத்தனையோ இடையூறுகளும் உண்டாயின. அதனுல், ஒருவரை ஒருவர் காண்பதும் அரிதாகிவிட்டது. தன் அன்பனைக் காணமாட்டாது, அப் பெண் பெரிதும் கலங்கினுள். அக் கலக்கம் பெரிதாயிற்று; அதனுல் அவள் உடல் நலம் குன்றிற்று. அதை ஊராரும் உணரத் தொடங்கி விட்டனர். அஃதறிந்த அப் பெண், தான் கொண்ட அக்காதல் உறவு வெளிப்பட்டு விடுமோ என அஞ்சினுள். அதனுல், அவள் உடல் நலம் மேலும் கெட்டது.

அப் பெண்ணின் இந் நிலையினை அவள் தோழி அறிந்தாள்; அறிவே உருவாய் வந்த அவள், அந்நிலை மேலும் நீண்டால், அப்பெண் இறந்து விடுவள் என அஞ்சினுள். இருவரும் பலர் அறிய மணம் புரிந்துகொள்வதே, அவள் கவலை போக்கும் அருமருந்தாம் என எண்ணினுள். ஆனல், மணவினைக்காம் முயற்சியினை மேற்கோடல் அப்பெண்ணுல் இயலாது; இது அவள் பெண்மைக்கே இழுக்காம்; அதை மேற்கொள்ளுதல் ஆண்மகனுய அவள் அன்

பனுக்கே பொருந்தும். இவ்வுலகியல் உணர்ந்தவள் அவள். ஆகவே, அவள் அவன் பால் சென்றாள்; அவனுக்குரிய பலாமரத் தோப்பைச் சூழ, அரணாக அமைந்துள்ள மூங்கில் வேலியருகே இருந்த அவனைக் கண்டாள்; காதலியின் தோழியைக் கண்ட அவனும், அவள் வழியாகத் தன் காதலியின் நிலைபற்றி அறிந்து கொள்ளும் ஆர்வத்தால், அவளை நெருங்கினான். அவள், அவனோடு, அவன்பால், அங்கு ஏதும் கூறாது, தங்கள் ஊர்ப்புறத்திற்கு அழைத்து வந்தாள். ஆங்கே ஒரு பலா மரம் பாதுகாப்பற்று நின்று கொண்டிருந்தது, அதன் சிறிய கிளையொன்றில், பெரிய பழம் ஒன்று பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. அம் மரத்தருகே இருவரும் நின்றனர்; ஆங்கு அவன் பால் பின் வருமாறு கூறினாள்:

"அன்பே! உங்கள் பலாத் தோப்பு, மூங்கில் வேலியால் சூழப் பெற்றுக் காவல் நிறைந்துளது. மேலும், ஆங்குள்ள பலாமரங்களெல்லாம் வேர்ப் பலா மரங்கள்; பழுத்த பழங்கள் காம்பற்று வீழ்ந்தாலும் பழுதுறா; மேலும் வேலியைத் தாண்டிச் சென்று பழங்களைத் திருடுவதும் இயலாது. ஆகவே, உங்கள் தோப்புப் பலாப் பழங்கள் தாமே பழுத்து வீழ்ந்தும் பாழாகாது; பிறரால் பற்றப்பட்டும் பாழாகாது. அத்தகைய பலாத்தோப்புடையாய் நீ; ஊரில் உள்ள பலாமரங்கள் எல்லாவற்றிற்கும் அந் நன்னிலை வாய்க்காது. இதோ நிற்கும் இப் பலா மரத்தைப் பார். இம்மரத்தைச் சூழ வேலி எதுவும் இல்லை. ஆகவே, இதனருகே எவரும் சென்று, இம்மரத்துக் கனியை எளிதிற் கொண்டு செல்லுதல் இயலும். அம்மட்டோ!; அம்மரத்தில் பழுத்துத் தொங்கும் அக்கனியைப் பார்;

அப்பழம் எவ்வளவு பெரிது; அதைத் தாங்கிக்கொண் டிருக்கும் காம்பு எவ்வளவு சிறிது என்பதனை நோக்கினை கொல்? அவ்வளவு சிறிய காம்பு, இவ்வளவு பெரிய பழத்தை இதுவரையும் தாங்கியிருந்ததே அரிய செயல்; அப்பழம் மேலும் மேலும் பருத்துப் பழுக்கத் தொடங்கின், பிறரால் பறிக்கப்பட்டுப் பாழாவது ஒருபுறம் இருக்கத், தாங்கியிருக்கும் அக்கிளை முறியக் கீழே வீழ்ந்து தானே பாழாதலும் உண்டு. ஆகவே, பழம் பழுத்துப் பக்குவப் படும்வரை காவல் புரிந்து, பக்குவம் பெற்றவுடன், பறித்து வைக்க வேண்டிய பெருங் கவலை,இம் மரத்தை வளர்த்துப் பேணுக் காப்பானுக்குப் பெரிதாம். அது போன்ற கவலை உனக்கு இல்லை. அதனால், இம் மரத்திற்குடையானுக்கு உள்ள கவலை எவ்வளவு பெரிது என்பதை நீ அறியாய். இரு நிலைமைகளையும் எடுத்துக் கூறக் கேட்ட இப்போதாவது. இப்பழம் அளவின்றிப் பருத்துப் பழுத்துத் தானே பாழாகா வண்ணமும், பிறரால் களவாடிச் செல்லா வண்ணமும் காத்து நின்று காலம் அறிந்து பறித்துப் பயன் கொள்ள வல்ல காவலன் ஒருவன் இம்மரத்திற்குத் தேவை என்பது நினக்குப் புரிகிறதா?"

தனக்கும் அவனுக்கும் தொடர்பில்லாதது போல் தோன்றும் இதைக் கூறிய அவள், அம்மட்டோடு நில்லாது, அதைத் தொடர்ந்து; "அன்ப! என் உயிர்த் தோழி நினக்கே உரியவள்! பிறர் எவரும் மணம் பேசி வருதல் இயலாது; எவ்வளவு பெரிய காதல் துயரையும், எவ்வளவு நீண்ட காலத்திற்கு வேண்டுமாயினும் தாங்கி நிற்கும்

உள்ள உரம் அவள் பால் உண்டு என்பன போலும் எண்ணங் கொண்டு கவலையற்றிருப்பது அறிவுடைமை யாகாது; என் தோழியை மணந்து கொள்ளும் மனம் உடையார் எண்ணற்றோர் உளர்; அவள் பெற்றோரும் அவளை அவள் கருத்தறியாதே தாம் விரும்பும் ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்தும் விடுவர்; அவ்வாறாகிவிடின், அவள் நினக்கு அரியள் ஆவள்; அம்மட்டோ! என் தோழியின் உள்ளமோ மிக மிக மென்மை உடையது; ஆனால், அவள் உன்பால் கொண்டிருக்கும் அன்பால், இப்போது அடையும் துயரமோ அளவற்றது. அத்துயரம் மேலும் மிகுமாறு, நீ கவலையற்றிருப்பின், அத்துயர்க் கொடுமையினைத் தாள மாட்டாது அவள் உள்ளமும் உடலும் ஒருங்கே அழிந்தே போம்; அதனாலும் அவள் நினக்கு அரியளாவள்; இது உறுதி. ஆகவே, உரிய காலத்தில், உரிய முறையோடு வந்து மணந்து கொள்வதற்காம் ஏற்பாடுகளை விரைந்து மேற்கொள்வாயாக!" என்று கூறி முடித்தாள். பல மரங்களின் இயல்புகளை எடுத்துக் காட்டி, அதன் வழியே தன் காதலியின் நிலையினையும் தன் கடமையினையும் நினைப்பூட்டிய தோழியின் சொல் கேட்ட அவ்வாண்தகை மணத்திற்காம் ஏற்பாடுகளை விரைந்து மேற்கொண்டு மணந்து மாண்புற்றான்.

தமிழகத்தின் சிற்றூர் ஒன்றில் நிகழ்ந்த இந் நிகழ்ச்சி ஒரு பெண்ணின் காதல், அதைப் பெற்றோன் பேரன்பு, தன் கடமையில் தவறாது கூறுவன கூறி அவ்விரு அன் புள்ளங்களை ஒன்றுபிணித்த தோழிப் பெண்ணின் பேரறிவு ஆகிய உயர்ந்த பண்பாடுகளைக் கொண்டிருத்தல் கண்ட

புலவர் ஒருவர், அதைத் தாம் பாடிய பாட்டொன்றில் வைத்துப் பாராட்டினர்.

" வேரல்வேலி வேர்க்கோட் பலவின்
சாரல்நாட ! செவ்வியை ஆகுமதி !
யார் அஃது அறிந்திசினேரே ; சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு இவள்
உயிர்தவச் சிறிது ; காமமோபெரிது." —குறுந். 18.

மணம் புரிந்துகொண்டு கணவன் வீடு சென்று மனையறம் மேற்கொண்டு வாழ்ந்துவரும் பழந்தமிழ் நாட்டுப் பெண்ணொருத்தி, ஒருநாள் தன் தாய் வீடு வந்திருந்தாள். வந்த அவளை, "கணவன் வீட்டார் உன்பால் அன்பாக இருக்கிறார்களா ? அவர்களையெல்லாம் உனக்குப்பிடித்திருக்கிறதா ? உன் தேவை அறிந்து அளித்து அன்பு காட்டுகிறார்களா ? உனக்கு அங்கு யாதொரு குறையும் இல்லையே ? அவர்கள் வீட்டு உணவெல்லாம் எவ்வாறுளது?" எனத் தன் அன்பும் ஆர்வமும் ஒருங்கே தோன்றக் கேள்வி பல கேட்டாள் அவள் தாய். அது கேட்ட அப் பெண் பின்வருமாறு கூறினள்;

" அன்புடை அன்னாய் ! எங்கள் வீட்டின் பின்புறத்தில் ஒரு தோப்பு உளது; அத் தோப்பின் நடுவே ஒரு குளம் உளது. அந்தக் குளம்தான் ஊரார் உண்ணும் நீர் எடுக்கும் குளம். தோப்பில் உள்ள மரங்கள் உலர்ந்து உதிர்ந்த இலைகளெல்லாம் அந்தக் குளத்தில்தான் விழும். மான் முதலாம் காட்டு விலங்குகள் நீர் உண்பதும் அந்தக் குளத்திலேயே; இலைகள் வீழ்ந்து, மான் கூட்டம் நீர் குடித்துக்

கலக்கிய அக்குளத்திலிருந்துதான் நானும் உண்ண நீர் கொண்டு வருவேன். ஆனாலும், அந்த நீர் எனக்கு எவ்வளவு இனிக்கிறது தெரியுமா? அன்னாய்! முன்பெல்லாம் எனக்குக் கொடுப்பாயே, நம் தோட்டத்தில் விளைந்த தேனைக் கலந்து இனிப்பூட்டிக் கொடுத்த பால், அந்தப் பாலைக் காட்டிலும் அது இனிக்கும். அந்த நீரே, எனக்கு அவ்வளவு இனிக்கும் என்றால், 'அங்குள்ள பிறபொருள்கள் எனக்கு எவ்வளவு இனிக்கும்? ஆங்கு யான் எவ்வளவு இன்பமாக வாழ்கின்றேன் என்பதை உய்த்துணர்ந்து நீயே தெரிந்து கொள்வாயாக!"

வறுமையால் வாடினும், கணவனோடு வாழும் அவன் வீட்டு வாழ்வு, தன் தாய் வீட்டுச் செல்வ வாழ்வினும் சிறப்புடைத்து என்ற கருத்துடையளாய இப் பெண்ணின் செயல், தன் தாய் வீட்டு வாழ்வினும், கணவன் வீட்டு வாழ்வு சிறிது தாழ்ந்திருப்பினும், கணவனை வெறுத்துத் தாய் வீட்டிற்கு வந்துவிடுவதையும், தன் தாய் வீட்டுப் பெருமையினைப் பாராட்டித் தன் கணவனையும், கணவன் வீட்டாரையும் பழி தூற்றுவதையும் இயல்பாகக் கொண்ட பெண்டிற்குப் பேரறம் காட்டும் பெருந் துணையாக விரும்பிய புலவர் ஒருவர், அப் பெண்ணின் பெருஞ் செயலைத் தம் பாட்டிடை வைத்துப் பாராட்டிச் சென்றார்.

"அன்னாய்! வாழி; வேண்டு அன்னை! நம்படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய, அவர் நாட்டு
உவலைக் கூவல்கீழ
மான்உண்டு எஞ்சி கலிழி நீரே!"—ஐங்குறுநூறு: 202.

மக்களைப் பேணி வளர்க்கும் பண்பும், பக்குவமும் நன்கு வாய்க்கப் பெற்றவர் மகளிர். தான் பெற்ற இளம் சிறார்களுக்கு அறிவுரைகளை அன்பு கலந்து ஊட்டும் அப் பணியினைப் பிற மகளிர்பால் ஒப்படைப்பதினும், அதை, அச் சிறுவர்களைப் பெற்ற அத்தயேர் மேற்கொண்டால், அச் சிறுவர்கள், மாண்பு நிறைந்த ஆண்தகைகளாய் வளர்ந்து வாழ்வு பெறுவர். ஒரு தாய் அறிவன அறிந்த அறிவுடையவள்; தாயன்பு நிறைந்தவள்; தவறு செய்தால், செய்தவர் தன் கணவனே ஆயினும், அத்தவற்றினை எடுத்துக் காட்டி இடித்துரைத்துத் திருத்துவதும் தன் கடனே எனக் கொண்ட தலையாய அறிவுடையாள்; அத்தகையாள் கணவன், ஒழுக்கம் தவறிவிட்டான்; மனைவியைப் பிரிந்து பரத்தை வீடு சென்றுவிட்டான்; பின்னர், பிழை உணர்ந்து வீடு திரும்பினன். அவன் வீடு திரும்புங்காலை, தன் மகனுக்கு அறிவுரை கூறும் அப்பணி மேற்கொண்டிருந் தாள் அவள். அந்நிலையினைக் கிடைத்தற்கரிய வாய்ப்பாகக் கொண்டு, கணவன் நற் பண்பு கண்டு பாராட்டும் தன் உள்ளம், அவன் பழி செயல்கண்டு பழிக்கும் என்பதை அவனுக்கு எடுத்துக் கூறித் திருத்த எண்ணினள். உடனே தன் மகனை அழைத்து அணைத்துக்கொண்டே, அவனுக்கு அறிவுரை கூறுவாள் போல் பின்வருமாறு கூறி முடித்தாள்:

"என் அன்பைக் கொள்ளை கொண்ட அருமை மகனே! 'தந்தையர் ஒப்பர் மக்கள்' என்று உலகப் பெரியோர்கள் உரைப்பதற்கேற்ப, உன் தந்தையின் வடிவையும் வனப்பையும் பெற்று விளங்குகின்றனை; அதைக் கண்டு யானும் மகிழ்கின்றேன். ஆனல் உன் தந்தை குணங்களுள்

கொள்ளலாம் குணங்கள் இவை, தள்ளலாம் தவறுகள் வை என்பதை யான் கூற அறிந்து மேற்கொள்ளவதல்லது, அவர்பால் காணலாம் குணம், குணமின்மை ஆகிய அனைத்தை யும் அவ்வாறே கொண்டுவிடுதல் கூடாது. தன்னோடு பகைத்து போர்கொண்டு எழுவார்மீது, பாய்ந்து சென்று, போரிட்டுப் பாழ்செய்து வெல்லும் பேராண்மை உடையவர் அவர். அப் பேராண்மைக் குணத்தினை நீயும் தவறாது மேற்கொள்ளுதல் வேண்டும். இவர் நமக்கு வேண்டியவர்; ஆகவே, இவர் பிழை புரிந்தாலும் பொறுத்துக் கொள்ளவேண்டும். இவர் நம் பகைவர்; ஆகவே இவர்பால் பிழை இல்லையாயினும் பற்றித் தண்டித்தல் வேண்டும் என்று எண்ணாது, காய்தல் உவத்தல் இன்றி, நடுவுநிலைமையில் நின்று, எவர்க்கும் ஒப்ப நாடி, ஒரு நிலையே நீதி வழங்கும் நேர்மை உன் தந்தைபால் உளது; அதையும், நீ விடாது மேற்கொள்ளுதல் வேண்டும்; நம் வீட்டின் வாயிற்கண் வந்துநின்று, பொருள் வேண்டி இரப் பார்க்கு, வரையாது வழங்கும் வள்ளல் உன் தந்தை, அவ் வள்ளன்மையினையும், நீ வரையாது மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால், தன்னோடு மனம் ஒன்றி வாழும் மகளிர், மாறாத்துயர்கொண்டு மாளுமாறு, பிரிந்து சென்று பிறை புரிந்து வாழும் இழிகுணம் ஒன்று அவர்பால் உளது; அதை மட்டும் நீ மேற் கொள்ளுதல் கூடாது.''

கொள்ளலாம் குணங்கள் இவை; தள்ளலாம் குற்றங்கள் இவை எனத் தன் மகனுக்கு அறிவுரை ஊட்டுவாள்போல், தன் கணவன் செய்த தவற்றினை, அவன் முன்னிலையிலேயே

அவன் கேட்டுச் சினவா வகையில், " தாய் போல் கழறித் தழீஇக் கோடல் ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்து " என மொழிப " என்ற விதிக் கிணங்க, அன்புரையால் அறிவுரை ஊட்டிய இப்பெண்ணின் செயல், " பெண்டிர்க் கழகு எதிர் பேசாதிருத்தல் " என்ற பிழை அறிவுடையராய்க் கணவர் தவறு செய்யினும், கண்ணீர் விட்டுக் கலங்கி நிற்பதல்லது கண்டித்துத் திருத்துதல் கூடாது என்ற எண்ணம் வாய்க்கப் பெற்ற அடிமைப் பெண்களுக்கும், கணவன்பால் சிறு பிழை காணினும், ஏன், பிழையே காணாத விடத்தும், வன்சொல் வழங்கி, வல்வழக்குத் தொடுத்து வாழ்விழந்து போகும் வாயாடிப் பெண்களுக்கும் பேரறிவூட்டும் பெருந்துணையாதல் வேண்டும் என விரும்பிய புலவர் ஒருவர், அப்பெண்ணின் செயலை இலக்கியமாக்கி இன்புற்றுச் சென்றுளார்:

"செம்மால்! வனப்பெலாம் நுந்தையை ஒப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்தகுறி என்வாய்க் கேட்டு ஒத்தி;
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றிமாட்டு ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி
ஒன்றினேம் யாம் என்று உணர்ந்தாரை நுந்தைபோல்
மென்தோள் நெகிழவிடல்.

பால்கொளல் இன்றிப், பகல்போல் முறைக்குஒல்கா
கோல்செம்மை ஒத்தி; பெரும! மற்றுஒவ்வாதி
கால்பொரு பூவின் கவின்வாட நுந்தைபோல்
சால்பாய்ந்தார் சாயவிடல்;

*வீதல்அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு*
*ஈதல்மாட்டுஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி*
*மாதர்மென் நோக்கின் மகளிரை நுந்தைபோல்*
*நோய்கூர நோக்காய் விடல் ''* — கலித்தொகை 86.

அன்பு கொண்டு ஆசையோடு மணந்துகொண்ட மனைவியோடு வாழ்கிறான் ஓர் இளைஞன். மணமும் அண்மையிலேயே முடிந்தது. இளைஞன், இல்லிருந்து நல்லறமாற்றி வாழ வேண்டும்; அறவோர்க்கு அளித்தும், அந்தணர் ஓம்பியும், துறவிகட்குத் துணை புரிந்தும், விருந்தினரை வரவேற்றுப் போற்றியும் வாழ் வாங்கு வாழ வேண்டும்; அதுவே இல்லறம் மேற் கொண்டாரின் இயல்புடைப் பண்பாம் என்ற இல்லற நெறி உணர்ந்தவன். அம்மட்டோ! அவ்வில்லறத்தை இனிது ஆற்றுதற்கு இடைவிடா உழைப்பு வேண்டும்; திரைகடல் ஓடித் திரண்ட பொருள் கொண்டு வருதல் வேண்டும்; இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும் அசையுடன் இருந்தோர்க்கு ஆகாது என்ப; ஆகவே, பொருளும் புகழும் பெருமுயற்சி உடையார்க்கே உண்டாம்; ஊக்கமும் உரனும் காட்டி உழைக்காது, உறங்கிக் கிடப்பார்க்கு உண்டாகாது என்ற உணர்வும் வரப் பெற்றவன் அவ்விளைஞன். அதனால், அழகும் அன்பும் ஆற்றலும் பெற்ற தன் ஆருயிர் மனைவியைப் பிரிந்து பொருள் ஈட்டி வருவான் வேண்டி, வேற்றூர் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

இன்பம் தரும் பொருளின்பால் எளிதில் இரங்கி விடுவது மக்கள் உள்ளத்தின் இயல்பு. ஒரு புல இன்பத்

திற்கே அவ்வாறும் அவ்வுள்ளம், ஐம்புலங்களுக்கும் ஒருங்கே இன்பம் தரும் மகளிர்பால் நெகிழ்ந்து விடுவதில் வியப்பேதும் இல்லை. மேலும், அவ்விளைஞன் மனைவியோ, ஈடிலாப் பேரழகும் பேரன்பும் உடையவள்; பின்புறத்தே தாழ்ந்து ஆடும் பின்னலும், கருங்குவளை மலர் போலும் மையுண்ட கண்களும் அவள் அழகினை மேலும் அதிகப் படுத்தியுள்ளன. அத்தகையாளைப் பிரிந்து செல்கிறான் இளைஞன். பிரிந்து வந்து விட்டானேனும், அவளை மறந்து விடுதல் அவனால் இயலாது போயிற்று. பிரியுங்கால் அவன் கண்ட அவள் பேரழகுத் தோற்றம், அவனைப் பிரிந்து வாழ மாட்டாது அவள் கொண்ட பெருந்துயர் நிலை ஆகிய அவ்விரண்டும், அவன் உள்ளத்தை விடாது பின்தொடர்ந்தன. அவனோ இளைஞன்; காலமோ, மனைவியோடிருந்து இன்புற்று வாழ வேண்டிய காலம்; அவளோ பேரழகும் உடையாள்; மணமும் அண்மையிலேயே நடந்துள்ளது. இந்நிலையில், அவன் உள்ளம், அவள் அழகிற்கு அடிமையாகி விட்டது.

அடிமைப்பட்ட அவ்வுள்ளம், வழியே சென்று கொண்டிருந்த இளைஞனை, மேலே செல்லாவாறு தடுத்து விட்டது; அன்பும்; அழகும் உடைய அவளைப் பிரிந்து வருவதே தவறு. அன்பாலும், அழகாலும்; இளமைச் சிறப்பாலும் இன்பம் தருவாளை, அவள் பிரிவினைப் பொறுக்காது பெருந்துயர் கொண்டு வருந்த விட்டுப் பிரிந்து வருதல் பெருந் தவறு, ஆகவே உன் இன்பம் கருதி இல்லையாயினும், அவள் துன்பம் துடைத்தல் கருதியாயினும், மேலே செல்லாது மீண்டு ஊர் செல்வாயாக என எடுத்துக் கூறியது, இளைஞன்

ஏற்கனவே காதல் நிறைந்தவன். காதல் உடையார் கண்ணீர் காணின், எதற்கும் கலங்கா அவன் உள்ளம், கலங்கி விடும். அத்தகையானுல், தன் காதலியின் துயர் நிலையினைப் பிறர் எடுத்துக் காட்டிய பின்னரும், அக்காதலிபால் சென்று, அவள் கண்ணீர் துடைக்காது, கருதிய காரியத்தை மேற்கொள்ளுவது இயலாது போயிற்று. அதனுல், விரைந்து சென்றவன், வழியில் நின்று விட்டான்; திரும்பி ஊர் நோக்கி மீளத் துணிந்தான்.

பொருள் ஈட்டிவரும் முயற்சி மேற்கொண்டு வந்த இளைஞன், அவன் காதல், காதலையும் கடமையையும் எண்ணி எண்ணி அவன் உற்ற கலக்கம், இடைவழியில் உள்ளம் அவனுக்கு உரைத்தவை அது கேட்ட அவன் தடுமாற்றம், மீண்டும் ஊர் செல்வான் வேண்டி மயங்கி நிற்கும் அவன் நிலை ஆகிய இவற்றையெல்லாம் அவன் அறிவு கண்டது. உடனே உள்ளத்தை நோக்கி, " எதையும் எண்ணித் துணிதல் வேண்டும். ஒரு தொழிலைத் தொடங்காமல் இருப்பது நன்று. தொடங்கிவிட்டால், அதைக் குறைவற முடித்து வெற்றி கண்ட பின்னரே, வேறு தொழிலைச் சிந்தித்தல் வேண்டும். அவ்வாறின்றித் தொடங்கி இடையே மடங்கி விடுதல் மாண்புடைத்தன்று, இதை உணர்தல் வேண்டும். மனைவியைப் பிரிந்து வந்திருத்தல் கூடாது; பிரிந்து பொருள் தேடி வந்துவிட்டோம்; வந்த வினையை, இடையே கைநழுவவிட்டு விட்டு ஊர் திரும்புதல் அறிவுடைமை ஆகாது. அஃது அறியாமை என்பது மட்டுமன்று, பிறர் கண்டு, எள்ளி

நகையாடிப் பழிக்கத்தக்க பெரும் பழியுமாம். ஆகவே, நம்மை உடையானை, உயர்நிலைக்குக் கொண்டு செல்வதற்கு, மாருக, இழிநிலைக்கு இழுத்துச் செல்லும் எண்ணத்தை ஈண்டே விட்டொழிக. வினைமேற் செல்வானை வழியிடைத் தடுத்து நிறுத்தாதே'' என்று அறிவுரை பல வழங்கிற்று.

அறிவு உரைத்த அறவுரையினைக் கேட்டான் இளைஞன்; உள்ளம் கூறியன கேட்டு ஊர் நோக்கிப் புறப்பட்ட அவன் கால்கள் அந்நிலையே நின்று விட்டன. உள்ளம் பின்புறம் ஈர்ப்ப, அறிவு முன்புறம் உந்தக் கால்கள் அசையமாட்டாவாயின. இளைஞன் செய்வ தறியாது திகைத்தான். முன்னேக்கிச் செல்வதோ, பின்னேக்கி மீள்வதோ செய்யாது வழியிலேயே நின்று விட்டான். உள்ளம் எடுத்துக் காட்டிய காதலியின் அழகும், அன்பும், பிரிவுத் துயர் பொருது கண்ணீர் பெருக நிற்கும் அவள் கலக்கமும் அவனை ஊர் நோக்கியும் அறிவு எடுத்துக் காட்டிய கடமை உணர்ச்சி, வினைமேற் கொண்டார் அவ்வினை யாற்றுமாறும் துரத்தின. அதைக் குறைவறச் செய்து முடிப்பதால் ஆம் புகழ், இடையே விட்டு மீள்வதால் ஆம் பழி ஆகிய இவைகள், அவனை வினைமேல் விரைந்து செல்லத் தூண்டின. இவ்வாறு உள்ளம் ஒருபால் இழுக்க, அறிவு ஒருபால் உந்த இளைஞன் செய்வதறியாது கலங்கினன். உள்ளத்திற்கும், அறிவிற்கும் நடைபெறும் இப் போராட்டத்தை ஒதுங்கி நின்று பார்ப்பதல்லது, அவற்றுள் ஒன்றன்பால் நிற்கும் துணிவு உண்டாகவில்லை. அப் போராட்டத்தின் விளைவால், தன் உடலும், உயிரும் அழிந்துவிடுமோ என அஞ்சினன்.

அந் நிலையில் அவன் கண்ட காட்சியொன்று அவன் மனக் கண்முன் தோன்றி மருட்டிற்று.

பெரிய மத யானைகள் இரண்டு மாறுபட்டுப் போரிடுகின்றன. அவை இரண்டும் மேற்கொண்ட போராட்டத்திற்குக் காரணமாகியது ஒரு சிறிய கயிறு. யானைகள் இரண்டும், அக் கயிற்றின் இரு முனைகளையும் பற்றிக்கொண்டு ஈர்க்கின்றன. ஆற்றல் ஆண்மைகளில் இரண்டும் குறையுடையன அல்ல. அக் கயிற்றைப் பெறும் ஆசை, அவை இரண்டின் உள்ளத்திலும் நிலைத்து விட்டது. அதனால், ஒன்றற்கொன்று ஒரு சிறிதும் விட்டுக்கொடாதே பற்றி இழுக்கத் தொடங்கின. அந் நிலையில், அவற்றின் கைகளுக்கிடையே புதிய வலிய கயிறு சிக்குறினும் வலிவற்று அழிந்துபோம். ஆனால் யானைகளுக்கிடையே அகப்பட்டு ஈர்க்கப்படும் அக்கயிறோ ஒரு பழங் கயிறு. யானைகள் வெற்றி காணும்வரை அழியாது நிற்பது அரிது. அது அவற்றின் ஈர்ப்பைத் தாங்கவல்ல திண்மை உடையதன்று. நைந்து தேய்ந்து போன புரிகளைக் கொண்டது அது: யானைகள்பற்றி ஈர்த்தபோதே அறுந்து அழிந்து போயிருக்க வேண்டியது; இதுகாறும் இருந்து ஈடு கொடுத்ததே அரிது; சிறிது சிறிதாக அறுந்து அழியவும் தொடங்கி விட்டது; இப் போதோ, இன்னமும் சற்று நாழிகையிலோ, அடியோடு அறுந்து போவது உறுதி; இந்தக் காட்சியே அவ் விளைஞன் கண்ட காட்சி.

அக் காட்சியைக் கடைசிவரைக் காணவும் முடிய வில்லை அவனால்; உள்ளமும், அறிவும் ஒன்றோடொன்று

மாறுபட்டுச் செய்யும் போராட்டத்திற்கு நிலைக்களமாய் அமைந்த தன் உடலும், யானைகளால் ஈர்ப்புண்டு, அழிந்துபோன கயிறேபோல் அழிந்து விடுமோ என அஞ்சினன். அஃது ஏற்கெனவே அழியத் தொடங்கி விட்டது என்பதற்கான அறிகுறிகளும் தோன்றின. செயலற்று மயங்கி மாருத்துயர்கொண்டு வருந்தினன்.

ஆசையால் நிறைந்து, அஃதுடைமையால் உயர் நிலைக்குச் செல்வது உலகம். ஆசை அற்றவர் உயர் நிலை பெறுதல் இயலாது. ஆகவே, ஆசையை அறவே கைவிடு தல் கூடாது. ஆனல் அந்த ஆசை அளவோடு அமைதல் வேண்டும். நல்லனவற்றின்பால் செல்லுதல் வேண்டும். அது அந்த வரையறைக்குள் இருக்கும் வரை நன்று; ஆனல், அது அளவிற்கு மீறிச் செல்லினும், அறனல்லன மீது செல்லினும் அதை அடக்கி ஆளுதல் வேண்டும். அவ்வாறு ஆசையை வென்று அடக்கியவரே, உலகில் விழுமிய நிலை அடைவர். ஆனல், அந்த ஆசையை அடக்கு வது அத்துணை எளிதன்று; அதை அடக்கி ஆளவல்ல ஆண்மை, அறிவு ஒன்றற்கே உண்டு; ஆசையை, அது சென்றவிடத்தில் செல்லவிடாதும், தீயவற்றின்பால் செல்வதைத் தடுத்தும், நல்லவற்றின்பால் செல்லவிட வல்லது அறிவு ஒன்றே. ஆசை அறிவிற்கு எளிதில் அடங்கி விடுவதில்லை; ஆசையை அடக்க அறிவு மேற் கொள்ளும் போரில், அவ்வறிவு ஆசைக்குத் தோற்று அடிமையாகி விடுதலும் உண்டு. ஆனல், வெற்றி தோல்வி காணும்வரை, அவை மேற்கொள்ளும் போராட்டம், அம்மம்ம! கொடிது கொடிது! மனப் போராட்டம்

னைப் பெயர் பெறும் இப்போராட்டத்தால் அழிந்தார் எத்தனை ஆயிரவரோ ?

காதல், கடமை ஆகிய இரண்டையும் ஒப்பமதித்து அவற்றுள் எதையும் கைவிடக் கருதாது, இரண்டையும் ஒருங்கே பெறுதல் வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத் தால், காதலியைப் பிரிந்து பொருள் சேர்க்கும் கடமை மேற்கொண்டு வந்து, இடை வழியில் காதலியின் கண்ணீர் கண்டு கலங்கி, மீண்டும் கடமை நினைந்து மேற்சென்று, இவ்வாறு காதலாலும், கடமையாலும் மாறி மாறிக் கட்டுண்டு, அப் போராட்டத்தால் உடல் தளர்ந்து, காதல் உள்ளத்தால், கடமையை விரைவில் ஆற்றி விழுப்புகழ் பெறத் துடிக்கும் அவ்விளைஞனைக் கண்ட ஒரு பெரியார், ஆசையும் வேண்டும் ; ஆனல், அது அளவோடு அமைதலும் வேண்டும் ; அளவிற்கு மீறியவழி அதை அடக்குதலும் வேண்டும் என்ற அறிவுடையார் உலகத்தில் அரியர். அத்தகையாரே, உலகத்தில் உண்மையான புகழைப் பெறுவார் ; அத்தகைய உள்ளம் வாய்ந்தவர், உலகில் நிறைந்துவிடின், அவ்வுலகில் அமைதி நிலவும் என்ற உண்மையை உலகறிய உணர்த்தும் உயர்ந்த வழிகாட்டி யாருக அவன் செயல், என்ற நல்லெண்ணத்தால், அவன் மனப் போராட்டத்தை அழகிய பாட்டொன்றில் வைத்துப் பாராட்டிச் சென்றுள்ளார் :

புறந்தாழ்பு இருண்ட கூந்தல், போதின்
நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்,
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும் ;

செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யாமையோடு இளிவுதலைத் தரும் என
உறுதி தூக்கத் தூங்கி, அறிவே
சிறிதுநனி விரையல் என்னும், ஆயிடை
ஒளிறேந்து மருப்பின் களிறு மாறு பற்றிய
தேய் புரிப் பழங் கயிறு போல
வீவதுகொல் என்வருந்திய உடம்பே.''

—நற்றிணை : 284.

அக வாழ்க்கையில் அன்பு காட்டி வாழ்ந்த பழந் தமிழ் மக்கள், புறவாழ்க்கையில் பேராண்மை புலப் பட வாழ்ந்தனர். தம் அகவாழ்வு அமைதி நிறைந்த பெரு வாழ்வாக விளங்க வேண்டும் என்று விரும்பிய அவர்கள், ஆங்கு அவ்வமைதி நிலவ வேண்டின், தம் புற வாழ்விலும் அமைதி நிலவ வேண்டும் என்ற உண்மையை உணர்ந்திருந்தனர்.

எந்த நாடு, செல்வத்தால் சிறந்து விளங்கு கிறதோ, அந்த நாட்டிலேயே அகவாழ்வு அமைதி நிறைந்த பெருவாழ்வாக விளங்கும். பண்டைக் காலத்தே தமிழ் வழங்கும் நாடு மட்டுமே செல்வத்தில் செழித்துத் திகழ்ந்தது; அதைச் சூழ உள்ள நாடுகள் எல்லாம், அத்துணை வளம் செறிந்து விளங்கவில்லை. காடும், மலையும், காட்டாறுகளுமாய்க் காட்சியளித்து வளமறியாது விளங்கிய அந்நாடுகளில் வாழ்ந்த மக்கள் கூட்டம் கூட்டமாகக் தமிழ்நாட்டுள் நுழைந்து கொள்ளையிட்டுச் செல்லத் தலைப்பட்டனர். கோசர் மழவர், வடுகர், களப்பாளர் போன்ற நாடோடிக் கூட்டங்களும் ஆரியர், மோரியர் போன்ற வடநாட்டு அரச இனத்தவரும் தமிழகத்துள் புகுந்து போரிட்டுத்

தமிழ் நாட்டுச் செல்வங்களைக் கொள்ளை கொண்டும், தமிழகத்து அமைதி மிகுந்த அரசியல் வாழ்வை நிலை குலையச் செய்தும் திரிந்தமைக்கும், அக்காலத்தே தமிழ் நாடாண்டிருந்த சேர, சோழ, பாண்டியப் பேரரசர்களும், குறுநில மன்னர்களும், அவர்களை வென்று துரத்தி விழுப்புகழ் கொண்டமைக்கும் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இவ்வாறு பகைவர் பலர், தம் நாட்டிற்குள் புகுந்து அழிவு செய்து செல்வதால், நாட்டின் புற வாழ்வில் அமைதி குலைவதையும், நாட்டில் அமைதி குலைவதால், வீட்டிலும் அமைதி குலைவதையும், கண்ட பழந்தமிழ் நாட்டு ஆடவரும் மகளிரும், நாடுகாவலில் நாட்டம் கொண்டனர். தங்கள் நாட்டிற்குக் கேடு வந்துறு வண்ணம் காத்தலைத் தம் தலையாய கடமையாகக் கொண்டனர். அதன் விளைவாய், அக்காலத்து ஆடவர் மகளிர் இரு பாலாரும், வீரம் செறிந்து விளங்கினர். "போர்க் குறிக்காயமே புகழின் காயம்," "அதுவும் புண்ணோ? புகழின் கண்ணே," என்ற பேரெண்ணம் உடையராய்ப் போரிட்டு, வீரப்புண் பெறாத நாளை வீண் நாள் என வெறுத்தனர் வீரர்கள்; "விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன் நாளை எடுத்து" என்றார் வள்ளுவனார். வீர மக்களைப் பெறாத மகளிர் மலடிகள் எனப் பழித்துரைக்கப் பெற்றனர். அதனால், அக வாழ்க்கையின் அன்பையும், அருளையும் அறநெறியையும் தம் பாடற் பொருளாகக் கொண்டவர்கள், அக்கால ஆடவர் மகளிர்பால் பொருந்திக் கிடந்த ஆண்மைச் சிறப்பை

யும் தம் இலக்கியப் பொருளாகக் கொண்டு இனிய பாக்கள் பல பாடிச் சென்றனர். அவற்றுள் ஒரு சில :

பகையரசர் இருவரின் இரு பெரும் படைகளும் ஒரு புலத்தே எதிர்த்து நின்றன. எதிர் எதிர் நிற்கும் இரு படைகளுக்கு மிடையே வந்து நின்முன் ஒரு படையைச் சேர்ந்த வீரன் ஒருவன். வந்து நின்றவன், தனக்கு முன்னே நிற்கும் பகைவர் படையை நோக்கி " பகைவர்காள் ! எங்கள் படைத் தலைவன் பேராண்மை அறியாது பகை கொண்டு விட்டீர்கள் ! எங்கள் படைத் தலைவன், படைக் கலங்களோடு களம் புகுந்துவிடின், வில்லும் வேலும் வாளும் முதலாம் அவன் கைப்படைகளால் அழிவுறுத படைகளும் உளவோ ? பாரெலாம் திரண்டு வரினும், தன் படைக்கலங்களால் பாழாக்கும் பேராற்றல் உடையவன். அவன் பேராண்மை அறியாது பகைத்துக் கொண்டீர்களே ! உங்கள் பேதமைதான் என்ன !'' என்று கூறித் தன் படைத் தலைவன் பெருமையினைப் பாராட்டினன்.

அது கேட்டான், அவன் பகைவர் படையின்முன் வரிசையினல் நிற்கும் வீரன் ஒருவன். அவன் கூறியன கேட்டு நடுக்கம் தோன்றுவதற்கு மாருக, அவனுக்கு நகையே தோன்றிற்று. பகைவர் படைத் தலைவன் பேராண்மை குறித்து அவன் படைவீரர் கூறியன, அவனுக்கு உண்மைப் பெருமையாகத் தோன்றவில்லை. அப் படைத் தலைவனைவிடத் தன் படைத் தலைவனே பேராற்றல் மிக்கவன் என அறிந்தான். உடனே, பகைவர் படை வீரனை நோக்கிப் பின் வருமாறு கூறினன் :

"வீர ! உங்கள் படைத் தலைவன்பால் உளதாக நீ கூறும் அப்பேராண்மை, உண்மையில் பேராண்மையாகாது ! படைக் கலங்களோடு களம் புகுந்து, பகைவரை வெல்லுதல் உங்கள் படைத் தலைவன் ஒருவனாலேயே இயலும் என எண்ணுகின்றனையே, என்னே நின் பேதைமை ! அவ்வாறு போரிட்டுக் களம் வேறல் எம் போலும் வீரர்க்கும் எளிதில் இயலக் கூடியதன்றோ ? எல்லோரும் எளிதில் முடிக்கவல்ல ஒரு செயலைத் தானும் முடிப்பதோ தறுகணாளர்க்கு அழகு ? ஒருவன், உண்மையில் பெரு வீரனாயின் அவனொடு பகை கொள்வாரும் இருத்தல் ஒண்ணுமோ ? அறியாமையாற் செய்த பிழை கண்டு, ஒரு சிலரோடு அவன் பகை கொண்டு விடுவனாயின், அப் பகைவர் அவனைக் காணவுமன்றோ நடுங்குதல் வேண்டும் ? பாம்பினிடத்தில் அச்சம் உளது எனின், அவ்வச்சம் அப் பாம்பைக் கண்டவிடத்து மட்டுமே உண்டாதல் இல்லை ; அது வாழும் புற்றைக் காணினும் அச்சம் உண்டாம் ; கொல்லும் ஆனேறு கண்டு அஞ்சுவார், அதைக் கண்ட விடத்து மட்டுமே அஞ்சுவர் என்பதில்லை. அதுதிரியும் ஊர் மன்றத்தைக் காணினும் உள்ளம் நடுங்குவர். அதைப் போல், உண்மை வீரனைக் கண்ட விடத்து மட்டுமேயல்லால், அவன் வாழும் அரணைக் காணினும், பைகவர் அஞ்சி ஓடுதல் வேண்டும். அதுவே உண்மை வீரனுக்கு அழகு. பகைவர், அதன் படைபலம் கண்டும் அஞ்சாது, படையெடுத்து வர, அவர்மீது படையோடு சென்று போரிட்டு அழிக்கும் ஆண்மையும் ஓர் ஆண்மையோ ? தன்னையே எதிர்த்துப் படையெடுத்து வருமளவு வளர்ந்த பகைவரை உடை

யானும் ஒரு வீரனோ? பகைவர் எங்கள் தலைவனைக் காணவும் நடுங்குவர்; அவனைக் காண மட்டு மன்று, அவன் வாழும் அரணைக் காணினும் அஞ்சுவர். பகைவர் தான் வாழும் இடம் காணவும் அஞ்சுமளவு பேராண்மை பெற்று விளங்கும் எங்கள் படைத்தலைவனன்றோ, உண்மையில் பெரு வீரனவன்.''

உண்மையில் ஒருவன் பெரு வீரனாயின் அவன் களம் புகுந்து படையெடுத்தல் கூடாது; அவன் பாசறைக் கண் உளன் என்பதறிந்தே, அவன் பகைவர் புறங்காட்டி ஓடுதல் வேண்டும் என்று கூறி, ஆண்மைக்குப் புதுப் பொருள் கண்ட அப்பழந்தமிழ் வீரன் சொல்கேட்ட புலவர், அவ்வீரன் உள்ளத்தைத் தம் பாடற் பொருளாக்கிப் பாராட்டிச் சென்றார் :

'' இரும்பு முகம் சிதைய நூறி ஒன்னார்
இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் எளிதே ;
நல்லரா உறையும் புற்றும் போலவும்,
கொல்லேறு திரிதரு மன்றம் போலவும்
மாற்றரும் துப்பின் மாற்றோர், பாசறை
உளன்என வெரூஉம் ஓர் ஒளி
வலனுயர் நெடுவேல் என்னை கண்ணதுவே.''

—புறம். 309

வீரர்களைப் பெற்றுப் பேணித்தரும் பெருமை மிக்க மறவர் குடியில் வந்த தாயொருத்தி, தமிழகத்தின் சிற்றூர் ஒன்றில், அழகிய சிறிய வீடொன்று அமைத்து வாழ்ந்து வந்தாள். அவள் பெற்ற ஒரே மகன், நாடு காவல் கருதி நடைபெறும் போரில் கலந்து கொள்வான் போயிருந்தான். சென்றவன், நாட்கள் பல ஆகியும்

மீண்டானல்லன். அவன் ஆண்மைச் சிறப்பறிந்து அக மகிழ்ந்து வாழ்த்திய அவ்வூரார், அவனைப் பல நாட்களாகப் பாராமையால் பெரிதும் வருந்தினர். அவ்வூர் வாழ் பெண் ணொருத்தி, ஒருநாள் அவன் வீடு சென்று, ஆங்கு அவன் தாயைக் கண்டு, அவளருகில் உள்ள தூண் ஒன்றைப் பற்றி நின்றவாறே, "அன்னாய்! பேரன்பு காட்டிப் பெற்ற உன்னையும் மறந்து பிரிந்து சென்ற உன்மகன் நெடு நாட்களாகியும் வந்திலனே; அவன் யாண்டுச் சென்றுளன்? எப்போது வருவன்? அவனைக் காண வேண்டின், யாங்குச் சென்றால் காணலாம்?" என்று தன் அன்பும் ஆர்வமும் தோன்ற வினவினாள்.

அது கேட்ட அத்தாய், "எங்கள் மீது பேரன்பு கொண்டு வந்து கேள்வி பல கேட்டு நிற்கும் உனக்கு என் நன்றி; பெற்ற மகன், என்னைத் தனியே விட்டுச் சென்றமை கண்டு வருந்தி நிற்கும் நினக்கு ஒன்று கூறுவேன் கேள்; காட்டில் பிறந்த புலிக்குட்டி, இளமைக் காலத்தில், காட்டிடையே உள்ள மலையிடத் தமைந்த குகைகளில் இருந்து வாழ்கிறது. அது அங்கு வாழும்வரை, அதற்கு இடையூறு வாராவகை காத்துநின்ற அதன் இனப் புலிகள், அது எப்போதும் அக்குகையிலேயே வாழ வேண்டும் என விரும்புவ தில்லை. அவை விரும்பினும், அக்குட்டி சிறிது வளர்ந்ததும், அக்குகை வாழ்வை வெறுத்து வெளியேறிக் கன்னி வேட்டையாகப் பெரிய களிற்றினைக் கொல்வதையே விரும்பும்; அதுவே அதன் இயல்புமாகும்.

"அதைப் போலவே, மக்களைப் பெற்றுப் பேணி வளர்ப்பது மட்டுமே பெற்றவள் கடனும்; பிறந்த மகன் பெரியவனுயதும், வாளோடு களம் சென்று, களிறுகள் பலவற்றை வெட்டி வீழ்த்தி வெற்றி பெறுவதே அவன் பெருங்கடனும். இருவர்க்குரிய இக் கடமைகளை உணர்ந் தவள் யான் புலி போன்ற ஊக்கமும் உரனும் உடைய வன் என் மகன்; ஆகவே, தன் ஆண்மையினைத் தோற்றுவிக்குமாறு அமர்மேற் சென்றுவிட்டான்; அந்த வாழ்வையே நானும் விரும்பினேன்; அவன் தன் கடமை மறந்து, எப்போதும் என் அண்மையிலேயே இருக்க வேண்டும் என்று ஆசை கொள்வேனல்லள்; அவ்வாறு ஆசை கொள்ளுதல் அறமுமாகாது. அவனைப் பெற்ற வளும் யானே; அவனைப் பெற்றதும் இவ்வயிறே; ஆயினும், அவன் வளரும் வரை, இடம் அளித்துக் காக் கும் கடமையல்லது வேறு உரிமை எமக்கு இல்லை. ஆகவே, பிறந்த அவன் பெரியவனுகும்வரை ஈண்டு இருந்தான்; கடமையுணரும் காளையாயினபின் அக்கடன் மேற்கொண்டு களம் புகுந்துவிட்டான்; ஆகவே, அவனைக் காண வேண்டுமாயின், அக் களம் சென்றே காணுதல் வேண்டும்" என்று பெருமிதம் தோன்றக் கூறினுள்.

ஈன்று புறந்தருதலோடு தன் கடன் முடிந்தது; அவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பும் அந்நிலையே அற்றுவிட்டது; ஆகவே, அவன் களம் புகுந்து களிறு எறிந்து பெயர்ந்து கடனாற்றும் காளையாதல் கண்டு களித் தல் அல்லது, அவன் எப்போதும் தன்னேடே இருத்தல் வேண்டும் என விரும்புவது தக்கதன்று எனக் கருதும் மறக்குடி வந்த இம்மகளின் உள்ளம் உணர்ந்த ஒரு

புலவர், அவ்வுள்ளமே தம் பாடற் பொருளாக, ஓர் அழகிய பாட்டொன்று ஆக்கி, அகமகிழ்ந்து அளித்துச் சென்றுளார்.

> ''சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
> யாண்டுளனோ எனவினவுதி; என்மகன்
> யாண்டுளனாயினும் அறியேன்; ஓரும்
> புலிசேர்ந்து போகிய கல்லளை போல
> ஈன்ற வயிறும் இதுவே;
> தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே!''
>
> —புறம். 86.

நாடு காவல் குறித்து வளர்த்த வீரம். நாட்கள் செல்லச் செல்ல, நாட்டழிவிற்கே காரணமாய் மாறிவிட்டது. நாளடைவில் புறப்பகை மறைந்துவிட்டது. அதனால் அவரோடு மேற்கொண்ட போர்களும் இல்லாயின. ஆயினும், போர் மறவர் குடியிற் பிறந்து போர் அன்றி வேறு எதுவும் அறியாது வாழ்ந்து வந்த வீரர்கள் தம் போர்வேட்கையைத் தணித்தல் அறியாயினர். மேலும், தமிழகத்தில் அரசோச்சி வாழ்ந்த அரசர்களும். புறப் பகையாய பொதுப்பகை இல்லாகவே, தம்முள்ளே ஒருவரோ டொருவர் பகைகொண்டு வாழலாயினர்; ஆனால், தமிழகத்தின் எல்லைக்கண் நிகழ்ந்த போர்கள், தமிழகத்தின் அக நாடுகளிலெல்லாம் நடைபெறலாயின. பேரரசர்கள், சிற்றரசுகளை அழிப்பதையும், சிற்றரசர் பலர் கூடிப் பேரரசினை அழிப்பதையும் மேற்கொண்டனர்; அரசுகளை அழிப்பதோடு நில்லாது, அவ்வரசுகளுக்குரிய நாடுகளையும் அழித்தனர். அதனால் தமிழ் நாடு பேரழிவிற்குள்ளாயிற்று;

சிற்றூர்களும், பேரூர்களும் சிதைந்து சீரழிந்தன. நாட்டில் அமைதி குலைந்தது; அமைதி குலையவே, வீடுகளும் அமைதி குன்றி அழிந்தன. மக்கள் இன்ப வாழ்வை மறந்தனர்; மனக் கவலை மிக்கு மாண்டனர்.

அந்நிலை கண்ட ஆன்றோர்கள் அகம்மிக வருந்தினர். போரை ஒழித்து, மீண்டும் அமைதியை நிலை நாட்டுவதில் நாட்டம் கொண்டனர். அரசர்கள், பகை கொண்டு அமர் புரிதற்குப் பொன்னின்மாட்டும், பொருளின்மாட்டும், புக ழின்மாட்டும் அவர் கொண்டுள்ள ஆசையே காரணமாம் என்ற உண்மை உணர்ந்தனர்; உணர்ந்த அவர்கள், அப் பொன், பொருள், புகழ்களால் பெறலாம் இன்பம், சிறிது; மேலும் நிலையற்றது என்ற நில்லாமை உணர்வை யும், இவ்வின்பத்தினும் சிறந்த பேரின்பம் ஒன்று உளது; அது நிலைத்த இன்பமும் ஆம்; அது, அவரவர் ஆற்றும் நல்வினைகட்கு ஏற்ப வாய்க்கும் என்ற வீட்டுலக உணர்வை யும், அக்கால அரசர்களும், மக்களும் மனங்கொள்ளுமாறு செய்வதில் கருத்துடையராயினர்; இவ்வாறு நிலையாமை எண்ணம் நிலைபெறச் செய்து, அதன்வழியே பொன், பொருள், புகழ்கள் மாட்டுத் தோன்றும் ஆசையையும், அவ்வாசை காரணமாக எழும் பற்றுமை உணர்வையும் அப்பற்றுமை உணர்வு காரணமாகத் தோன்றும் பகை உணர்ச்சியையும், அப்பகை காரணமாக விளையும் நாடழி வினையும் தடுத்து அமைதிகாண விரும்பிய ஆன்றோர்களின் ஆர்வத்தின் விளைவால், தமிழகத்தில், இல்வாழ்க்கையின் இன்பநிலையினைக் கூறும் அகத்திணை இலக்கியங்களும்,

வீரர்களின் பேராண்மையினைப் பாராட்டிக் கூறும் புறத் திணை இலக்கியங்களும் தோன்றுவதற்கு மாறாக, நிலையாமை கூறும் காஞ்சித்திணை தழுவிய இலக்கியங்கள் தோன்றலாயின; அவற்றுள் ஒன்று:

மலைகளும் குன்றுகளும் மண்டிக் கிடக்கும் இம்மாநிலம், சேர, சோழ, பாண்டியராகிய தமிழரசர் மூவர்க்கும் ஒத்த உரிமை உடையதாகும்; மூவர்க்கும் உரிய தமிழகத்தை, ஒருவராகவே நின்று ஆண்ட அரசர்களும் உளர்; தமிழகம், தமிழரசர் மூவர்க்கும் பொது என்ற சொல்லைக் கேட்கவும் பொறுது, அந்நாடுகள் அனைத்தையும் தம் ஒரு குடைக் கீழ் வைத்து ஆண்ட அவ்வரசர்களும், இறவா நிலைபெற்றுப் பெருக வாழ்ந்தாரல்லர்; அவர் தம் வாழ்நாட்களும் வற்றி விட்டன; அத்தகைய முடிவேந்தரும், முடிவில் மடிந்து மண்ணில் வீழ்ந்துப் பிடிசாம்பலாகி மறைந்தே போயினர்; அவர் ஈட்டிய பெருநிதி, அவர் போவுழி, அவர்க்குத் துணையார் அவரோடு உடன் செல்லவில்லை; அவர் அப் பெரும் பொருளை இழந்தே சென்றனர். ஆகவே, அரச வாழ்வும், அரும்பொருளும், செல்லும் உயிர்க்கு நல்ல துணையாகா; அவ்வுயிர்க்கு அது இப்பிறப்பில் செய்த அறிவினையே, ஆருயிர்த் துணையாம்; உற்றாரும், உறவினரும், பெற்றோரும், பிள்ளைகளும் ஒன்றுகூடி அழப்போம் உயிர், இவ்வுலகை விட்டு, இறவாப் பேரின்பம் நிறைந்த வீட்டுலகை அடைவதற்குத் தெப்பமாய்த் துணைபுரிவது அவ் அறவினை ஒன்றே; வாழுங்கால், பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் தெப்பமாய் நின்று துணை புரியும் நல்வினைகளை, மறந்து

செய்யாது கைவிட்டார், அவ் வீட்டுலக இன்பத்தை அடைதல் இயலாது; ஆகவே, அறவினைகளை, மறவாது மேற்கொள்க,

"குன்றுதலை மணந்த மலைபிணித்து யாத்தமண்
பொதுமை சுட்டிய மூவர் உலகமும்
பொதுமை இன்றி ஆண்டிசினோர்க்கும்
மாண்ட அன்றே யாண்டுகள் ? துணையே
வைத்தது அன்றே வெறுக்கை, வித்தும்
அறவினையன்றே விழுத்துணை ? அத்துணைப்
புணை கைவிட்டோர்க்கு அரிதே ; துணை அழத்
தொக்கு உயிர் வெளவுங்காலை
இக்கரை நின்று இவர்ந்து உக்கரைகொளலே"

—புறம் : 357.

# 4. சமய இலக்கியங்கள்

இறைவழி பாட்டெண்ணம், தொடக்கத்தில், அச்சம் காரணமாகவே தோன்றியதாகும். தமக்குத் துன்பம் தந்த பொருள்களையே மக்கள் முதற்கண் வழிபடத் தொடங்கினர். தமக்குத் துயர் தந்த பொருள்களை வணங்கிய அவர்கள், பின்னர்த் தமக்கு ஊறு தருதற்குப் பதிலாக, உறுபயன் தந்த பொருள்களையும் வணங்கத் தலைப்பட்டனர். இன்பம் தந்த பொருள்களையும் வணங்கிய அவர் வணக்கம், அச்சம் காரணமாகப் பிறந்ததன்று; மாறாக, அன்பு காரணமாகப் பிறந்ததாம். இறை வழிபாடு அச்சம், அன்பு ஆகிய இவ்விரண்டின் அடிப்படையாகவே தோன்றும் என்பதும், அவற்றுள்ளும், அச்சம் அடிப்படையாகத் தோன்றிய வழிபாடு, அன்பு அடிப்படையாகத் தோன்றும் வழிபாட்டிற்கு வழிகாட்டியாய் முன்னர்த் தோன்றியதாம் என்பதும், "அஞ்சி ஆயினும், அன்பு கொண்டு ஆயினும், நெஞ்சம்! வாழி நினை நின்றி பூரனை" என்ற திருநாவுக்கரசர் திருவாக்காலும் உறுதியாதல் உணர்க.

ஆக்கல், அழித்தல் ஆய இரு பேராற்றல்களையும் ஒருங்கே பெற்றுள்ள ஒரு பொருளின் ஆக்கல் ஆற்றலை அறியாது, அழிவாற்றலை மட்டும் அறிந்தார்க்கு அப்

பொருளின்பால் அச்சம் உண்டாம் ; அதன் ஆக்க ஆற்றலை அறிந்தார்க்கு, அதன்பால் அன்பு உண்டாம். ஒரு பொருளின் அழிவாற்றல் அறிந்து அச்சம் கொண்டவர்க்கும், அதன் ஆக்க ஆற்றலை அறிந்து அந்நிலையே, அதன்பால் கொண்டிருந்த அச்சம் மறைய, அன்பு தோன்றும்.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களும், இவ்விரு ஆற்றல்களையும் கொண்டுள்ளன எனினும், மக்கள் உணர்விற்கு, ஆக்க ஆற்றலினும், அழிவாற்றலே முதற்கண் புலனும் ; ஒரு பொருளின் அழிவாற்றலை உணர்தல் எளிது ; அதன் ஆக்க ஆற்றலை உணர்தல் அரிது. அழிவாற்றல் உடைய ஒரு பொருளை, ஆக்க ஆற்றல் உடையவாப் பயன் கோடல் அரிதின் முயன்றூர்க்கே இயலும். ஆகவே, மன அறிவு வளர வளர, மக்கள், பொருள்களின் அழிவாற்றல் கண்டு அஞ்சுவதற்குப் பதிலாக, அதன் ஆக்க ஆற்றல் கண்டு அன்பு காட்டத் தொடங்குவர். அதன் விளைவாய், அச்சம் கண்கொண்டு நோக்கத் தலைப்படுவர். அச்ச வழிபாடும், அன்பு வழிபாடாய் மாறும்.

தமிழ் மக்கள், சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்திலேயே, தமக்கு அச்சம் தரும் பொருள்களைக் கண்டு வழிபட்ட நிலையினைக் கடந்து, தமக்கு ஆக்கம் அளிக்கும் பொருள்களை, அவற்றின்பால் கொண்ட அன்பு காரணமாக வழிபடும் நிலையினைப் பெற்று விட்டனர். அதன் விளைவாய்த் தம் ஒளிகளாலும், தண் துளியாலும் தமக்கு மிகு பயன் அளிக்கும் ஞாயிறு திங்கள்களையும், மழையையும் வணங்கி வழிபட்டு வந்தனர். சிலப்பதிகாரம்

பாடிய ஆசிரியர் இளங்கோவடிகளால், நூலின் தொடக்கத்தே இவற்றையே வழிபட்டுள்ளமையும் உணர்க :

" திங்களைப் போற்றுதும் ! திங்களைப் போற்றுதும்!
கொங்கு அலர்தார்ச் சென்னி குளிர்வெண்குடை
போன்றுஇவ்
அங்கண் உலகு அளித்தலான் !"

" ஞாயிறு போற்றுதும் ! ஞாயிறு போற்றுதும் !
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேருவலம் திரிதலான் !"

" மாமழை போற்றுதும் ! மாமழை போற்றுதும் !
நாமநீர் வேலி உலகிற்கு அவன் அளிபோல்
மேல் நின்று தான்சுரத்தலான்."

இவ்வாறு தம் ஆக்கம் வளர அருட்டுணை புரிந்த கொடி நிலை, கந்தழி, வள்ளி பேன்ற இயற்கைகளையும் கொற்றவை போலும் வெற்றித் திருமகளையும் வணங்கி, வழிபட்டு வாழ்ந்த தமிழ் மக்கள், சங்க காலத்திலேயே மாயோனையும், சேயோனையும், வருணனையும், இந்திரனையும், ஏறு ஊர்ந்தோனையும், பனை ஏந்தியோனையும் அறிந்து வழிபடத் தொடங்கியிருந்தனர். மாயோனையும், சேயோனையும் அவர்கள் அறிந்திருந்தனர் என்றாலும், அக்கடவுள் வழிபாடு, அக்காலத்தே அவரிடையே அத்துணை ஆழமாக இடம் பெறவில்லை.

சங்க காலத் தமிழ் மக்கள், அழிவறியாப் பெருவாழ்வு பெற்றிருந்தமையால், இறை வழிபாட்டினை அத்துணை இன்றியமையாததாகக் கருதவில்லை. கடுந்துயர் உறும் காலத்திலேயே, கடவுள் வழிபாட்டில் கருத்துடையராதல் உலக மக்கள் அனைவர்க்கும் ஒத்த இயல்பாம். தமிழ்

மக்கள் பெற்றிருந்த அத்தாழ்வறியா நிலை நெடிது நாள் நிற்கவில்லை. உள்நாட்டுப் போர்கள், அவர்கள் உணர் வினைத் தட்டி எழுப்பின. தொடர்ந்து நிகழ்ந்த போர் களாலும் பிறவற்றாலும் தொல்லை பல உற்ற அவர்கள், அத்துன்ப நிலையினைப் போக்கிக் கோடல் தம்மால் இயலாது என அறிந்தவுடனே, அதைப் போக்கி அருள் பண்ண வல்ல இறைவழிபாட்டினை மேற்கொண்டனர். அது காரண மாகவே, அக்காலத்தே தோன்றிய ஆன்றோர்கள் பலரும் இளமை நிலையாது, யாக்கை நிலையாது, செல்வம் நிலையாது என்பன போலும் நிலையாமை உணர்ச்சி களையும் ஊட்டத் தலைப்பட்டனர். இவ்வாறு மக்கள் மாளாத் துயர் உற்று மனங்கலங்கி நின்ற அவ்வமயம் நோக்கி, வடநாட்டில் தோன்றி வளர்ந்த புத்த சமயத் தவரும், சமண சமயத்தவரும், தமிழ் நாட்டுள் புகுந்து, அத்தமிழர்களிடையே தம் சமயக் கொள்கைகளைப் பரப்பும் பணியினையும் மெல்ல மெல்ல மேற்கொள்ளத் தொடங்கினர்.

தமிழ் நாட்டில், பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தோன்றி வளர்ந்து வாழ்ந்து வந்த சைவ, வைஷ்ணவ சமயங்கள், தாம் வாழும் தமிழகத்தில், சமணமும், பௌத்த மும் புகுந்து, மக்களிடையே இடம் பெறத் தலைப்படுதலைக் கண்டவுடனே, தாமும் தம் உறக்க நிலையினை ஒழித்து, ஊக்கத்தோடு வளரத் தொடங்கின. இவ்வாறு, சமயங்கள் பலவும், தம் வாழ்வும் வளர்ச்சியும் குறித்து ஒன்றோடொன்று போட்டியிட்டு முனையவே, அவ்வச்சமயச் சார்பான இலக்கியங்களும் அளவின்றித் தோன்றி வழங்கலாயின. நிற்க.

சமயங்கள் பலவாயினும், அச்சமயங்களின் குறிக்கோள் ஒன்றே ; மக்களை மக்கட் பண்புடையவராக்குவதே அவற்றின் குறிக்கோளாம். உலகில் பிறந்தார் அனைவரும் மக்கட் பண்புடையராகி விடார். அவரிடையே பிறப்பால் ஒற்றுமை நிலவினும், உணர்வால் ஒற்றுமை நிலவுவது இல்லை. எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்குமேனும், அவற்றின் செயல் வேறுபடுதலால், அவற்றிற்கு உண்டாம் சிறப்பு ஒத்தல் இல்லை ; "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா செய்தொழில் வேற்றுமையான்."

எண்ணத் தகுதிவாய்ந்த எண்ணங்கள் இவை ; இயம்பத் தகுதி வாய்ந்த சொற்கள் இவை ; இயற்றத் தகுதி வாய்ந்த செயல்கள் இவை ; காணத்தக்க காட்சி இது ; கேட்கத்தக்க கேள்வி இது ; உண்ணத்தக்க உணவு இது ; நுகரத்தக்க நறுமணம் இது என அறிந்து எண்ணவும், இயம்பவும், இயற்றவும் வல்லாரே மக்கட் பண்புடையராவர் ; மக்களாய்ப் பிறந்தும், அம்மக்கட் பண்பு வாய்க்கப் பெறுதார் மக்களாகார் ; மாக்களே ஆவர்.

"தக்க இன்ன தாகதன இன்ன என்று
ஒக்க உன்னலராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே ; மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே"

மண்ணிடைப் பிறந்தார் அனைவரையும் மக்கட் பண்புடையராக்குவதே சமயங்களின் குறிக்கோளாம். எனினும், அப்பணி, அவற்றிற்கு மட்டுமே உரிமை உடையதொன்றன்று. அப்பணி மேற்கொண்டு கடனாற்றும் பிறவும் உள;

மக்கள் சமய நெறி நின்றால் மட்டுமே மக்கட் பண்பு வாய்க்கப் பெறுவர் என்பது இல்லை; மேலும். சமய நெறி நின்றவர் அவ்வாறு நின்றமையினாலேயே மக்கட் பண்புடையவராகி விடுவதும் இல்லை. சமய நெறி நின்றவரிடத்தும், தக்க இன்ன தகாதன இன்ன என அறியும் அவ்வறிவு நில்லாது நீங்கிவிடின், அந்நிலையில், அச்சமயச் சார்பால் பயன் இன்றாம்; சமயமும் தன் குறிக்கோள் இழந்து குன்றும். சமய நெறியினைச் சாராது தனித்து நின்றோராயினும், அச்சமய நெறியினைச் சார்ந்து நின்றோராயினும், உள்ளம். உரை உடல்களால் தூய்மை உடையார் மட்டுமே உயர்ந்தோராவர்; அவற்றில் தூய்மை குன்றுவார், எந்நிலை நின்றோராயினும் இழிந்தோராவர்; ஆக, மக்கட் பண்பாட்டிற்கு அடிப்படையாவன இவையே. இவற்றைப் பெறத் துணைபுரிவனவற்றுள், சமயமும் ஒன்று ஆகவே, மக்களை மக்கட் பண்புடையவராக்கும் பணியினைச் சமயச் சார்பின்றியும் ஆற்றுதல் இயலும் என்பது உறுதியாம்.

இந்த உண்மையினை உணர்ந்த பெரியோர்கள் பலர் தமிழகத்தில் சைவமும், வைஷ்ணமும், பௌத்தமும், சமணமும் தம் தம் ஆட்சி செலுத்த முனைந்த அந்தக் காலத்திலேயே வாழ்ந்து வந்தனர். அவர்கள் அச்சமயங்கள் கூறும் கோட்பாடுகளுள் ஒன்றற்கொன்று முரண்பட்டனவாய், ஒன்றையொன்று பழித்து உறுபயன் தாராதனவாய்க் காணப்பெற்றனவற்றை விடுத்தும், அவற்றுள் நல்லன எல்லாவற்றையும் கொண்டும். அவைகளாலும் கூறப்பெறாதன சிலவற்றைக் கூட்டியும், அக்கொள்கைகள் அனைத்

தையும் ஓர் ஒழுங்குபடுத்தி, மக்களிடையே வழங்கி, அவரை நல்லோராக்கும் நற்பணியினை மேற்கொண்டு வந்தனர். அத்தகையாருள் வள்ளுவரும் ஒருவர்; அதன் விளைவாய்த் தோன்றிய அறம் உரைக்கும் இலக்கியங்களுள் தலையாவது திருக்குறள்.

மக்கள் மனப் பண்பை வளர்க்கத் தோன்றிய சமயங்கள், தாம் கூறப்புகுந்த கொள்கைகளைக் குறையேதும் இன்றிக் கூறும் அப்பணியோடு நில்லாது, பிற சமயங்களைப் பழித்தும், அழித்தும் வாழத் தொடங்கின. தம்மை வாழ்விக்க வந்த சமயங்கள், இவ்வாறு தம்முள்ளே போராடிக் கெடுவதைக் கண்ட மக்கள், அவற்றின் உண்மைகளை உணரமாட்டாதும், அவற்றுலாம் பயனைப் பெறமாட்டாதும் வருந்துவாராயினர். அவ்வாறு வருந்தும் அம்மக்களுக்கு, அவர் கலக்கத்தைக் களைந்து, அவர் விரும்பும் அவ்வுயர்ந்த பண்பாட்டினைப் பெறுதற்காம் வழிவகைகளை வகுத்துத்துக்கூறத் திருக்குறள் தோன்றிற்று.

திருக்குறள், சைவ வைஷ்ணவ சமயங்கள் கூறும் கடவுளுண்மையினை உட்கொண்டுள்ளது; ஆனால், அவை கூறும் சிவனையும், திருமாலையும் ஏற்றுக்கொள்ளாது, எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் ஓர் இறை வழிபாட்டினை வற்புறுத்துகிறது. “தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கு அல்லால் மனக் கவலை மாற்றல் அரிது” என்ற குறள் வழியே கடவுள் வழிபாட்டினை வற்புறுத்தி, வழிபாட்டு நெறி நின்றோர்க்கே எடுத்தவினை இனிது முடியும்; அவரும் இன்புற்று வாழ்வர் என்று கூறிய திருக்குறள், “குடி செய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்

மடிதற்றுத்தான் முந்துறும்,'' என்னும் குறள் வழியே உளம் குன்றி இராது, ஊக்கம் கொண்டு உழைப்பார்க்கு இறைவனே முன்வந்து உதவுவன் என்றுகூறி, ஒருவன் செய்யக் கடவது, தனக்குற்ற கடனாற்றலே யன்றி, உருவத்தை வழிபட்டு நிற்பதன்று என்று அக்கடவுள் வழிபாட்டினை மறுக்கிறது.

பௌத்தமும், சமணமும் கூறும் பழவினைக் காரணத்தை ஏற்றுக் கொள்ளும் திருக்குறள், ஊக்கமும், உரமும் வாய்க்கப் பெற்றார், அப்பழவினை ஆற்றலையும் மாற்றி அமைப்பர் என அச்சமயக் கோட்பாட்டினை மறுக்கிறது. ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்'' என்ற குறள்வழியே, முற்பிறவிற் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே, இப்பிறவியில் உயர்நிலையும், இழிநிலையும் வந்து வாய்க்கும்; இப்பிறவியில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியும் முன்வினைக்கு ஏற்பவே பயனளிக்கும்; ஆகவே, இப்பிறவியில் மேற்கொள்ளும் முயற்சிகளால், முற்பிறவியின் வினைப் பயனால் வந்து வாய்த்த நிலையினை மாற்றிவிடுதல் இயலாது. அம்முன் வினைக்கு எதிராக எடுக்கும் எந்த முயற்சியும் அழிந்தேபோம் என்றெல்லாம் கூறி, ஊழ் உண்மையினையும், அதன் ஆற்றலையும் எடுத்துரைத்த திருக்குறள், ''ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்'' என்ற குறள்வழியே, ஓயாது உழைக்கும் உரவோர், தாம் முற்பிறவியில் செய்த தீவினையின் ஆற்றலால், தாம் எடுத்த முயற்சி முடியப்பெறாது வருந்த வேண்டுவதற்கு மாறாக, அப்பழவினை ஆற்றலைக் கெடுத்து,

எண்ணிய எண்ணியாங்கே எய்தும் திண்ணியராவர் என்று கூறி அவ்வூழை மறுப்பதும் காண்க.

இவ்வாறு மக்களை மக்கட் பண்புடையராகத் துணை புரியும் சமயக் கொள்கைகளை ஏற்றுப் போற்றியும், அம் மக்களை மாக்களாக மாற்றத் துணைபுரியும் சமயக் கொள்கை களை ஏலாதுவிடுத்தும் எழுந்த திருக்குறள், உலக மக்களை உயர்நிலைக்கு உய்க்கும் உயர்ந்த அறங்கள் பலவற்றையும் உரைத்துச் செல்கிறது. மக்கள் ஆணும் பெண்ணுமாய், இல்லறத்தானும் துறவறத்தானுமாய், அரசனும், அமைச் சனும் அவன் கீழ்ப்பணிபுரிவோனுமாய் வேறு வேறு நிலை யினராயினும், அவரெல்லோரும் மக்கள் என்ற ஒருமைப் பாடுடையராதலின், அவரெல்லோர்க்கும் ஏற்புடைய பண் பாடுகளைப் பொதுவாகப் பெருகக் கூறி, அவரவர்கள் நிற் கும் பல்வேறு நிலைகளுக்கும் ஏற்ற சிறப்புடைய பண் பாடுகளைத் தனித்தனியே வகுத்துக் கூறிச் செல்கிறது.

இவ்வாறு முக்கால மக்களுக்கும், முழுதுலக மக்களுக் கும் ஏற்கும் பண்பாடுகளை எடுத்துக் கூறும் திருக்குறள், ஓர் அற நூலேயாயினும், அது, தான் உரைக்கும் அவ் வறங்களைச் சொல்லழகும், பொருளழகும் பொருந்த உவமை யும், உருவகமும் முதலாம் அணி அழகு அமையக் கற்பார்க் குக் கற்குந்தோறும் கழிபேரின்பம் பெருகுமாறு கூறிச் செல்வதால், இறப்ப உயர்ந்த இலக்கியமாக இலங்குகிறது; நிற்க.

சமயத் தலைவர்கள் பலரும் தத்தம் சமயக் கொள்கைகளை, மக்களிடையே பரப்பப் பெரு முயற்சி மேற்கொண்டு வாழ்ந்த காலத்தில், ஆன்றோர் சிலர், மக்களை மக்கட் பண்புடையராக்கும் அறநூல்கள் பல ஆக்கும் பணியினை மேற்கொண்டனர். அது கண்ட சமயத் தலைவர்களும் தம் சமயக் கருத்துக்களைப் பரப்ப இலக்கியத் துணையினை நாடினர். அதன் விளைவாய் உலகியல் உணர்த்தும் இலக்கியங்களுக்கிடையே சமயக் கருத்துணர்த்தும் இலக்கியங்கள் எழலாயின. பத்துப் பாட்டினுள் முதற்கண் வைத்துச் சிறப்பிக்கப் பெறுவதாய முருகாற்றுப் படையும், பரிபாடலுள் 5, 8, 9, 14, 17, 18, 19, 21 என்ற எண்ணிடப் பெற்ற எட்டுப் பாடல்களும், அவ்வாறு வந்த சைவ சமயச் சார்புடைய இலக்கியங்களாம்; அப்பாடற்கண்வரும் 1, 2, 3, 4, 13, 15 என்ற எண்ணிடப் பெற்ற ஆறு பாடல்களும் வைஷ்ணவ சமய வளர்ச்சி குறித்து வந்த இலக்கியங்களாம். இவ்வாறு எழுந்த சமய இலக்கியங்களெல்லாம், அவ்வச் சமயச் சார்பான கடவுளரின் பெருமையினைப் பாராட்டிக் கூறும் வழிபாட்டுப் பாடல்களாகவே அமைந்து விட்டன. அக்கடவுளரின் வரலாற்றினை விளங்க உரைக்கும் வகையினை அவை மேற்கொள்ளவில்லை. அவ்வாறு எழுந்த அச் சமய இலக்கியங்கள், சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே தோன்றிவிட்டமையாலும், செய்யுள் நடையாலும், சொல்லாட்சியாலும் அவற்றோடு பெரிதும் ஒத்திருந்தமையாலும் இவற்றையும் சங்க இலக்கியங்களாகவே மதித்தனர் மக்கள்.

சைவர்களும், வைஷ்ணவர்களும் தம் சமய வளர்ச்சிக்கு இலக்கியத்துணை நாடுவது கண்ட பௌத்தரும் சமணரும், தாமும் அவ்வழியினையே மேற்கோடல் வேண்டும் எனக் கருதினர். இலக்கியத் துணைபெற வேண்டும் என விரும்பிய அவர்கள், தாம் இயற்ற விரும்பும் இலக்கியங்கள், அவ்விலக்கியங்களைப் போல வழிபாட்டுப் பாடல்களாக அமைவதை விரும்பவில்லை. இயற்றும் இலக்கியத்துள் ஒரு புதுமை காண விரும்பினர். வழிபாட்டுப் பாடல்கள், சமயக் கொள்கைகளில் ஊறிய உள்ளம் உடையார்க்கு மட்டுமே உணர்வூட்டும். சமயச் சார்பு அற்றாரை ஈர்க்கும் ஆற்றல் அவற்றிக்கு இல்லை. ஆகவே தம் சமயத்தை வளர்க்க விரும்புவார்க்கு, வழிபாட்டு இலக்கியங்கள் துணைபுரியா; சமயச் சார்பு அற்றாரையும், புறச் சமயச் சார்பு உற்றாரையும் தம்பால் ஈர்க்கவல்ல இலக்கியங்கள் அவர்க்கு வேண்டும் என்ற உண்மை இயல்புகளை உணர்ந்தனர். இவ்வெண்ணத்தால் உந்தப் பெற்ற அவர்கள், அக்கால மக்களால் விரும்பிக் கேட்கப் பெற்ற சில வரலாறுகளைத் தம் இலக்கியப் பொருள்களாக மேற்கொண்டு, அவ்வரலாறு உரைப்பதற்கிடையிடையே, அவ்வரலாற்றோடு யாதோ ஒரு வகையான் தொடர்புறுமாறு, தம் சமயக் கொள்கைகளை உணர்த்திச் செல்வராயினர்.

மேலும் அதுகாறும் எழுந்த இலக்கியங்கள் எல்லாம், பெரும்பாலும் ஆசிரியப்பாவால் ஆக்கப்பெற்று, இசை இன்பம் அற்றிருப்பது கண்டு, தாம் இயற்றும் இலக்கியங்கள், அக்குறைபாடும் நீங்க, அம்மானை, ஊசல், குரவை, வரி, வள்ளை முதலாம் இசைப் பாடல்கள் இடை இடையே

இடம் பெறுமாறு இயற்றினர். அவ்வாறு எழுந்த இலக்கியங்களே சிலப்பதிகாரமும், மணிமேகலையும்.

" அறம் செய விரும்பு", " ஆறுவது சினம் " என அறவுரைகள் பலவற்றை அடுக்கி அடுக்கி உரைப்பதினும், அவ் அறம் விளங்கும் சிறு சிறு கதைகளைக் கூறி அவற்றின் வழியே அவ் அறங்களை உரைப்பதே கருதிய பயனை உண்டாக்கும் என உரைப்பர் உளநூல் அறிந்தார். இவ்வுண்மை யுணர்ந்த சமணரும், பௌத்தரும், அக் காலத்தே மக்களிடையே பயில வழங்கப் பெற்ற கண்ணகி மணிமேகலை வரலாறுகளை வகுத்துரைப்பார் போல், தம் சமயக் கடவுளர்க்கும், தம்சமயக் கொள்கைகட்கும், மக்கள் மன்றத்தே மதிக்கத்தக்க இடம் தேட முனைந்தனர்.

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவால் தொடங்கி, வரி குரவை எனும் இசைப் பாடல்களையும் இடையிடையே கொண்டு, அகவற்பாவான் ஆக்கப் பெற்று, முப்பது காதைகளைக் கொண்ட ஒரு பெரு நூலாய்த் தோன்றிய சிலப்பதிகாரம், கண்ணகி வரலாற்றினைக் காவியப் பொருளாகக் கொண்டு இயற்றப் பெற்றுளது. கண்ணகி கற்பு, கோவலன் குறை, மாதவி காதல், செழியன் செங்கோல் முதலாயினவற்றைக் கூறும் சிலப்பதிகாரம், ஊழின் சிறப்பை உயர்த்திக் கூறும் சமணச் சார்புடைய பெருநூலாம்.

அந்நூலை இயற்றிய ஆசிரியர் இளங்கோவடிகள் ஒருவர் முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளாய பயன், இப்பிறவியில் அவரை விடாது வந்து பற்றும்

என்பதை விளக்குவதே சிலப்பதிகாரம் இயற்றுவதன் சிறப்புடைக் காரணமாம் எனக் கூறியதோடு, இப் பிறவி யில், ஒருவர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் முற்பிறவி யில் அவர் செய்த வினைப் பயன்களே காரணமாம் என வும் கூறிச் சென்றுள்ளார் ;

" ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்."

" வினை விளைகாலம் ஆதலின், யாவதும்
சினையலர் வேம்பன் தேராளுகிக்
கன்றிய காவலர்க் கூஉய் அக்கள்வனைக்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கென "

" இம்மைச் செய்தன யானறி நல்வினை ;
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது "

சிலப்பதிகாரம், இவ்வாறு, சமண சமயக் கருத்துக் களை அடிப்படையாக் கொண்டு, அவற்றை விளக்கிச் செல் வதோடு அமையாது, அச்சமயக் கடவுளையும் காட்டி, அவரை வழிபடும் வணக்க நெறியினையும் உரைத்துளது. கௌந்தி அடிகள் என்ற அச்சமய மூதாட்டி ஒருவரை முன் னிருத்தி, அவர் வாயிலாக அருக வணக்கத்தை வரைந்து காட்டியுள்ளதும் உணர்க.

பௌத்த மதச் சார்புடைய மணிமேகலை, மாதவி மகள் மணிமேகலை என்பாள், துறவறம் மேற்கொண்டு

ஆற்றிய தொண்டின் சிறப்புக்களைத் தன் காப்பியப் பொருளாகக் கொண்டு கூறும் முகத்தான், இளமை நிலையாது, யாக்கை நிலையாது, செல்வம் நிலையாது : நிலைபேறுடையது செய்யும் நல்லறமே ; ஆகவே பிற வாப் பெருநிலை வேண்டிப் பேரறம் புரிதலை, உலகிற் பிறந்தார் ஒவ்வொருவரும் மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற தன் சமயக் கொள்கைகளைக் கூறுவதோடு புத்தனையும் புத்தன் திருவடிகளையும் வணங்கும் வழி பாட்டு நெறிகளையும் விரிவாகக் கூறிச் செல்கிறது.

"வினையின் வந்தது, வினைக்கு விளைவாயது,
புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது,
மூப்பு விளிவு உடையது, தீப்பிணி இருக்கை,
பற்றின் பற்றிடம், குற்றக் கொள்கலம்,
புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை."

"உலக மன்னவர்க்கு உயிர்க்கு உயிர் ஈவோர்
இலரோ ? இந்த ஈமப் புறங்காட்டு
அரசர்க்கு அமைந்தன ஆயிரம் கோட்டம்."

"பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்,"

சமணச் சார்புடைய இலக்கியமாய சிலப்பதிகாரம், தன் சமயத்தோடு தொடர்பு இல்லாதாரைத் தன் காவியத்

தலைவராகக் கொண்டு எழுதப் பெற்றுளது; பௌத்த சார்புடைய இலக்கியமாகிய மணிமேகலையோ எனின், அச்சமய நெறி நின்று, துறவு மேற்கொண்ட ஓர் இளம் பெண்ணின் வரலாற்றையே தன் காவியப் பொருளாகக் கொண்டுளது; பழந் தமிழர், மணந்து மனையிருந்து மக்களோடு மகிழ்ந்து வாழும் வாழ்க்கையையே மாண் புடையதாக்கொண்டு வாழ்ந்தனர்; இளமைத் துறவு அவர்க்கு இன்பம் தந்திலது; அந்நெறியை இயற்கை யொடுமுரண்பட்ட தாகவும் அவர்கள் மதித்தனர். அக் கால மக்கள் இயல்பு அத்தன்மைத்தாகவே, கணவனும் மனைவியுமாய்க் கலந்து வாழும் கண்ணகி வரலாறு உரைக்கும் சிலப்பதிகாரம் சுவைத்தது போல், இளமை யிலேயே துறவு நெறி மேற்கொண்ட மணிமேகலை வரலாறு உரைக்கும் மணிமேகலை சுவைக்காதாயிற்று.

மேலும், தான் எழுத மேற்கொண்ட இலக்கியப் பொருளை விரிவாக எடுத்தோதி, தன் சமயக் கருத்துக் களைச் சுருங்கிய வாய்ப்பாட்டில், இடையிடையே கூறிச் செல்லும் சிலப்பதிகாரம் போலாது, மணிமேகலை, முழுக்க முழுக்கத் தன் சமயக் கொள்கைகளையே எடுத்துக் கூறி, காவியச்சுவை கெடாமை கருதி, அதற்குத் துணை யாகத் தமிழகத்தின் இயற்கை இன்பம், செல்வச் சிறப் புக்களை இடையிடையே சுருங்கிய வாய்பாட்டான் கூறிச் செல்லுகிறது. மணிமேகலை, சமயக் கொள்கை, அச்சமயக் கடவுள் வழிபாட்டு நிலை ஆகிய இவற்றையே விரித்துக் கூறிச் செல்வதால், அது இலக்கியச் சுவையினைப் பெரும் அளவில் மேற்கொண்டு, சமயக் கொள்கைகளை அள

வாகக் கூறிச் சிலப்பதிகாரம் போல், மக்களால் சுவைத்துப் பயிலப் பெற்றிலது.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் வடநாட்டில் தோன்றி வளர்ந்த சமயச் சார்புடைய நூல்களாதலின், சங்க இலக்கியங்களில் காணப்பெறாத வடவர் வழக்கும், வட மொழி வழக்கும் அவை இரண்டிலுமே இடம் பெற்றன. எனினும், அவ் விரண்டனுள்ளும், பின்னது சமயக் கொள்கைகளை விளக்குவதற்கே பெரும்பகுதியைக் கொண்டு விட்டமையால், அவ்வட மொழி ஆட்சி, முன்னதினும் மிகுதியாக அதில் இடம் பெற்றுவிட்டது. அதனால், தனித் தமிழாட்சி விரும்பும் தமிழ் மக்களிடையே மதிக்கத்தக்க இடம் பெறவும் அது தவறிவிட்டது.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூறும் சமயங்கள் தமிழகத்துள் புதியவாக வந்து புகுந்த சமயங்கள் ஆதலாலும், அவை புகுந்த காலத்தே, சிவவழிபாடும், திருமால் வழிபாடும் தமிழரிடையே சிறந்த இடம் பெற்று விளங்கினமையாலும், ஒரு நாட்டில் வாழும் மக்கள் விரும்பும் ஒரு பொருளை, அம்மக்களின் நன் மதிப்பைப் பெற வேண்டிப் புகுந்த புதியர், மறுத்தல், அவர் முன்னி வந்ததை முடியாதாக்கி விடும் ஆதலாலும், சமண, பௌத்த சமயங்களைப் போற்றிப் புகட்டும் சிலம்பும், மேகலையும் தமக்குப் புறம்பான சைவ, வைஷ்ணவ சமயங்களைப் பழித்துரைப்பதை மேற் கொள்ளவில்லை; மாறாக, கூடும் அளவு அவற்றைப் பாராட்டிச் செல்வதையே மேற்கொண்டுள்ளன.

சமணரும் பௌத்தரும் மக்கள் விரும்பும் இசைப் பாடல்களையும், வரலாறுகளையும் துணைக் கொண்டு இலக்கியங்கள் இயற்றித் தம் சமயங்களை வளர்ப்பது கண்ட சைவர்களும், தாமும் அந்நெறி சென்று தம் சமயத்தை வளர்க்க எண்ணினர்; அகத்துறைப் பாடல்கள்பால் காட்டும் ஆர்வம், அக்கால மக்கள் உள்ளத்திலும் மங்காதிருப்பது கண்ட அவர்கள், தம் இலக்கியப் பொருளாக, தம் காலத்தே வாழ்ந்தார் ஒருவர் வரலாற்றினை மேற்கொள்ளாது, மக்கள் அனைவர்க்கும் ஒத்த வாழ்க்கையினை வகுத்துக் கூறும் அகத்திணைத் துறைகள் பலவற்றையும், காட்சி முதலாக வரிசைப்படுத்தி வகுத்துரைத்து, அப்பொருள்களோடு கலந்து, தம் சமயக் கடவுளரின் பெருமையினைப் பாராட்டிக் கூறும் நெறியினை மேற்கொண்டனர்; அம்மட்டோ, தம் கடவுளரின் பெருமை கூறிப் பாராட்டும் பாக்களையும், அவ்வகத்திணை தழுவியே ஆக்கினர்; அவ்வாறு ஆக்கிய அவ்விருவகைப் பாடல்களையும் பண்டு தாம் விரும்பிய அகவற்பாவால் ஆக்காது, ஆசிரிய விருத்தம், கொச்சகக்கலிப்பா, கட்டளைக் கலித்துறை முதலாம் இசைப் பாக்களால் ஆக்கினர். இம்முயற்சியில் முகிழ்த்தனவே, மணிமொழியார் அளித்த இரு மொழிகளும்:

"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை [யுள்ளும்
உறைவான் உயர்மதில் கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ அன்றி ஏழிசைச் சூழல்
புக்கோ
இறைவா! தடவரைத் தோட்கு என்கொலாம்
வந்தெய்தியதே."

"'தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும்
எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி !''

ஈண்டுக் காட்டிய திருக்கோவையார், திருவாசகச் செய்யுட்கள், அக்காலத்தே தோன்றிய சமய இலக்கியங்களின் இயல்பு இது என்பதைத் தெளிய உணர்த்தும் எடுத்துக் காட்டுக்களாம். அகப்பொருட்டுறை தழுவிய இலக்கியங்களை இயற்றும் ஆர்வம், மணிவாசகர் காலம்வரை மங்காதிருந்தது. அதன் பின்னர், அம்முறை மெல்ல மெல்ல வழக்கிறந்து போக, இலக்கியத் துறையில் புதுப்புது முறைகள் புகலாயின; பிற்காலத்தே, இலக்கியங்கட்கு இடையிடையே அவை ஒரு சிறிதே இடம்பெற, கோவை, உலா, அந்தாதி, கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ் போலும் புதியன பெரிதும் இடம் பெறத் தொடங்கிவிட்டன. நிற்க.

கடைச் சங்க காலத்தின் பிற்பகுதியில் பிறந்த சமய இலக்கிய ஆர்வம், பனிரெண்டாம் நூற்றாண்டுவரை தொடர்ந்து நிலை பெற்றிருந்தது என்றாலும், அவ்வார்வம், கி. பி. நான்கு, ஐந்து, ஆறு ஆகிய இந்நூற்றாண்டுகளில், ஓரளவு வளர்ச்சி குன்றிக் கிடந்தது. அக்காலம், தமிழ்நாட்டு வரலாற்றில் ஓர் இருண்ட காலமாம்; களப்பிரர் என்ற இனந்தெரியா ஒரு நாடோடிக் கூட்டம் தமிழகத்துள் புகுந்து அரசழித்து வாழ்ந்த காலம் அது. அதன் விளைவால், தமிழ்ப் பேரரசுகள் அழிந்தன; தமிழர் பெரு வாழ்வு மறைந்தது, அக்கால அரசியல் நிலையினை அறிந்து கொள்

வதற்கே வாய்ப்பிலாது போயிற்று. நாடு நல்லரசிழந்து அல்லற்பட்டுக் கிடந்ததால், மக்கள் மனக்கவலை மிக்கனர். அதனால், இலக்கிய வளர்ச்சியிலோ சமய வளர்ச்சியிலோ அவர்கள் ஊக்கம் காட்டாராயினர். கி. பி. 600–ல், களப்பிரரை வென்று துரத்தி நல்லரசமைத்து நாடாளத் தொடங்கினன் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன். தமிழகம் மீண்டும் புத்துயிர் பெற்று, இலக்கிய வளர்ச்சியிலும், சமய வளர்ச்சியிலும் பேரூக்கம் காட்டத் தொடங்கிற்று, சமயங்கள், அரச ஆணையை அரணாகக் கொண்டு வளரத் தொடங்கியதும் இக்காலத்திலேயே.

வட நாட்டினின்றும் போந்த சமணரும் பௌத்தரும் தமிழ் நாட்டில் செல்வாக்குப் பெறுதல் கண்ட தமிழ் நாட்டுச் சைவர்க்கும், வைஷ்ணவர்க்கும், சிறப்பாகச் சைவர்க்கு அவர்கள்பால் சினம் பிறந்தது. இரு சாராரிடையே பகை வளர்ந்தது. தாம் இயற்றும் இலக்கியங்களுள் ஒருவரை யொருவர் பழித்துரைக்கத் தலைப்பட்டனர். சைவ சமய ஆசிரியர்கள் ஆக்கிய தேவார இலக்கியங்களை நோக்கின், அக்கால நிலை நன்கு புலனாகும். சம்பந்தர், பாடிய பதிகம் ஒவ்வொன்றிலும், ஒரு பாட்டு, சமணரையும், புத்தரையும் பழிக்கவே ஆக்கப்பெற்றுளதும் அறிக.

புத்தரும் தோகையம் பீலிகொள் பொய்ம்மொழிப்
பித்தரும் பேசுவ பேச்சல்ல ; பீடுடைக்
கொத்தலர் தண்பொழில் கோழம்பம் மேவிய
அத்தனை ஏத்துமின் அல்லல் அறுக்கவே.''

சமணரும் புத்தரும் தமிழிலக்கியம் பல ஆக்கினும், அவற்றில் அவர்தம் சமயக் கொள்கைகளே மிகுதியாக, இலக்கிய நயம் குறைவாக அமைத்திருத்தல் கண்ட மக்கள், அவர் நோக்கமெல்லாம் சமய வளர்ச்சியிலேயே உளது; இலக்கிய வளர்ச்சியில் இல்லை என்று எண்ண லாயினர்; அதனுல் அவர் பழிக்கப் பெற்றனர். அது கண்ட அவர்கள், நவில்தொறும் நயம் பயக்கும் நல்ல இலக்கிய வளர்ச்சியில் நாட்டம் செலுத்தினர். சிறந்த இலக்கியங்களை ஆக்க எண்ணிய அவர்கள், தமிழகத்தைச் சேர்ந்த கண்ணகி மணிமேகலை வரலாறுகளைக் கூறியதால் தம் சமயத்திற்குப் பெரும் பயன் விளையாமைகண்டு, தமிழ்நாட்டு மக்கள் பெரிதும் விரும்பும் வடநாட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொள்ளலாயினர். பெருங் கதை, சிந்தாமணி, வளையாபதி போலும் காப்பியங்கள் அவ்வாறு தோன்றிய பேரிலக்கியங்களாம்; தமிழரால் நன்கு மதிக்கப் பெறுதலை வேண்டிய அவர்கள், தாம் இயற்றிய அவ்விலக்கியங்களில், தம் சமயக் கொள்கை களை விரியக் கூறுமையோடு, தமிழரின் வழிபடுகடவுளராய் விளங்கிய சிவன், திருமால், முருகன், பலதேவன் முதலானோர் குறித்து வழங்கும் கதைகளை இடையிடையே எடுத்துக் கூறிப் பாராட்டியும் உள்ளனர். அதனுல் அவர் இலக்கியங்களை மக்கள் மகிழ்ந்து கற்கலாயினர்.

சமணரும், பௌத்தரும் இவ்வாறு, இலக்கியத்திரை யிட்டுத் தம் சமயங்களை வளர்ப்பது கண்ட சைவர்களும், வைஷ்ணவர்களும், தாமும் மக்கள் விரும்பும் இலக்கியங் களை இயற்ற முனைந்தனர். அவ்வாறு இயற்றத்

தொடங்கிய அவர்களுள், சைவர்கள், தம் இலக்கியப் பொருளாகத் தமிழ் நாட்டு நிகழ்ச்சிகளையே கொள்ளக் கருதி, சமயத் தொடர்பற்ருர் வரலாற்றினைக் கொள்ளாது, சிவத் தொண்டு பூண்டு சிவனடி சேர்ந்தார் வரலாறுகளையே கொண்டனர்; அவ்வாறு வந்ததே பெரிய புராணம். அடியார் பெருமைகூறும் அவ்விலக்கியம், தான் காட்டும் இயற்கைக் காட்சிகளிலும், தன் சமயச்சுடர் விளங்கக் காட்டிச் செல்கிறது.

'பரந்தவிளை வயல்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரப்பில்வளர் தேமாவின் கனிகிழித்த மதுநறுநெய்
நிரந்தரம் நீள்இலைக்கடையால் ஒழுகுதலால், நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதிவேட்கும் தகைய என
மணந்துளதால்''

பெரியபுராணம் போலும் இலக்கியங்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப் பெற்றனவேனும், வியப்பும் புதுமையும் விளங்கும் வடநாட்டு வரலாறு களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சமண இலக்கி யங்கள்பால் சென்ற தமிழர் உள்ளத்தைத் தம்பால் ஈர்த்தல், அவ்விலக்கியங்களாலும் இயலவில்லை. அஃது றிந்த சைவரும், வைஷ்ணவரும் தமிழ்நாட்டு அடியார் களின் பெருமை பாராட்டுவது விடுத்து, சிவனோடும், திருமாலோடும் தொடர்பு படுத்தி வடநாட்டில் வழங்கப் பெற்றுத் தமிழ்நாட்டு மக்களால், மிகப் பழைய காலம் தொட்டே அறியப்பட்டு வந்த வரலாறுகளை அடிப்படையாக் கொண்டு இலக்கியங்களை இயற்றத் தொடங்கினர். அவ்வாறு வந்தனவே கம்பராமாயணமும், வில்லி பாரதமும்,

திருவிளையாடல் புராணமும், கந்த புராணமும். இவற்றுள் சில பிற்காலத்தனவாம். இவ்வாறு வடநாட்டு வரலாறுகளை விளங்கக் கூறியதன் விளைவால் தனித்தமிழ் ஆட்சி மேலும் குன்றி, வடமொழி ஆட்சியே வளர்ந்து வன்மையுற்றது. நிற்க.

இக்காலத்தே இலக்கியத் துறையிலும் ஒரு புதுமை காணப்பட்டது; சமய இலக்கியங்களோடு வேறுவகை இலக்கியங்கள் சிலவும் இடம்பெற்றன. கடைச் சங்க காலத்தே தோன்றிய இலக்கியங்கள், நிலையாமை உணர்ச்சிகளைத் தொடர்ந்து ஊட்டி வந்தமையால், பழந்தமிழ் அரசர் தம் ஆற்றல் குன்றினர். அவர் ஆற்றல் குன்றவே களப்பிரர் இடையீடு இடம் பெற்றது. அதனால், தமிழ்நாட்டில், அரசியல் வளர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும் தடையுற்றன. இந்நிலை மாறவேண்டின், நாட்டில் நல்லரசு நிலவவேண்டும். நல்லரசு வேண்டும் நாட்டில், அரசர் ஆற்றல் மிக்கவராதல் வேண்டும்! அவர் அன்னராக, அவர் உள்ளம் ஊக்கமும் உரமும் கொண்டு உயருமாறு, அவர் ஆண்மை போற்றிப் புகழப் பெறுதல் வேண்டும்; வெற்றியை விளங்கப் பாடுதல் வேண்டும். இதை அறிந்த அக்காலப் புலவர்கள், சமய இலக்கியங்களை வளர்ப்பதற்கிடையிடையே, அரசர் புகழ்பாடும் இலக்கியங்களையும் இயற்றத் தொடங்கினர்; கலிங்கத்துப் பரணி, மூவர் உலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ் முதலாம் இலக்கியங்கள் இவ்வெண்ணத்தின் விளைவால் வந்தனவே.

இமயத்தில் கொடி நாட்டியும், ஈழம் வென்றும், ஒரு காலத்தே வெற்றிப் புகழ் விளங்க வாழ்ந்த தமிழ்ப்

பேரரசு, ஒருகால், கடாரம் வென்ற வீறு தோன்ற உயர்ந்தும், ஒருகால் ஈழம் சென்று மறைந்துவாழ்ந்து மானம் குன்றித் தாழ்ந்தும், இவ்வாறே வாழ்வையும் தாழ்வையும் மாறி மாறிப் பெற்று, பதினான்காம் நூற்றூண்டின் தொடக்கத்தே தன் மண்ணிலிருந்து மறைந்து விட்டது; மகமதியர் ஆட்சிக்கு அடிபணிந்துவிட்டது தமிழகம். அதனால், இயற்கைக் காட்சிகளையும், இயற்கையோடியைந்த வாழ்க்கை வகைகளையும், வேந்தர்களின் வெற்றிப் புகழ்களையும் சமயச் சிறப்புக்களையும் தாங்கித் தழைத்து வந்த தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சியும் தடையுற்றது.

# 5. புராண இலக்கியங்கள்

பதினொன்காம் நூற்றாண்டிற்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம், தமிழிலக்கியம் பல்லாற்றானும் தாழ்வுற்ற காலமாம். களப்பிரரை அழித்துத் தனியரசு அமைத்து ஆண்ட கடுங்கோன் வழிவந்த பாண்டிய மன்னர்களும், பல்லவர், பாண்டியர் ஆய இரு பேரரசுகளையும் ஒருங்கே அழித்து, அரசமைத்து ஆளத் தொடங்கிய விசயாலயன் வழிவந்த சோழ அரசர்களும், புலவரைப் பேணியும், சங்கம் அமைத்தும் செந்தமிழ் வளர்த்த தம் முன்னோரைப் போலாது, வட மொழியிடத்தும், வடவர் நாகரிகத்திடத்தும் பற்றும் பாசமும் கொண்டனர். வெற்றிவேற் செழியன், முடத் திருமாறன், முதுகுடுமிப் பெருவழுதி என்ற தனித் தமிழ்ப் பெயர்களை விடுத்து மாறவர்மன் அவனி சூளாமணி, சடாவர்மன் குலசேகரன் என்பன போலும் வடமொழிப் பெயர்களைப் பாண்டியர் மேற்கொண்டனர். நலங்கிள்ளி, திருமாவளவன், இளஞ்சேட் சென்னி என்ற இனிய தமிழ்ப் பெயர்களை விடுவித்து, இராஜேந்திரன், குலோத்துங்கன் என்பன போலும் வடமொழிப் பெயர்களைச் சோழர்கள் மேற்கொண்டனர். தம் இயற்பெயரும் தமிழில் இருத்தல் கூடாது; வடமொழியிலேயே வழங்குதல் வேண்டும் என்று விரும்பும் அளவு, வடநாட்டு நாகரிகம், தமிழ்நாட்டில்

வளர்ந்து விட்டது. அதனால், தமிழகத்தில், தமிழ் மொழி யாட்சி தளர்ந்தது; வடமொழியாட்சி வலுத்தது, பிற் காலச் சோழரும், பாண்டியரும் நாடாண்டிருந்த காலத்தே தோன்றிய இத்தாழ்நிலை, தொடர்ந்து நிலைபெறுவ தாயிற்று; அதனால், கூறிய இக்காலத்தில், தமிழ் இலக் கியம், பண்டு தான் பெற்றிருந்த இயற்கை எழில் இழந்து இழிநிலை உற்றது.

அம்மட்டோ! பதினைன்காம் நூற்றாண்டிற்கும், பத் தொன்பதாம் நூற்றாண்டிற்கும் இடையே உள்ள காலம், தமிழ்ப் பேரரசு மறைந்து போக, நாயக்கர்களும், மராட் டியர்களும், மகமதியர்களும், ஆங்கிலேயர்களுமாகப் பல் வேறு மொழி வழங்கும் பல இனத்தவர் படையொடு போந்து, ஒருவரை ஒருவர் அழித்து வென்று அரசோச் சிய காலமாகும். நிலைத்த ஆட்சியில்லாக் குறையால் நாட்டில் அமைதி குன்ற, அல்லலும், அலைச்சலும் மிகுந்து அருங்கலை வளர்ச்சி தடையுற்றது அக்காலத்தில்; அதன் பயனாய், வடமொழி நாகரிகத்தால், வனப்பிழந்து, வளங் குன்றிக் கிடந்த தமிழ் இலக்கியம், மேலும் தன் இயல்பு கெட்டு இழி நிலை உற்றது.

அரசவைகள், தமிழ்ப் புலவர்களைப் பேணத்தவறி விட்டன; புலவர்கள் போற்றுவார் அற்றுப் புலம்பினர்; அதனால் நல்ல புலவர்கள் நாட்டில் தோன்றாராயினர். ஆங் காங்கிருந்த ஒரு சில செல்வர்களும், தமிழ் மரபு மறவாக் குறுநிலத் தலைவர்களும் தந்த சோறுண்டு வாழ்ந்த புலவர் சிலர் பாடிய பாக்களும், தனித் தன்மையும் தமிழ்ப் பண் பும் இழந்து காணப்பட்டன. பொருள் வளம் ஒன்றையே

போற்றி, அதற்குத் துணை செய்ய வல்ல உவமை, உருவகம் போலும் உயர்ந்த அணிகள் ஒரு சிலவே கொண்டு சிறந்து விளங்கிய தன் பண்டைப் பெருமையினை அக்காலத் தமிழகம் இழந்து விட்டது. வடமொழி மரபினைப் பின்பற்றிப் பொருள் நயத்தைப் போற்றாது, வெறும் சொல் நயம் ஒன்றையே கருதி எழுந்து எண்ணற்ற அணிகளை மேற்கொண்ட வண்ணப் பாடல்களைக் கொண்டு வனப்பிழந்து விட்டது.

சமய வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட பல்லவர்களும், சோழர்களும், பாண்டியர்களும், தாங்கள் வழிபட்ட கடவுளர்க்குத் தமிழ் நாட்டின் ஊர்கள் தோறும் பெரும் பெருங் கோயில்களைக் கட்டித் தங்கள் சமய நெறிகளை வளர்த்து மகிழ்ந்தனர். அம்மட்டோ ! அவ்வரசர்கள் காலத்தே தோன்றிய அடியார்களும் அவ்வாறு எழுந்த கோயில்கள் தோறும் சென்று சென்று, பாக்கள் பல பாடிப் பரவி வாழ்ந்தனர். இவ்வாறு பாடல் பெற்றுக் கோயில் கொண்டிருக்கும் கடவுளரைப் புராணம் பாடிப் பரவ வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. அம்மக்களின் அவாவை எதிர் நோக்கி வாழ்ந்த அக்காலப் புலவர்கள், அவர் தம் வேட்கையினை நிறைவேற்ற முன் வந்தனர். அதன் விளைவால், ஊரின் பெருமை, அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் கடவுளின் பெருமை உரைக்கும் புராணங்கள் பல தோன்றலாயின. அவ்வாறு பாடப் பெற்ற புராணங்கள் பலவே ஆயினும், அப்புராணங்கள் கூறும் பாட்டுடைத் தலைவனும், பாட்டு எடுத்துக் கொண்ட பொருளும், சிவனும், அவன் பெருமையும் என்ற

ஒருமைப்பாடுடைமையால், அப் புராணங்களை பாடிய புலவர்கள் அனைவரும், பாடற்பொருளில் கருத்தினைச் செலுத்தாது, பாடிய பாக்களில் தம் கற்பனைத்திறங் களைக் காட்டிச் சென்றனர். அதனால், அக்காலத்தே பாடப்பெற்ற புராண இலக்கியங்கள் எல்லாம், பல்வேறு சுவை பயக்கும் பண்பு வாய்க்கப் பெற்றுள்ளன.

புலவர் சிலர், இவ்வாறு தல புராணங்கள் பாடித் தமிழிலக்கியத்தை வளர்க்க, வேறு சிலர், அக்கால மக்கள், பலகாலும் கேட்டு மகிழ்ந்த அரிச்சந்திரன் கதை, தமயந்தி கதை, பாண்டவர் கதை முதலான வட நாட்டுக் கதைகளைத் தம் பாடற் பொருளாகக் கொண்டு இலக்கி யங்கள் இயற்றினர்; அரிச்சந்திர புராணம், வில்லி புத்தூரார் பாரதம் போலும் இலக்கியங்களும், இவையும் கூறும் பொருளால் வேறுபாடுடைய வேனும், கற்பனை, சொல்லாட்சி, அணி ஆகிய இவற்றில் ஒத்த இயல் புடையவே.

புராணம் பாடிய புலவர்கள், அகத்திணை, புறத் திணை தழுவிய பழந்தமிழ்ப் பாடல்கள்பால் மக்கள் கொண்ட பற்று, மங்காதிருத்தல் கண்டு, நாட்டுச் சிறப்பு என்ற தலைப்பினை வைத்துக் கொண்டு, பழந்தமிழ் இலக்கியங்கள் கண்ட ஐந்திணை வளங்களையும் அவை ஒன்றில் ஒன்று மயங்கும் நயத்தினையும் அணி பெறக் கூறினர்; நகரச் சிறப்பு என்ற தலைப்பினை மேற் கொண்டு, பழந்தமிழ் நாட்டின் பல்வேறு செல்வச் சிறப்புக்களையும் பண்புறக் கூறினர். அவர் கூறும் அவ்வியற்கை வளமோ, செல்வச் சிறப்போ, அவர் கூறும்

நாடு நகரங்களில் இரா எனினும், அவை அவர் பாடிய இலக்கியங்களைப் படிப்பார்க்குப் பேரின்பம் பயந்து, ஒருவாற்ருன் பொருந்தியிருந்தன.

இவ்வாறு சிலர் புராணம் பாடி மகிழ, சிலர் தமிழ் நாட்டுக் கோயில்களில் குடிகொண்டிருக்கும் கடவுள்களின் பெருமைகளைப் பாராட்டிப் பல்வேறு இசை அமையப் பாக்கள் பல பாடிப் பரவும் பணியினை மேற்கொண்டனர். அதன் விளைவாய், அந்தாதி, உலா, கலம்பகம், குறம், கோவை, பிள்ளைத் தமிழ், மாலை போலும் வழிபாட்டு இலக்கியங்கள் பல் வரம்பின்றித் தோன்றின.

இக்காலத்தே எழுந்த இலக்கியங்களில் பிறிதொரு சிறப்பும் புலனும். பௌத்தம் சமணம் முதலாம் வடநாட்டுச் சமயங்கள், தமிழ் நாட்டில் தலையெடுக்கத் தொடங்கிய காலத்தில், அவற்றின் வளர்ச்சியைத் தடுக்க ஒன்று கூடித் தொண்டாற்றிய தமிழ் நாட்டுச் சமயங்களாய சைவமும், வைஷ்ணவமும், அவ்வடநாட்டுச் சமயங்கள் வாழ் விழந்து போன பின்னர், தம்முள்ளே போட்டியிட்டு வளரத் தொடங்கின. அதற்கேற்ப, அவற்றின் சிறப்புரைக்கும் இலக்கியங்களும் போட்டியிட்டு வளர்ந்தன. இராமன் வரலாறுரைக்கும் இலக்கியத்திற்கு எதிராக, முருகன் வரலாறுரைக்கும் கந்தபுராணமும், திருமால் பெருமை கூறும் பாகவத புராணத்திற்கு எதிராகச் சிவபெருமான் பெருமை கூறும் திருவிளையாடற் புராணமும் தோன்றின. இவ்வாறே, திருமால் பெருமை கூறும் வழிபாட்டு இலக்கியங்களும், சிவபெருமான் பெருமை கூறும் வழிபாட்டு இலக்கியங்களும் வரம்பின்றித் தோன்றின.

# 6. புதிய இலக்கியங்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி தமிழிலக்கிய வாழ்வில் குறிப்பிடத்தக்க சிறப்புடைத்து. ஆங்கிலம் அறிந்து அம்மொழி இலக்கியங்களையும், அவ் விலக்கியங்கள் குறித்து எழுதப் பெற்ற பல்வேறு ஆராய்ச்சி நூல்களையும் கற்றதன் பயனாய்த் தமிழ் மக்களிடையே தனித் தமிழ் ஆர்வம் தலையெடுக்கத் தொடங்கிற்று. தமிழ் தனித்தியங்கவல்லது, வடமொழியைக் காட்டிலும் வளம் மிகுந்தது; உலக மொழிகளுள் நனிமிகப் பழைய மொழியாய ஏப்ரூ மொழியைக் காட்டிலும் பழைமை உடையது என்ற உண்மைகளை உணரத் தலைப்பட்டனர். "சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின், முதுமொழிநீ, அநாதி என மொழிகுவதும் வியப்பாமோ" என்றும், "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றும் பாடிப் பெருமை கொண்டனர்.

இவ்விழிப்புணர்ச்சியின் பயனாய்ப் பழைய தமிழ் இலக்கியங்களைத் தேடிப் பதிப்பிக்கவும், பயிலவும், அவற்றைப் பல்லாற்றானும் ஆராய்ந்து எழுதவும் முனைந்தனர்; பழந்தமிழ் இலக்கியங்களாய அகச் சான்று காட்டி, அக் காலத் தமிழர் மேற்கொண்ட அரசியல் அமைதி, வாணிக வளம், செல்வச் சிறப்பு, மக்கட் பண்பாடு, முதலாம்

பெருமைகளை விளக்கும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியாயின; அவ்வாறு வெளியாகும் அவையும், வட மொழி விரவாத, தூயதமிழ் நடை வாய்ந்தனவாதல் வேண்டும் என்பதில் மக்கள் ஆர்வம் காட்டினர்; அம்மட்டோ !. தம் பெற்றோர் தமக்கு இட்டு வழங்கிய வேதாசலம், பால சுந்தரம் போலும் வடமொழிப் பெயர்களை மறைமலை, இள வழகன் போலும் இனிய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொள்வதையும் தம் மக்கட்குத் திருமாவளவன், அறிவுடை நம்பி, முல்லை, தாமரை போலும் தனித் தமிழ்ப் பெயர்கள் வைத்து அழைப்பதையும் விரும்பி மேற்கொண்டனர். அன்று தொடங்கிய இவ்விலக்கிய விழிப்புணர்ச்சி இடையே மங்கிவிடாது, இன்றுவரை, எவரும் கண்டு பாராட்டும் வகையில் வளர்ந்து கொண்டே உளது; சிறந்த உரைநடை இலக்கியங்கள் நாள்தோறும் உருவாகிக் கொண்டே உள்ளன.

ஆங்கில மக்களின் கூட்டுறவாலும், உலக மக்களனை வரையும் ஒருங்கே காணவல்ல வாய்ப்புப் பெற்றமையாலும் தாமும், தம் நாடும், தம் மொழியும் பண்டு பெற்றிருந்த பெருநிலையினையும், இன்று பெற்றிருக்கும் இழிநிலையினையும் கண்ட தமிழ் மக்கள், உரிமை வேட்கையும், இன உணர்ச்சியும், மொழிப்பற்றும் கொண்டு விழிப்புற்றனர். தாம் பல்லாற்றானும் தாழ்வுற்றமைக்கு, ஆளும் உரிமையற்று அடிமைகளாகி விட்டமையே தலையாய காரணமாம் என உணர்ந்தனர்; அதனால் ஆளும் ஆங்கிலேயரை அகற்றி விட்டுத் தாமே ஆள எண்ணினர்; அவ்வெண்ணம்,

அனைவர் உள்ளத்தும் ஊறி, உரன் கொண்டு எழவல்ல பாக்களைப் புலவர்கள் பாடினர்; விடுதலை வேட்கை, நாட்டுப்பற்று உடையார்க்கே உண்டாதல் கூடும் என உணர்ந்த அவர்கள், அவ்வுரிமை வேட்கையை ஊட்டவல்ல, தமிழ் நாட்டுப் பழம் பெருமைகளைப் பாட்டிடை வைத்துப் பாராட்டினர்; அவ்வாறு எழுந்த இலக்கியங்களுள் ஒரு சில:

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு; நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு."

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் போன்றே, இனப் பற்றும் விடுதலைக் கிளர்ச்சிக்கு வித்திடும் என உணர்ந்தனர் மக்கள். மேலும் ஓர் இனம் ஆள, ஓர் இனம் அடிமைப்பட்டுக் கிடத்தல் ஆகாது என்றும் உணர்ந்தனர்; அந்நிலையினை மாற்றவும் வேண்டினர். அவ்வாறு விரும்பிய அவர்கள், அடிமைப்பட்டுக் கிடக்கும் அவ்வினத்தார்க்கு, அவர்களின் முன்னோர் பெருமையினை எடுத்துக் காட்டுவதன் மூலம், அவர்க்கு உரிமை வேட்கையினை உண்டாக்கலாம் என அறிந்தனர்; அதனால், இன்று அடிமைப்பட்டிருக்கும் நீவிர், பண்டு பாரெலாம் ஆண்ட பெருமைமிக்க இனத்தின் வழி வந்தவராயினர் என்று கூறும் இவ்வுணர்ச்சிப் பாக்கள் எண்ணற்றன எழுந்தன; அவற்றுள் ஒரு சில:

"சிங்களம் புட்பகம் சாவகம் ஆதிய
தீவு பலவினும் சென்றேறி, அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு."

"விண்ணை இடிக்கும் தலைஇமயம் எனும்
வெற்பை அடிக்கும் திறனுடையார்; சமர்
பண்ணிக் கலிங்கத்திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ்நாடு."

இவ்வாறு ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டுயர்விற்கு அரசியல் உரிமையே அடிப்படையாம் என்ற உணர்வால், அவ்வுரிமை உணர்ச்சியினை ஊட்டவல்ல இலக்கியங்களை ஒருசிலர் வளர்த்து வந்தனர். நிற்க. ஒருநாட்டு மக்களிடையே முதலாளி, தொழிலாளி, செல்வர். வறியர் என்பன போலும் பொருள் நிலையால் உண்டாம் வேறுபாடு நிலைபெறின், அந்நாடு, அரசியல் உரிமை பெற்றும் பயன் இன்றாம்: அவ்வேறுபாடு உடைமையால் தொழில் வளர்ச்சித் தடையுறும். தொழில் வளராத நாட்டில் செல்வம் செழிக்காது; செல்வம் அற்றநாடு, அது பெற்ற நாட்டிற்குப் பல்லாற்றானும் அடிமைப்பட்டே கிடக்கும். ஆகவே, நாட்டின் நல்வாழ்வில் நாட்டம் உடையவர், முதலாளி தொழிலாளர்களிடையே நல்லுறவு நிலை பெறுதற்காம் வழி வகைகளை வகுத்தல் வேண்டும், தமிழ் நாட்டுத் தலைவர்கள் இவ்வுண்மை உணர்ந்த உரவோராதலின், தமிழகத்தில் உரிமைக் கிளர்ச்சி ஒருபால் நடைபெற்றிருக்கும்போதே. தொழிலாளர் உயர்விற்காம் கிளர்ச்சியும் தொடர்ந்து நடைபெறலாயிற்று. அதனால், தொழிலாளர்த் தொண்டின்

பெருமையினையும், அவர்தம் இழிநிலைமையினையும், அன்னார் உரிமைகளையும் எடுத்துக் காட்டும் இலக்கியங்களையும், புலவர்கள் இயற்றத் தொடங்கினர்:

"சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெல்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறை உழைப்புத் தோள்கள் எலாம் எவரின்
தோள்கள்?
கல்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொன்துகளைக் கடல்முத்தை, மணிக்குலத்தைப்
போய் எடுக்க அடக்கிய மூச்சு எவரின் மூச்சு?"

"'துன்பம் பிறர்க்கு! நல்இன்பம் தமக்கு' எனும் துட்ட
மனோபாவம்,
அன்பினை மாய்க்கும்; அறம் குலைக்கும்; புவி ஆக்கம்
தனைக் கெடுக்கும்;
வன்புக்கெலாம் அதுவே துணையாய்விடும்; வறுமை
யெலாம் சேர்க்கும்;
இன்பம் எல்லார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை
எங்கும் முழக்கிடுவாய்!"

"பாடுபடுபவர்க்கே—இந்தப்
பாரிடம் சொந்தம் ஐயா!
காடு திருத்தி நல்ல—நாடு
காண்பது அவரலவோ?"

ஒருநாடு, அரசியல் அமைதியும் பொருள்நிறை வாழ்வும் பெற்றுவிட்டமையினாலேயே சிறந்துவிடாது;

அந்நாட்டில் வாழும் மக்கள் அனைவரும், கல்வி செல்வம் ஆகிய இவற்றில் ஒத்த உரிமை உடையவராதல் வேண்டும். அந்நிலை பெற்ற நாடே நன்னிலை பெற்றுச் சிறக்கும். உலக மக்கட் தொகையுள் ஒரு பாதியினர் பெண்களாம். அப்பெண்களைப் போற்றுதலுக்கு உரியராகக் கொண்டது பழந்தமிழ்நாடு. பழந்தமிழ்ப் புலவர்களில் பலர் பெண்கள். கற்பும் பொற்பும் விளங்க வாழ்ந்த பெண்கள் அந்நாளில் பலர். மனையாட்சிக்கு உரியவள் பெண்ணே எனும் கருத்தால் மனைவி என்றும் இல்லாள் என்றும் பெயரிட்டழைத்துப் பெருமை செய்தது.

இந்நிலை, சங்க காலத்திற்குப் பின்னர்ச் சீரழிந்து விட்டது. துறவு நெறிகளை வற்புறுத்திய சமணரும், பௌத்தரும், பெண்கள் அதற்குத் தடையாவர் என்ற கருத்தால், அவர்களைப் பெரிதும் பழித்து ஒதுக்கினர். "பெண் எனும் மாயப் பிசாசு" என்றெல்லாம் அவர்கள் பழிக்கப் பெற்றனர். சமணமும் பௌத்தமும் தமிழ் நாட்டிலும் வேர்கொளத் தொடங்கவே, பெண்களைப் பழிக்கும் எண்ணம் தமிழ் நாட்டிலும் நுழைந்தது. அதன் பயனாய்ப் பெண்கள் பல துன்பத்திற்கு உள்ளாயினர்.

கல்வி அறிவினை அறவே அற்றனர்: 'அடுப்பூதும் பெண்ணுக்குக் படிப்பேன்?' என்ற பழமொழியும் எழுந்தது. அதன் பயனாய்க் காதல் திருமணம் காலற்றுப் போயிற்று. இளமைத் திருமணம் போதும் பொருந்தாத் திருமணங்கள் புகுந்து கொண்டன: இளமைத் திருமணத்தால் பலர் கைம்பெண்களாயினர்; இளமையிலேயே

கைம்பெண்களாய அவர்கள், தம் இளமை வேட்கையை அடக்கும் ஆற்றலை இழந்து விட்டனர். மேலும், கல்வி யறிவு இன்மையால், தாம் செய்வது தவறு என்பதை அறியமாட்டாராயினர் ; அதனால், அவருள் பலர் வாழ்க்கை யில் வழுக்கி வீழ்ந்தனர்.

பெண்ணுலகம், இவ்வாறு, அறிவும், ஒழுக்கமும் அற்று வாழவே, அவர் அளித்த மக்களும் அந்நிலையினராயினர். அதனால், உலகில் ஒழுக்கம் குன்ற, உலகியல் எல்லா வகையாலும் எள்ளி நகையாடற் குரியதாயிற்று. இவ் விரு நிலைகண்டஞ்சிய உலகப் பேரறிஞர்கள், இச்சீர் கேட்டிற் கெல்லாம் காரணம், பெண்களின் இழிநிலையே ; ஆகவே, உலகம் ஒழுக்கம் நிறைந்து விழுப்பமுடையதாக ஆகவேண்டின், அப்பெண்களைப் பெருநிலையில் வைத்துப் பேணுதல் வேண்டும் என உணர்ந்தனர். இவ்வுணர்ச்சி, தமிழ் நாட்டுப் பெரியோர்கள் உள்ளத்திலும் உருப் பெற்றது. அதனால், பெண்ணுரிமை பேணும் பாக் களும், இளமைத் திருமண இழிவு, கைம்பெண் கொடுமை களைக் கூறும் பாக்களும் பலப்பல எழுந்தன.

'மாசிலா வையத்து இவ்வுயிர் வாழ்க்கை
ஆம் பெருங்கடலுள் போம் மரக்கலனும்
ஆடவர் நெஞ்சம், அறத்துறை அகன்று
நீள்திசை சுழற்றும் நிலையிலாக் காற்றும்
நிண்ணயம் அற்ற எண்ணம் இயக்கச்
சென்றுழிச் சென்று, நன்றறிவின்றி
அலையா வண்ணம், அறத்துறைக் குடாவில்
நிலைபெற நிறுத்தும் நங்கூரமாய், பின்னும்
செய்வினை முயற்சியில் பொய்வகைப் புன்னெறிக்கு

எற்றுண்டகன்று பற்றென்றின்றி
ஆசையாம் திசைதொறும் அலைந்து திரிந்து
கெடாவணம் கடாவிக் கெழுவிய அன்புசேர்
அறப்பிடி கடைப்பிடியாகக் காட்டிச்
சிறப்புயர் சுகத்துறை சேர்த்து சுக்காளுய்
நின்றது மங்கையர் நிலைமை.''

'' கண்கள் இரண்டினில் ஒன்றைக்—குத்திக்
காட்சி கொடுத்திடலாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால்—வையம்
பேதமை அற்றிடும் காணீர்.''

'' எனை மணந்தார் இறந்தார் ; என் குற்றம் அல்ல ;
இறந்தவுடன் மங்கலநாண், நல்லாடைகள்,
புனைமலர், குங்குமம், அணிகள் போனதுண்டு.
பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ ?
எனை ஆளும் காதலுக்கோர் இலக்கியத்துக்கு
இசைந்ததெனில் உயிர் இயற்கை; நான் என்செய்வேன்?
தனை அடக்கிக் காதலினைத் தவிர்த்து வாழும்
சகம் இருந்தால் காட்டாயோ நிலவே ! நீதான் !!''

தாழ்ந்த தமிழகம் தலை நிமிர்ந்து வாழ விரும்பிய தமிழ்ப் பேரறிஞர்கள், அதற்குத் துணைசெய்யும் விடுதலை வேட்கை, தொழிலாளர் துயரம், பேச்சுரிமை, பெண்ணுரிமை, காதல் திருமணம், கைம்பெண் திருமணம், பொருந்தாத் திருமணங்களின் பொல்லாங்கு என்பன போலும் பலப்பல பொருள் குறித்த பாக்களைக் கொண்ட இலக்கியச் செல்வங்களை வளர்த்தனர்.

'' பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் '' என்றார் பாரதியார்.

மக்கள் உள்ளத்தை உணர்த்தி, உலகநிலையினை உயர்த்தும் உறுதிகொண்ட இலக்கியங்கள் ஒருபால் தோன்றிக் கொண்டிருக்க, வேறு சிலர், வேறு வேறு வகையான இலக்கியங்களைத் தோற்றுவிப்பாராயினர். தமிழ் மக்கள், உலக மக்கள் அனைவரோடும் உறவு கொள்ளத் தொடங்கினர். அதனால், உலகில் தலை சிறந்த மொழிகளில் விளங்கும் உயர்ந்த இலக்கியங்களை அறியும் வாய்ப்பு அவர்க்கு உண்டாயிற்று. பிறமொழிகளை அறிந்து, அவற்றின் சிறந்த இலக்கியங்களைக் கற்றுச் சுவைத்த அறிஞர்கள், அவ்வின்பத்தை ஏனைத் தமிழரும் அறிந்து மகிழவேண்டும் என விரும்பினர். அதனால், அம்மொழிகளின் சிறந்த பேரிலக்கியங்கள் சிலவற்றை, அவற்றின் சுவைகெடா வகையில் தமிழில் ஆக்கினர். பேராசிரியர் சோமசுந்தர பாரதியார் ஆக்கிய மாரிவாயிலும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் ஆக்கிய சுக்கிர நீதியும் அவ்வாறு வந்த வடமொழித் தழுவல் இலக்கியங்களாம்.

இவ்வாறு பிறமொழியில் சிறந்து விளங்கிய பேரிலக்கியங்களைத் தமிழ்ப்படுத்தும் பணி ஒருபால் நிகழ, ஆங்கிலப் புலவர்கள் ஆக்கிய, அரியபொருள் நயம் பொருந்திய அழகிய சிறு சிறு செய்யுட்களைத் தமிழாக்கும் இலக்கியப் பணியினைப் புலவர் சிலர் போற்றி மேற்கொண்டனர்.

> **ஆழ்கடலின்கீழ் எவர்க்கும் அறிய முடியாமல்**
> **அளவிறந்த ஒளிமணிகள் அமிழ்ந்துறையும் அம்மா!**
> **பாழ்நிலத்தில் வீணாகப் பகல்இரவும் பூத்துப்**
> **பலகோடிப் பனிமலர்கள் பரிமளிக்கும் அம்மா!"**

"கடல்சூழ்ந்த உலகுபுகழ் காவியம் செய்யாமல்
கண்மூடும் கம்பருக்கோர் கணக்கில்லை அம்மா!
இடமகன்ற போர்முனைதான் ஈதென்னக் காணுது
இறக்கின்ற வில்விசயர் எத்தனைபேர் அம்மா!"

"தக்க திறன் இருந்தும்—நல்ல
தருணம் வாய்த்திலதேல்
மிக்க புகழ்எய்தி—மக்கள்
மேன்மை அடையாரம்மா!"

இவை க்ரே (Gray) என்ற ஆங்கிலப் புலவர் ஆக்கிய கையறு நிலைச் செய்யுட்களைத் தமிழாக்கிய கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் செய்யுட்கள்.

பழந்தமிழ் இலக்கியங்கள், தமிழகத்தின் இயற்கை இன்பங்களைத் தாம் கூறும் அகப் பொருள், புறப்பொருட் சிறப்புக்களைக் கூறுவதற்கு இடையிடையே எடுத்துக் காட்டிச் சென்றன. பின்னர் வந்த புராண இலக்கியங்கள், நாட்டுச் சிறப்பு என்ற தனித் தலைப்பிட்டு, அவ்வியற்கையின் இறும்பூதுகளை இனிது எடுத்துக் காட்டிப் பாராட்டி மகிழ்ந்தன. அவ்விலக்கியங்களில் இயற்கையின் எழிலோவியங்களைக் கண்டு மகிழ்ந்த தற்காலத் தமிழ்ப் புலவர்கள், ஆங்கிலத்தில், கடல், காடு, மலர், மாலை, அருவி, ஆறு, மயில், மான் என்பன குறித்துச் சிறு சிறு பாடல்கள் புனைந்து பாராட்டி மகிழ்வதையும் கண்டனர். அதனால், தாம் கண்ட தமிழ் நாட்டு இயற்கைக் காட்சிகளை, அவ்வாங்கிலப் புலவர்களின் வழியிற் சென்று, சிறு சிறு செய்யுட்களால் பாடி மகிழ்ந்து, தமிழிலக்கியச் செல்

வங்களை வளர்த்தனர். வெண்ணிலா குறித்துப் புலவர் இருவர் பாடிய பாக்களைக் கண்டு மகிழ்க !

" மீனினம் ஓடிப் பறக்குதம்மா !—ஊடே
வெள்ளி ஓடம் ஒன்று செல்லுதம்மா!
வானும் கடலாக மாறுதம்மா !—இந்த
மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா !"

" நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்
கோலமுழுதும் காட்டிவிட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ ? வானச்
சோலையிலே பூத்த தனிப் பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ ! அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி, கடலில் மூழ்கிக்
கனல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்போ !"

மழலை மொழிமாறா இளம் சிறுவர்கட்கு மனம் மகிழவும், மனம் திருந்தவும் வேண்டிச் சிறுகதை கூறும் வழக்கம் மிகப் பழைய காலந்தொட்டே வருவதொன்றும். அவ்வாறு கதை கூறவந்த தமிழ்ப் புலவர்கள், உரைநடையினும், இசையே இளஞ்சிறார் உள்ளத்தில், இறவாது இருந்து பயன்தரும் என உணர்ந்து, பஞ்ச தந்திரக் கதைகள் முதலாயினவற்றைச் சிறு சிறு பாக்களிற் பாடித் தமிழிலக்கிய வளர்ச்சிக்கு வழித்துணை புரிந்தனர்.

# 7. நாடக இலக்கியங்கள்

இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற அம் முப்பெரும் பிரிவினைத் தமிழ், பன்னெடுங் காலத்திற்கு முன்னரே பெற்றுவிட்டது. மக்கள் பண்பாட்டினை வளர்ப் பதே இலக்கிய ஆசிரியர்களின் குறிக்கோளாம் என்பதை முன்னரே கூறினோம். உயரிய இலக்கியங்களைக் கற்கும் தகுதிப் பாட்டினை, உலகில் உள்ளார் அனைவரும் பெற்று விட்டனரல்லர் ; கற்றோர் சிலராகவும், கல்லாதார் பலராகவும் இயல்வதே இவ்வுலகியல். அக்கல்லாத பலரைப் பண் பாடுடைய பெரியராக்க, இயல் தமிழ் இலக்கியங்களால் இயலாது என்பதை அறிந்த இலக்கியப் பேராசிரியர்கள், அப்பயனைத் தரவல்ல துணையாகத் தேடிப் பெற்றதே நாடக இலக்கியம். கற்கும் வாய்ப்பு வாய்க்கப் பெறா தாரை நன்னெறிக்கண் செலுத்த மேற்கொண்ட நாடகத் தமிழ், அக்கல்லா மக்கள் கண்டும் கேட்டும் மகிழும் காட்சி களையும், இலக்கிய நயம் செறிந்த உரையாடல்களையும், இனிய ஓசை அமைந்த இசைப்பாடல்களையும் பெற்றுப் பிறந்தது. இயல் தமிழும் இசைத் தமிழும் கூடப் பிறந்த நாடகத் தமிழ், அவற்றிற்குரிய கேள்வி இன்பத்தோடு, அவற்றிற்கில்லாக் காட்சி இன்பத்தையும் பெற்று, அவை இரண்டினும் சிறந்து விளங்கிற்று,

நாடக இலக்கியம், தமிழில் சங்க காலத்திற்கு முன்னரே நன்னிலை பெற்றுவிட்டது; சங்க காலப் புலவர்கள், நாடகம் பல கண்டதன் பயனாய், தாம் காணும் இயற்கைப் பொருள்களிலும் நாடக நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்துள்ளனர்; மணிமேகலை ஆசிரியர், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், தும்பி குழல் ஊத, வண்டு யாழ் இசைக்க, குயில் பாட, மந்தி காண மயில் ஆடும் காட்சியை இருமுறை எடுத்துக்காட்டியுள்ளார் :

" குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில் நுழைபு அறியாக்குயில் நுழைபொதும்பர்
மயில் ஆடுஅரங்கில் மந்தி காண்பனகாண் '

" கொம்பர்த் தும்பி குழல்இசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும். "

மேலும், இப்போதுள்ள நாடக இலக்கியங்களுள் தலை சிறந்ததாய சிலப்பதிகாரம், நாடகம், நாடக அரங்கு, நாடக ஆசிரியன், இசைக் கருவிகள், இசையாசிரியன் ஆகியோரின் இலக்கணங்களை இனிது எடுத்து இயம்புகிறது. அச் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், தாம் எழுதிய உரையில், பரதம், பஞ்ச பாரதீயம், பரதசேனாபதீயம், சயந்தம், கூத்து நூல், மதிவாணன் நாடக நூல் போலும் பல நாடக நூல்களைக் குறிப்பிட்டுள்ளார். இதனால், இவ்விலக்கண நூல்கள் தோன்றுவதற்கு முன்னரே, நாடக இலக்கியங்கள்

எண்ணற்றன தோன்றியிருத்தல் வேண்டும் என்பது உறுதியாம்.

வேத்தியல், பொதுவியல் எனும் இருவகைப்பட்டு, முறையே அரசர்களாலும், மக்களாலும் மதித்து வளர்க்கப் பெற்ற சங்க காலத் தமிழ் நாடகங்கள், பிற்காலச் சோழர் காலத்தே, கோயில் நாடகம், அரண்மனை நாடகம், மக்கள் மன்றத்து நாடகம் என மூன்றாய் வகைப்பட்டு வளர்ந்து வாழ்ந்தனவேனும், அந்நாடகம் பற்றிய இலக்கியங்கள் மட்டும் தோன்றாவாயின.

சங்க காலத் தமிழர்களால் பெரிதும் பேணி வளர்க்கப் பெற்ற நாடக இலக்கியங்கள், பிற்காலத்தே பெரிதும் புறக்கணிக்கப் பெற்றன. அப்புறக்கணிப்பிற்குச் சமண, பௌத்த சமயங்களே காரணமாம். துறவறமே தூய அறமாம் எனக் கருதும் அவர்கள், நாடகம், அந்நெறிக்குத் தடையாய், இன்ப உணர்வினை ஊட்டுகிறது என்ற எண்ணத்தால், நாடகங்களையும், நாடக இலக்கியங்களையும் வெறுக்கலாயினர். அதனால், சங்க காலத்திற்குப் பிறகு நாடக இலக்கியங்களும் மெல்ல மெல்ல வழக்கற்று மறைந்து விட்டன. சமணர், பௌத்தர்களின் தலையீட்டிற்கும் தப்பிப் பிழைத்த பழந்தமிழ் நாடக இலக்கியம் சிலப்பதிகாரம் ஒன்றே; அதில் வரும் வேட்டுவ வரி, கானல் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வாழ்த்துக் கிாதை முதலாயின சிறந்த நாடகப் பகுதிகளாதல் காண்க.

சமணரும் பௌத்தரும் நாடகத்தை வெறுத்து ஒதுக்கி வந்தமையாலும், சைவரும் வைஷ்ணவரும், தங்கள் தங்கள் சமய இலக்கியங்களை வளர்ப்பதிலேயே கருத்துடையராய் இருந்து விட்டமையாலும் சங்க காலத்திற்குப் பிறகு நாடக இலக்கியம் தோன்ருதாயிற்று. பதினேழு, பதினெட்டாம் நூற்ருண்டுகளில் தோன்றிய மீனுட்சியம்மை குறம், குற்ருலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு போலும் குறவஞ்சிகளும், பள்ளுகளும் ஒரு வகையில் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்படினும், அவை, தொடர்ந்த நிகழ்ச்சிகளைக் கூறும் உண்மையான நாடக இலக்கியங்களாகா.

ஆங்கிலத் தொடர்புற்று, ஆங்கில நாடகப் பேராசிரியராகிய ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கற்கத் தொடங்கிய தன் பயனுய், சிறந்த நாடக இலக்கியங்கள் மீண்டும் தோன்றத் தொடங்கின. நாடகம் என்ற பெயரால், பலர், பல நூல்களை எழுதியுள்ளனரேனும், அவையெல்லாம் இலக்கிய நயம் குறியாது, நாடகப் பயன் ஒன்றே கருதி எழுந்தன ஆதலின், இலக்கியங்களாக மதிக்கப் பெருவாயின. சோழன் செங்கணுன்மீது களவழி நாற்பது பாடிச் சேரமான் கணைக்கால் இரும்பொறையைச் சிறைவீடு செய்த பொய்கையார் செயலை நாடகப் பொருளாகக் கொண்டு, திருவாளர், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ஆக்கிய மானவிஜயமும், வரலாற்றுப் பின்னணி கொண்டு, பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் ஆக்கிய மனேன்மணீயமும் நாடக உறுப்புக்களோடு, இலக்கியச் சுவையும் தோன்ற விளங்கும் சிறந்த நாடக இலக்கியங்களாம்.

படிப்பார்க்குப் பேரின்பம் ஊட்டும் வகையில், இலக்கியச் சுவை சொட்டச் சொட்ட எழுந்த சிறந்த நாடக இலக்கியம், மனோன்மணீய நாடகம் ஒன்றே எனத் துணிந்து கூறலாம்.

"வளையும்வேய் நிமிரும் : வளையா நெடுமரம்
கிளையுடன் கெடுமே கிளர்காற்ற தனில் ;
முளையும் ஓர் மரமோ ? முனிவ ! புல்லினம்
களைகுவர் : களைகிலர் காழ்பெரும்தருக்கள் !
சேணுயர் தேக்கு திசையெறி சூறையில்
ஆணிவேருடனெழுந்து அதிர்ந்து அசைந்து இறினும்,
பேணுவர் அதனைப் பெரியோர் ! யாரே
காணுவர் காழறு நாணம்இல் நாணலை ?
ஓர் உயிர்ப்பேனும் உண்டேல், அடிகாள் !
போரிடைப் போக்குவன் ; புகழ் எனக்கு அதுவே."

இது போலும் இனிப்பூட்டும் பகுதிகள் பல கொண்டு, படிப்பார்க்குப் பழந்தமிழ் இலக்கியப் பண்பாட்டினை நினைப்பூட்டும் பண்பு வாய்ந்த இந்நூல் நாடக இலக்கியங்களுள் மட்டும் சிறந்ததன்று ; இக்காலத்தே தோன்றிய ஏனைய இயற்றமிழ் இலக்கியங்களிலும் சிறந்தது அதுவே.

# 8. உரை நடை இலக்கியங்கள்

தமிழில் செய்யுள் இலக்கியங்கள் வளர்ந்ததுள்ள அளவு உரை நடை இலக்கியம் வளரவில்லை. ஒரு புலவன் தன் உள்ளக் கருத்திற்கும் உருவளித்து அதைப் பிறர்க்கு உணர்த்த மேற்கொண்ட கருவியே இலக்கியம். ஆகவே ஓர் இல்க்கியம் கூறும் பொருளைக் கேட்ட ஒருவன், அதை மறவாது மேற்கொள்வானாயின் அந் நிலையில் அவ்விலக்கியம் பயன் நிறை இலக்கியம் எனப் பாராட்டப் பெறும். நல்ல இலக்கியத்தின் இயல்பு இ∴தாகவே, இலக்கிய ஆசிரியர்கள், தாம் கூறும் பொருள் கேட்போர் உள்ளத்திற் பதிந்து, எந் நாளும் மறவாதிருத்தல் வேண்டும் என விரும்பினர். அவ்வாறு விரும்பிய அவர்கள், உரை நடையினும், செய்யுளே, மக்கள் மனத்தில், மறவாது நெடிது நிற்கும் என்பதை உணர்ந்து, உரை நடைகளை மேற் கொள்ளாது, செய்யுள்களை மேற்கொண்டனர். இலக்கியப் பொருள் களே யல்லாமல், மருத்துவம், சோதிடம் முதலாம் நூற் பொருள்களும் செய்யுள் வடிவில் எழுந்தமைக்கும் இதுவே காரணமாம். இந்தக் காரணத்தால், உரை நடை இலக்கியத்தை மக்கள் விரும்பி மேற் கொண்டனரல்லர்.

மேலும், பழந்தமிழ்க் காலம் அச்சுப் பொறிகள் இல்லாத காலம். அறிய விரும்பும் பொருளை, அதை

அறிவிக்கும் நூல்களைத் தாம் விரும்பிய போதே, விரும்பிய இடத்திலேயே பெற்றுப் படித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பற்ற காலம் அது. அக்காலம், ஓலைச் சுவடியில் எழுதிக் காண எத்தனையோ நாட்களை வீணாக்கல் வேண்டும். மேலும் அச்செயல், அத்துணை எளிதோ, எல்லாராலும் இயலக் கூடியதோ அன்று ; அதனால், அக்கால மக்கள், எப் பொருளையும் முன்னோர் மொழிய, அவர் வழி வந்தோர் கேட்டுத் தெளியும் கேள்விவழி முறைகளையே மேற்கொண்டிருந்தனர். அம்முறைக்குச் சொற் பெருக்கம் மிக்க உரை நடையினும், சொற் சுருக்கம் வாய்ந்த செய்யுட்களே சிறந்தனவாம். ஆதலின், அக்கால மக்கள், உரை நடை இலக்கியத்தில் உள்ளம் செலுத்தாராயினர்.

இவ்வாறு கூறுவதால், அக்காலத்தில் உரை நடை இலக்கியங்களே தோன்றவில்லை என்பது கருத்தன்று. செய்யுள் இலக்கியங்களோடொப்ப, உரை நடை இலக்கியங்களும் மதிக்கத்தக்க அளவு வளர்ந்தே யிருந்தன. தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களின் பண்பாட்டு நெறிக்கும் இலக்கணம் வகுத்த ஆசிரியர் தொல்காப்பியனார், உரை நடை, பாட்டிடை வைத்த குறிப்பு, பாவின்றெழுந்த கிளவி, பொருளொடு புணராப் பொய்மொழி, பொருளொடு புணர்ந்த நகை மொழி என நான்கு வகைப்படும் எனக் கூறி இலக்கணம் வகுத்துள்ளார் என்றால், அக்கால உரை நடை இலக்கியங்கள், எவ்வளவு பெருக வழங்கியிருத்தல் வேண்டும் என்பதை உய்த்துணர்ந்து கொள்வோமாக. ஆகவே, தொல்காப்பியர் காலத்திற்கு

முன்னரே உரை நடை இலக்கியங்கள் சிறந்து விளங்கின. ஆனால், அவையெல்லாம் இப்போது அழிந்து விட்டன என்றே கொள்ளுதல் வேண்டும். தம் விருப்பத்திற்குள்ளாகிய செய்யுள் இலக்கியங்களிலேயே எண்ணற்றனவற்றை இழந்து விட்ட தமிழர், செய்யுள் இலக்கியங்கள் போல், தம் பாராட்டுதலைப் பெரும் அளவில் பெறாத உரை நடை இலக்கியங்களை இழந்து விட்டதில் வியப்பொன்றும் இல்லை என்க.

நமக்குக் கிடைத்துள்ள உரை நடை இலக்கியங்களுள் நனி மிகப் பழமை வாய்ந்தன, இறையனார் களவியல் உரையும், உரை நடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என வழங்கப் பெறும் சிலப்பதிகாரத்தில் இடையிடையே வரும் உரைப் பாட்டு நடைகளுமேயாம்; அவை, இக்கால உரை நடைகள் போலாது, செய்யுள்களைப் போன்றே இன்னோசை அமைய ஆக்கப் பெற்றுள்ளன; இதோ அவற்றுள் சில வரிகள் :

"அரசன், 'இனி நாடு நாடாயிற்றாகலின், நூல் வல்லாரைக் கொணர்க' என்று எல்லாப் பக்கமும் ஆட் போக்க, எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து, 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப்பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, 'என்னை! எழுத்தும் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே? பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம்' எனச்சொல்லா நிற்ப, மதுரை ஆலவாயில் அழல் நிறக் கடவுள் சிந்திப்பான், 'என்னை பாவம்!

அரசர்க்குக் கவற்சி பெரிதாயிற்று ; அது தானும் ஞானத்தினுடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து மூன்று செப்பிதழகத் தெழுதி பீடத்தின் கீழிட்டான்.''

''குமரியொடு வட விமயத் தொருமொழி வைத்துலகாண்ட சேரலாதற்குத் திகழொளி ஞாயிற்றுச் சோழன்மகளீன்ற மைந்தன், கொங்கர்செங்களம் வேட்டுக் கங்கைப் பேர்யாற்றுக் கரைபோகிய செங்குட்டுவன் சினஞ் செருக்கி வஞ்சியுள் வந்திருந்த காலை.''

இவற்றை அடுத்து எழுந்த உரை நடை இலக்கியங்கள், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போலும் புலவர் பெருமக்கள், இலக்கண, இலக்கிய நூல்களுக்கு எழுதிய உரைகளேயாம். அவையும், இலக்கணச் சூத்திரங்கள், இலக்கியச் செய்யுட்கள் என்ற இவற்றின் பொருள்களை விரித்துரைப்பனவேயல்லால், தனியொரு நிகழ்ச்சியையோ, அல்லது நீண்டதொரு வரலாற்றையோ வகுத்துரைக்க வந்தன அல்ல. தமிழ்த் தொண்டு மேற்கொண்ட சில சைவ மடத் தலைவர்கள், பிற்காலத்தே வெளியிட்ட உரை நடைகளும், இலக்கணப் பொருள் குறித்து எழுந்த கண்டனங்களாகவே அமைந்து, மேற்கூறிய வகையினையே சேர்ந்தனவாயின.

கி. பி. பதினேழாம் நூற்றுண்டில் புது வகையான உரை நடை இலக்கியங்கள் தோன்றலாயின. இலக்கணத்திற்கு உரை வகுப்பது, அப்பொருள் குறித்த மறுப்புரை வழங்குவது என்ற நிலை மாறிற்று; நாட்டில் இலக்கிய அறிவு குன்றத் தொடங்கிற்று; வகை வகையாக வளர்ந்த

வாழ்க்கையின் தேவைகளைத் தேடிப் பெறுவதிலேயே மக்கள் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிடலாயினர்; சிறந்த இலக்கியங்களை காணவும் அவர்க்குக் காலம் கிடைக்கவில்லை. இந்நிலையால், செய்யுட்களைச் சொல் பிரித்து, பொருள் அறியும் ஆற்றலை இழக்கத் தொடங்கினர்! ஆயினும், அவை கூறும் பொருளை அறிய வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் மங்காது இருந்தது; இந்நிலை கண்ட அறிஞர் சிலர், அப்பழந் தமிழ் இலக்கியங்களும், அவர் காலத்திற்கு முன் தோன்றிய புராணங்களும் கூறும் பொருளை உரை நடையில் இட்டு வழங்கினர்; இந்நெறியாலும் உரை நடை இலக்கியங்கள் ஓரளவு வளர்ந்தன; இன்னும் வளர்கின்றன.

ஆங்கிலேய மக்களோடு தொடர்பு கொண்டு, அவர் மொழியை அறிந்ததன் பயனாய்த் தமிழ் உரை நடை இலக்கியங்கள், புதிய நெறியில் போற்றத்தகும் முறையில் வளரத் தொடங்கியுள்ளன. ஆங்கில இலக்கியங்களையும், அவ்விலக்கியங்கள் குறித்து, அந்நாட்டுப் பேரறிஞர்கள் எழுதியளிக்கும் பலதிற ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் கற்ற தமிழ்ப் பேரறிஞர்களும், தங்கள் பழந் தமிழ் இலக்கியங்களையும் அம்முறையே கற்று, அவற்றைப் பல வகையான் ஆராய்ந்து சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதத் தொடங்கியுள்ளனர். அவ்வகையால் எழுதப் பெறும் உரை நடைகள் இலக்கியப் பண்பு வாய்ந்து சிறந்து விளங்குகின்றன.

மக்களை மக்கட் பண்புடையராக்குதல் வேண்டும்; அதற்கு அம்மக்களிடையே காணப்பெறும் குறைபாடுகளை எடுத்துக் காட்டி ஒழிப்பதே வழியாம் எனும் கருத்

தோடு, உணர்ச்சியூட்டும் கதை எழுதும் வழக்கம் இக் காலே, தலைதூக்கி நிற்கிறது. தமிழ் நாட்டில் வெளி யாகும் கிழமை இதழ்களும், திங்கள் இதழ்களும், தனி நூல்கள் பலவும் இப் பணியையே தலைமேற் கொண்டுள்ளன. அதனுல் தமிழ் உரை நடை பெரும் அளவு வளர்ந்துளது என்பது உண்மையேயென்ருலும், அவற்றுள் இலக்கிய மரபு கெடாவாறு, தமிழ் மொழிப் பண்பு தழுவ எழுதப் பெற்ற நூல்கள் ஒரு சிலவற்றையேனும் காணல் அரிதினும் அரிதாக உளது! இலக்கிய அறிவு அற்ற வரைப் பலராகவும், அது பெற்றவரைச் சிலராகவும் கொண்டே தமிழ் நாடு இன்றும் காட்சி அளிக்கிறது! ஆகவே, அந்நாட்டில் பிறந்து, அந்நாட்டு மக்கள் மனம் மகிழும் வண்ணம் கதை எழுதத் தொடங்கியவர்கள்! மிகப் பலராய அப் பண்பறியா மக்களின், உணர்ச்சி களுக்கும், உரைகளுக்குமே, தம் கதைகளில் முதலிடம் தந்துவிட்டனர். அதனுல், அவர் எழுதிய உரை நடை கள் இலக்கிய மரபினை இழந்துவிட்டன. எழுதும் இலக்கியம், மக்கள் பண்பாட்டை வளர்க்கத் துணை புரிவதாதல் வேண்டும்; அம்மக்களின் பண்பாட்டினை எடுத்துக் கூறுவனவாதல் கூடாது. இலக்கியம், மக் களுக்கு உண்மை மொழியை, உயர்ந்த மொழியை ஊட்டுதல் வேண்டும்; அம்மக்கள் வழங்கும் மொழியைத் தான் மேற்கொண்டு விடுதல் கூடாது. இந்த மரபினைப் புலவர் பெருமக்கள் பொன்னேபோல் போற்றி வந்தமையாலன்ருே, தமிழ்மொழி, ஆரியர் மொழிக்கும், அவரை அடுத்து வந்த மகமதியர் மொழிக்கும் ஆங்கிலேயர் மொழிக்கும், இன்று வந்துபுகும் இந்தி

மொழிக்கும் அடிபணிந்து அழிந்து போகாது, இன்றும் உரங் கொண்டு, உயர்ந்து விளங்குகிறது. சிறு கதையும், தொடர் கதையும் எழுதும் ஆசிரியர்கள் அம்மொழி மரபு அறிந்து, தமிழின் உரை நடைச் செல்வத்தை வளர்ப்பார்களாக! அத்துறையில் புகுந்து பணியாற்றும் தமிழ்ப் பேரறிஞர்கள், அவர்கள் வழியில் தாமும் சென்று தவறிவிடாது, அவரைத் தம் நெறிக்கு—தமிழ் நெறிக்கு அழைத்துத் துணை புரிவார்களாக! நிற்க.

தமிழ் நாட்டில், தமிழ் இலக்கிய உணர்வும், தனித் தமிழ் ஆர்வமும், என்றும் இல்லா அளவு, இன்று வளர்ந்துள்ளன. அதன் விளைவாய்ச் செய்யுள்களும், நாடகங்களும், உரை நடைகளும் செந்தமிழ் நடையில் தோன்றத் தொடங்கியுள்ளன.

"தாய் எழில்தமிழை, என்றன் தமிழரின் கவிதைதன்னை
ஆயிரம் மொழியில்காண இப்புவி அவாவிற்றுஎன்ற
தோயுறும் மதுவின்ஆறு தொடர்ந்து என்றன்செவியில் வந்து
பாயும்நாள் எந்தநாளோ? ஆரிதைப் பகர்வார் இங்கே?"

என்ற புலவரின் வேட்கை நிறைவேறத் தொடங்கி விட்டது. பல மொழி இலக்கியங்கள், தமிழாக்கப் பட்டுத் தமிழிலக்கியம் ஒருபால் வளரத் தொடங்கி விட்டது; தலை சிறந்த தமிழ் நூல்கள் பல்வேறு மொழிகளில் எழுதப் பெற்று, உலக மக்களின் பாராட்டு தலைப் பெறத் தொடங்கி விட்டன ஒருபால். இன்று தோன்றிய இவ்விலக்கிய ஆர்வம் இறவாது வளர்க! வாழ்க அவ்விலக்கிய வளர்ச்சியாளர்கள்!